


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:271 | 16-04-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

16.04.2026 சித்திரை 3
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.03

திதி:
இன்று இரவு 7.31 வரை
சதுர்த்தசி பின்பு அமாவாசை.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 1.00 வரை
உத்திரட்டாதி பின்பு ரேவதி.

யோகம் :
இன்று காலை 9.31 வரை
ஐந்திரம் பின்பு வைதிருதி.

கரணம்
இன்று காலை 8.13 வரை
பத்திரை பின்பு இரவு
7.31 வரை சகுனி பின்பு
சதுஷ்பாதம்

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும்
சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று பிற்பகல் 1.00 வரை
மகம் பின்பு பூரம்.

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30

இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.

எமகண்டம்
காலை 6.00 – 7.30.

குளிகை
காலை 9.00 – 10.30.

இன்று அமாவாசை நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## மக்களவை தொகுதிகளை 850 ஆக உயர்த்தும் சட்டதிருத்த மசோதா தாக்கல்

# இன்று நாடாளுமன்றம் கூடுகிறது

**புதுடெல்லி, ஏப்.16:**

மகளிருக்கு 280 இடங்களை ஒதுக்கும் வகையில் மொத்த நாடாளுமன்ற மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை 850 ஆக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கு வழிவகுக்கும் வரைவு மசோதா தாக்களுக்கு மத்திய அரசு கடந்த 8-ம் தேதி ஒப்புதல் வழங்கியது.

இதற்கிடையே இந்த மசோதாவை அறிமுகம் செய்வதற்காக நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் 3 நாட்கள் நடைபெறும் என்றும் மத்திய அரசு ஏற்கனவே அறிவித்து இருந்தது. அதன்படி நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் இன்று தொடங்கி 18-ம் தேதி வரை நடக்கிறது.

இந்த சிறப்பு கூட்டத்துக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. சட்டசபை தேர்தல்களில் வெற்றி பெறவே மகளிர் இடதுக்கீடு சட்டம் மற்றும் தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதாக்களை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டத்தை கூட்ட உள்ளதாக காங்கிரஸ் குற்றம்சாட்டி இருந்தது.

மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை 543-ல் இருந்து 850 ஆக உயர்த்தும்



அரசமைப்பு சட்டதிருத்த மசோதா நாடளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது. இந்த வரைவு மசோதா மக்களவை உறுப்பினர்களின் பார்வைக்கு நேற்று வெளியிடப்பட்டது.

மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் 106-வது அரசமைப்பு சட்ட திருத்தம் 2023 (நாரி சக்தி வந்தன் அதினியம்) இந்த கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

தற்போது 16-வது மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைமுறையின் முதல் கட்டமாக வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணி கடந்த 1-ம் தேதி தொடங்கியது. செப்டம்பர் 30-ம் தேதி வரை பணி நடைபெறும்.

2-ம் கட்டமாக 2027-ம் ஆண்டு பிப்ரவரி முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற உள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பும் சேர்த்து நடைபெற இருக்கிறது. இந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டு தரவுகள் வெளியாக காலதாமதம் ஆனால் மகளிர் இடதுக்கீடு சட்டத்தை 2029-ல் அமல்படுத்துவது கடினம்.

எனவே 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவுகளின் அடிப்படையில் மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இந்த சட்டத்தை அமல்படுத்தும் நோக்கில் அரசமைப்பு சட்டப்பிரிவு 81-ல் திருத்தம் மேற்கொள்ள மத்திய அரசு முடிவு செய்து உள்ளது.

இந்த சட்டத்திருத்த மசோதாவின்படி மாநிலங்களில் உள்ள மக்களவை தொகுதிகளில் இருது அதிகபட்சமாக 815 உறுப்பினர்களும், யூனியன் பிரதேசங்களில் இருந்து 35 உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்வதற்கான தொகுதி மறுசீரமைப்பு மசோதா மற்றும் சட்டபேரவைகளை கொண்ட டெல்லி, ஜம்மு காஷ்மீர், புதுச்சேரி ஆகிய 3 யூனியன் பிரதேசங்களில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வழிவகை செய்யும் மசோதாவும் அறிமுகமாகிறது.

மக்களவை, மாநில சட்டசபைகளில் பெண்களுக்கான தொகுதிகள் சுழற்றி முறையில் ஒதுக்கீடு செய்யப்படும் என்று தெரியவந்து உள்ளது.

அனைத்து மாநிலங்களிலும் மக்களவை தொகுதி எண்ணிக்கையை 50 சதவீதம் அதிகரிக்க மத்திய அரசு முன்மொழியக்கூடும் என்று பரவலாக யூகிக்கப்பட்டது. ஆனால் இது குறித்து மசோதாவில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

### தொகுதி மறுவரையறைக்கு இண்டியா கூட்டணி எதிர்ப்பு

எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் ஒரே நோக்கத்துடனேயே அவர்கள் இவ்வாறு செய்துள்ளனர். தொகுதி மறுவரையறையில் அவர்கள் (பாஜக) தந்திரம் செய்கிறார்கள். எனவே, அனைத்துக் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டை எடுத்து நாடாளுமன்றத்தில் ஒன்றுபட்டுப் போராடும். நாங்கள் இந்த மசோதாவை எதிர்ப்போம், ஆனால் நாங்கள் மகளிர் இட ஒதுக்கீட்டுக்கு எதிரானவர்கள் அல்ல" என்று அவர் கூறினார்.

முன்னதாக, ஏப்ரல் 14 அன்று மத்திய அரசு மூன்று மசோதாக்களின் நகல்களை விநியோகித்தது:

அவை: அரசியலமைப்பு (131-வது திருத்தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா, 2026 மற்றும் யூனியன் பிரதேசச் சட்டங்கள் (திருத்தம்) மசோதா 2026 ஆகும். மக்களவை மற்றும் மாநிலச் சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் வகையில், 2023-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பெண்கள் இடஒதுக்கீடு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவே ஏப்ரல் 16 முதல் 18 வரை நாடாளுமன்ற சிறப்பு அமர்வு கூட்டப்பட்டுள்ளது.

வியாழக்கிழமையன்று கொண்டுவரப்படும் இந்த மூன்று மசோதாக்கள் வாயிலாக, பெண்கள் இடஒதுக்கீட்டை செயல்படுத்துவதே தங்கள் நோக்கம் என்று மத்திய அரசு குறிப்பிட்டாலும், இந்த மாற்றங்கள் மக்களவையின் பலத்தை 850-ஆக உயர்த்துவதுடன் மட்டுமல்லாமல், நாடாளுமன்றத்தின் அரசியல் சமன்பாடுகள், மக்கள் தொகை அடிப்படையில் அமையும் பிரதிநிதித்துவம் மற்றும் மத்திய - மாநில உறவுகள் ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவையாக அமையும்.

இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ், திமுக, திரிணமூல் காங்கிரஸ், ஜேஎம்எம், ஆர்ஜேடி, சிவசேனா (யுபிடி), என்சிபி (எஸ்பி), ஆம் ஆத்மி கட்சி, ஜேகேஎன்சி, சிபிஐ(எம்), ஐயுஎம்எல், சிபிஐ, ஆர்எஸ்பி, கேரள காங்கிரஸ், விசிக உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

சமாஜ்வாதி கட்சியும் காணொலி காட்சி மூலம் தனது ஆதரவைத் தெரிவித்தது.

## மாவட்டங்களில் வெப்பநிலை 5 டிகிரி வரை உயர வாய்ப்பு

**சென்னை, ஏப்.16:**

தமிழக உள் மாவட்டங்களில் ஏப்.19-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்பு உள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு மத்தியப் பிரதேசம் முதல் மகாராஷ்டிரா, வடக்கு உள் கர்நாடகா, தமிழகம் வழியாக மன்னார் வளைகுடா வரை சுமார் 900 மீட்டர் உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று (ஏப்.16) முதல் 21-ம் தேதி வரை மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். தமிழகம், புதுச்சேரியின் மற்ற பகுதிகளில் வறண்ட வானிலை நிலவும்.

தமிழக உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இன்று முதல் 19-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கும்.

## நாகர்கோவிலில் பிரதமர் மோடி வாகன பேரணி - மக்கள் உற்சாக வரவேற்பு

**கன்னியாகுமரி, ஏப்.16:**

நாகர்கோவிலில் தமிழக முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணாதுரையின் சிலைக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப். 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதனால், திமுக, அதிமுக, நாதக மற்றும் தவெக ஆகிய கட்சிகள் மக்களிடையே தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் போட்டியிடும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி இன்று (ஏப். 15) கன்னியாகுமரி மாவட்டத்தின் நாகர்கோவிலில் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில், கன்னியாகுமரி மாவட்ட தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, பிரதமர் நரேந்திர மோடி நேற்று



நாகர்கோவிலில் பிரம்மாண்ட வாகன பேரணி நடத்தி வருகிறார். முன்னதாக டெல்லியில் இருந்து பிரதமர் மோடி தனி விமானம் மூலம் திருவனந்தபுரம் வந்தடைந்தார். பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் பிரதமர் மோடி நாகர்கோவில் வந்து சேர்ந்தார்.

தொடர்ந்து, வேப்பமூடு பகுதியில் இருந்து வடசேரி சாலை வரை திறந்தவெளி வாகனத்தில் சுமார் 1.5 கி.மீ. தூரத்திற்கு பிரதமர் மோடி வாகன பேரணி மேற்கொண்டு வருகிறார். இந்த வாகன பேரணியில் பிரதமர் மோடியுடன் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் மாநில பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, பா.ஜ.க. மூத்த தலைவர் பொன் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர்பங்கேற்றுள்ளனர். வழிநெடுகிலும் பிரதமர் மோடிக்கு தேசிய ஜனநாயக கூட்டணி தொண்டர்களும், பொதுமக்களும் மலர்தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பூக்களைத் தூவி வரவேற்பளித்த மக்களைப் பார்த்து பிரமரும் பூரிப்பில் மகிழ்ந்துள்ளார்.

சாலை வலம் செல்லும் பிரதமர் மோடி வாகனத்தில் அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் நயினார் நகேந்திரன், பொன். ராதாகிருஷ்ணன், அண்ணாமலை உள்ளிட்டோர்பங்கேற்றுள்ளனர்.

## சிபிஎஸ்இ 10ஆம் வகுப்புத் தேர்வு முடிவுகள் வெளியீடு!

**புதுடெல்லி, ஏப்.16:**

நாடு முழுவதும் சிபிஎஸ்இ பாடத்திட்டத்தின் கீழ் படித்து 10ஆம் வகுப்புத் தேர்வெழுதிய மாணவர்களுக்கான முடிவுகள் வெளியாகியுள்ளன. நாடு முழுவதும் தேர்வெழுதிய 93.7 சதவிகித மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். 1.47 லட்சம் மாணவர்கள் இரண்டாம் கட்ட தேர்வை எழுதவேண்டிய நிலையில் உள்ளனர். சிபிஎஸ்இ நிர்வாகம், நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் 10ஆம் வகுப்புக்கான தேர்வு முடிவுகளை இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.




## ரூ. 8,000 கூப்பன் மாதிரிகளை வழங்கினால் நடவடிக்கை: தேர்தல் ஆணையம்

**சென்னை, ஏப்.16:**

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, திமுக பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி தேர்தல் அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டது. அதில், குறிப்பாக பெண்களைக் கவரும் வகையில் வீட்டுக்குத் தேவையான ரூ. 8,000 மதிப்பிலான கூப்பன் வழங்கும் திட்டத்துக்கு திமுக முக்கியத்துவம் அளித்துள்ளது. தற்போது, இந்தத் திட்டத்தை முன்னிறுத்தி திமுக வாக்குகளைச் சேகரித்து வருகிறது.

வீடுகள்தோறும் வாக்கு சேகரிப்பதற்காக கட்சியினர்




செல்லும்போது, ரூ. 8,000 மதிப்பிலான இல்லத்தரசி மாதிரி கூப்பன்கள் வாக்காளார்களிடம் வழங்கப்படுகின்றன.

வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்கும்போது பெண்களிடம் ரூ. 8,000 மதிப்புள்ள இல்லத்தரசி கூப்பன் குறித்து விளக்குவதற்காக திமுக சார்பில் கூப்பன் புத்தகம் அச்சடிக்கப்பட்டு ஒவ்வொரு தொகுதிக்கும் அனுப்பப்பட்டுள்ளது. காசோலை புத்தகம் அளவில் மாதிரி கூப்பன் புத்தகம் அச்சடிக்கப்பட்டு, வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

திமுக வேட்பாளர்கள் ரூ. 8000 கூப்பன் மாதிரிகளை மக்களிடம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்திருந்தது.

இந்த நிலையில், 8,000 மதிப்புள்ள இல்லத்தரசி கூப்பன்களை மக்களுக்கு விநியோகிக்கக் கூடாது என்றும் கூப்பன் மாதிரிகளை மக்களுக்கு வழங்கினால் பறிமுதல் செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.



# திருக்குறள் குறள்-591

உடையர் எனப்படுவ தூக்கமஃ தில்லார் உடைய துடையரோ மற்று



ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும், ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ.


## சிந்திக்க ஒரு நொடி



பணக்காரன் மகன்
செலவாளி
செலவாளி மகன்
கடனாளி
கடனாளி மகன்
பொறுப்பாளி
பொறுப்பாளி மகன்
பணக்காரன்
இது தான் வாழ்க்கை

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

# சித்திரை மாதம், த்ரயோதசி வராஹ ஜயந்தி!



"ஸ்ரீமதே பூவராஹாய நம: க்ருத்ஸனா வஸுந்தரா| உத்ருதா யேன பாதாளாத் வாஸார்த்தம் சர்வதேஹினாம்||"

ஒரு பிரளய காலம் முடிந்தபின் பூமி வெள்ளத்தினுள் அமிழ்ந்தது. மஹாவிஷ்ணு வராஹ அவதாரம் எடுத்து பூமியைக் காத்தார்! அவரே ஆதிவராஹர்!

ஒருசமயம், இரண்யாட்சன் என்ற அரக்கன் பூமியைப் பாய்போல சுருட்டி கடலுக்குள் தள்ளினான். பகவான் மீண்டும் வராஹ வடிவெடுத்து கர்ஜனை செய்தார்!

அந்த கர்ஜனையால் அண்டமும் அதிர்ந்தது.. நான்கு வேதங்கள் நான்கு பாதங்களாகவும்; ஸ்ம்ருதிகளும்-புராணங்களும் செவிகளாகவும்; சூர்ய -சந்திரர் இரு கண்களாகவும்; நாகராஜன் வாலாகவும்; யாகங்கள் கோரைப் பற்களாகவும்; அனைத்து மந்திரங்களும் தேக அவயங்களாகவும் கொண்டு, வராஹ வடிவெடுத்து சில நொடிகளில் பிரம்மாண்டமாக வளர்ந்து சமுத்திரத்தினுள் மூழ்கினார்! அதனால் ஸ்வாமிக்கு பூவராஹவ மூர்த்தி என்கிற திருநாமம்!

அரக்கனுடன் போரிட்டு, அவனை சம்ஹரித்து பூமிதேவியை காத்து ரக்ஷித்தார்! அரக்கனுடன் போர் புரிந்ததால் ஏற்பட்ட களைப்பு தீர ஒரு இடத்தில் இளைப்பாறினார். அப்போது அவர் தேகத்திலிருந்து வியர்வைத் துளிகள் ஆறாக ஓடி "நித்ய புஷ்கரணி" என்னும் புனித தீர்த்த குளமாகியது! ஸ்வாமி இளைப்பாறிய இடம் ஸ்ரீமுஷ்ணம் என்னும் திருத்தலம் ஆகியது!

அஸ்வத் விருக்ஷத்தையும், துளசியையும் உண்டாக்கி, தனது வியர்வை நீரின் பெருக்கைக் கொண்டு, நித்ய புஷ்கரணி என்ற புனித தீர்த்தத்தையும் ஏற்படுத்தி, பிரம்மன் முதலானோர் பூஜிக்க ஸ்ரீ பூவராகவன் என்ற திருநாமத்துடன், இந்த ஸ்வயம்யக்த க்ஷேத்திரத்தில் அருள்பாலிக்கிறார்!!

# தேர்தல் 2026 அடிப்படை வசதிகள் குறித்து, முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு



**திருவண்ணாமலை, ஏப்.16:** திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காந்திநகர் மெட்ரிகுலேஷன் பள்ளியில் தேர்தல் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு 2 வது பயிற்சி வகுப்பிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்தும், அடிப்படை வசதிகள் குறித்தும் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# பள்ளி மாணவ, மாணவிகள் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சி (ம) ஜனநாயக திருவிழா அழைப்பிதழ் வழங்கும் நிகழ்ச்சி






திருவண்ணாமலை வட்டம் மல்லவாடி ஊராட்சியில் நடைபெற்ற முறையான வாக்காளர்கள் மற்றும் தேர்தல் பங்கேற்பு குறித்து பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க.தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் 100% வாக்களிப்பதில் அவசியம் குறித்து வாசகங்கள் அடங்கிய ஜனநாயக திருவிழா அழைப்பிதழ்களை வழங்கினார்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சித்திரை மாதம் தேய்பிறை பிரதோஷ சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை ஏப்.16:** அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்தில் அமைந்திருக்கும்ஸ்ரீ பெரிய நந்திகேச பெருமானுக்கு சித்திரை மாதம் தேய்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு நந்திகேச பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், இளநீர்,தேன், பஞ்சாமிர்தம், பன்னீர், சந்தனம், வெட்டிவேர், விபூதி வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, மாலைகளால் வில்வ மாலைகளால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, சிவ மேளங்கள், தாளங்கள் முழங்க, வில்வத்தினால் அர்ச்சனைகள் செய்து, வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அரோகரா அரோகரா என்ற முழக்கமிட்டு வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சந்தனகாப்பு அலங்காரத்தில் ஆஞ்சநேயர்



**விழுப்புரம், ஏப்.16:** விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருள்மிகு ஸ்ரீபெருந்தேவி சமேத வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் சுவாமிக்கு சித்திரை மாதம் பராபவ வருடத்தை முன்னிட்டு வீர ஆஞ்சநேயருக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, சந்தன காப்புடன் கலர் கற்களால் அலங்கரித்து, வடை மாலைகளுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஆஞ்சநேயரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

# சித்திரை மாதம் தமிழ் வருடப்பிறப்பு 37 –ஆம் ஆண்டு லட்சதீப திருவிழா முத்தாலம்மன் சிறப்பு வழிபாடு



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென் னாத்தூர் பெரியார் தெருவில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்தாலம்மன் திருக்கோயில் 37 -ஆம் ஆண்டு லட்ச தீபம் திருவிழாவை முன்னிட்டு காலை முத்தாலம்மனுக்கு கணபதி ஹோமம் மற்றும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மலர் மாலைகளால் அலங்கரித்து, மங்கள வாத்தியங்கள் இசைக்க, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை லட்ச தீபத் திருவிழாவில் 108 குத்துவிளக்கு பூஜையும், வானவேடிக்கையுடன் முத்தாலம்மன் சிறப்பு அலங்காரத்தில் திருவீதி உலாவும், ஊஞ்சல் தாலாட்டு வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் முத்தாலம்மனை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## அமமுக, அதிமுக நிர்வாகிகள் திமுகவில் இணைந்தனர்



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் அமமுக மாநில தலைமை கழக பேச்சாளர் ,பொதுகுழு உறுப்பினர் பரமசிவம் தலைமையில் 14 ஊராட்சி செயலாளர்கள், அதிமுக நிர்வாகிகள் சார்ந்த நிர்வாகிகள் சுமார் 100 பேர்கள் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் மதியழகன் முன்னிலையில் இணைந்தனர்.இந்நிகழ்வில், போச்சம்பள்ளி ஒன்றிய செயலாளர் சாந்த மூர்த்தி, கௌதம்,சரவணன், உள்ளிட்ட பல திமுகவினர் கலந்துக்கொண்டனர்.

## திருவத்திமலை கோவில் தமிழ் புத்தாண்டு பூஜை



**விழுப்புரம், ஏப்.16:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த திருவத்திமலை வெங்கடாஜலபதி கோவில் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது வருகை தந்தபக்தர்கள் வாராஹி அம்மன் மற்றும் மும்மரக்கிளை விநாயகர் நவகிரக சன்னதி உள்ளிட்டவைகளை வணங்கி நேர்த்திகடன் செய்து அன்னதானம் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து வருகின்ற ஞாயிற்றுக்கிழமை 26.04.2026 அன்று பதினோறாம் ஆண்டு திருக்கல்யாண வைபோகம் நிகழ்ச்சி மாலை600மணிக்கு மேல் 7.30க்குள் நடைபெறுவதையொட்டி கோவிலுக்கு வந்த பக்தர்கள் பொதுமக்களுக்கு அழைப்பிதழ் பத்திரிக்கை கோவில் நிர்வாகம் சார்பில் வழங்கப்பட்டது.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## முன்னாள் அமைச்சர் பென்ஜமின் ராமாபுரம் பகுதிகளில் இரட்டை இலைக்கு வாக்கு சேகரிப்பு



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியிக்குட்பட்ட ராமாபுரம்151 வது வட்டம் பாகம் எண்38 ல் பூத்தப்பேடு அன்னை சத்யாநகர் பகுதிகளில் அதிமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் பென்ஜமின் இரட்டை இலையிக்கு வாக்கு சேகரித்தார் அதனைத் தொடர்ந்து கழகபகுதிச் செயலாளர், வட்டச் செயலாளர்தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர், அகரம் ராமதாஸ் செய்தியாளர்

# அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் வாக்கு சேகரிப்பு!



**வேலூர், ஏப். 16:** மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி மற்றும் திமுக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் ஆசி பெற்ற அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி வேட்பாளர், வேலூர் மாவட்ட திமுக செயலாளர் ஏ.பி. நந்தகுமார், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி கிழக்கு ஒன்றியம், கந்தனேரி ஊராட்சி கிராமத்தில் திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்து கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

இதில் ஒன்றிய செயலாளர் கோ.குமரபாண்டியன், திமுக மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

# வளத்தி ஊராட்சியில் திமுக வாக்கு சேகரிப்பு





**விழுப்புரம், ஏப்.16:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி மேல்மலையனூர் ஒன்றியம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தானை ஆதரித்து வளத்தியில் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியின் தலைமையில் மாவட்ட ஒன்றிய கிளைக்கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உதயசூரியன் சின்னத்திற்குவாக்கு சேகரித்தனர். அகரம் ராமதாஸ் செய்தியாளர்

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## தேர்தல் களப்பணியில்...

### தி.மு.க. கூட்டணியை ஆதரித்து தமிழகத்தில் 20, 21 ஆகிய நாட்களில் கெஜ்ரிவால் பிரசாரம்

தமிழக அரசின் பதவிக்காலம் மே மாதம் 10-ந் தேதியுடன் நிறைவடைகிறது. இதனை தொடர்ந்து, தமிழக சட்டசபைக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இதில், ஆளும் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்து தமிழகத்தில் வருகிற 20, 21 ஆகிய நாட்களில் ஆம் ஆத்மியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் டெல்லி முன்னாள் முதல்-மந்திரியான கெஜ்ரிவால் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார். அப்போது, முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் மீண்டும் முதல்-அமைச்சராவதற்காக வாக்கு சேகரிப்பில் ஈடுபட உள்ளார்.

அந்த 2 நாட்களில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, தி.மு.க. தலைமைக்கு அவர் ஆதரவு கேட்கிறார். பல்வேறு பேரணிகளிலும் பங்கேற்க உள்ளார். அப்போது, தி.மு.க. அரசின் நிர்வாகம், நல திட்டங்கள் ஆகியவற்றை குறிப்பிட்டு பிரசாரத்தில் ஈடுபடுகிறார். டெல்லி ஆம் ஆத்மி தலைமை வட்டாரங்கள் இதனை தெரிவித்து உள்ளன.

### கனிமொழி எம்.பி. காரில் தேர்தல் பறக்கும் படையினர் அதிரடி சோதனை

தமிழகத்தில் வருகிற 23-ம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதனை தொடர்ந்து, தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து கனிமொழி எம்.பி. தமிழகம் முழுவதும் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் நேற்று காலை தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் மற்றும் புதூர் பகுதிகளில் தி.மு.க. வேட்பாளர் மார்க்கண்டேயனை ஆதரித்து அவர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். பிரசாரத்தை முடித்துவிட்டு கனிமொழி எம்.பி. தனது காரில் தூத்துக்குடி நோக்கி புறப்பட்டார். அவருடன் காரில் தூத்துக்குடி தொகுதி தி.மு.க. வேட்பாளரும் அமைச்சருமான கீதா ஜீவன் மற்றும் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் இருந்தனர். அவர்கள் சென்ற கார் விளாத்திகுளம் அருகே வந்து கொண்டிருந்தபோது, அங்கு சோதனையில் ஈடுபட்டிருந்த தேர்தல் பறக்கும் படையினர் காரை மறித்து நிறுத்தினர். தொடர்ந்து அதிகாரிகள் காரின் பின்புறப் பெட்டியை (டிக்கி) திறந்து சோதனையிட்டனர். மேலும் வாகனத்திற்குரிய ஆவணங்களையும் வாங்கி சரிபார்த்தனர். முக்கிய பிரமுகர்கள் மற்றும் அமைச்சர் இருந்த காரைத் தேர்தல் அதிகாரிகள் தடுத்து நிறுத்தி சோதனை செய்த சம்பவம் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது. சோதனையில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் ஏதும் சிக்காததைத் தொடர்ந்து, அதிகாரிகள் அந்த காரை செல்ல அனுமதித்தனர்.

### கட்சி தொடங்கி 2 ஆண்டுகளில் விஜயால் முதலமைச்சர் ஆகிவிட முடியுமா? - திருமாவளவன் கேள்வி

விசிக தலைவர் தொல் திருமாவளவன் தவெக தலைவர் விஜய்யை கடுமையாக விமர்சித்தார். திருமாவளவன் கூறியதாவது: "கட்சி தொடங்கி இரண்டே ஆண்டுகளில் விஜயால் முதலமைச்சர் ஆகிவிட முடியுமா? ஆக முடியாது என அவருக்கே தெரியும்; ஏன் பெரம்பூரிலே விஜய் ஜெயிப்பாரா என்பதே கேள்விக்குறிதான். அந்த சந்தேகத்தால்தான் திருச்சி கிழக்கிலும் அவர் போட்டியிடுகிறார்.

தி.மு.க.வை ஆட்சியில் இருந்து அகற்றிவிட்டு, அந்த இடத்தில் யாரை அமர்த்த பார்க்கிறார்?. அவரே அந்த இடத்தில் அமர விரும்புகிறார் என்றால், இந்த தேர்தலில் அது சாத்தியமா? என்பது அவருக்கே தெரியும்.

தி.மு.க. ஆட்சியை அப்புறப்ப டுத்திவிட்டு, அவருடைய தலைமையில் ஆட்சி அமைக்க முடியாது என தெரிந்தும், பா.ஜனதா -அ.தி.மு.க. கைகள்தான் ஓங்கும் என தெரிந்தும், அவர் இந்த நிலைப்பாட்டை எடுத்தி ருக்கிறார். எனவே, அவருடைய தேர்தல் வியூகம் அ.தி.மு.க.-பா.ஜனதாவிற்கு வலு சேர்ப்பதாக இருக்கிறது.

எனவே, நண் பர் விஜய்யின் அரசியலை நாங்கள் அடையாளம் காட்டுகிறோம். தி.மு.க.வை அப்புறப்படுத்திவிட்டு பா.ஜனதா, அ.தி.மு.க.வை அமர வைப்பது தான் என் வேலை என்பதை விஜய் மறைமுகமாக சொல்கிறார்." என்றார்.

### வானதி சீனிவாசனுக்கு ஆதரவாக டெல்லி முதல் மந்திரி இன்று பிரசாரம்

கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி பாஜக வேட்பாளரான வானதி சீனிவாசனுக்கு ஆதரவாக டெல்லி முதல் மந்திரி ரேகா குப்தா பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார். இன்று மாலை 4.30 அளவில் பிரசாரத்தைத் தொடங்கும் ரேகா குப்தா, அவிலா ஸ்கூல் அருகில் வெங்கிடாபுரம், சின்னம்மாள் நகர், கண்ணப்பா நகர் 5வது வீதி, கே கே புதூர், எஸ்பிஐ ரோடு, நாராயணசாமி வீதி ஆகிய இடங்களில் பிரசாரம் மேற்கொண்டு வாக்கு சேகரிக்கிறார்.

திமுகவுக்கு ஆதரவாக டெல்லியின் முன்னாள் முதல்மந்திரியும் ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால் வருகிற 20, 21 ஆகிய தேதிகளில் சென்னை வரவுள்ளதாக ஆம் ஆத்மி கட்சி தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர், சின்னம் பொருத்தும் பணி இன்று தொடக்கம்




சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவுக்கு முந்தைய நடவடிக்கைகளை தேர்தல் கமிஷன் மேற்கொண்டு வருகிறது. இதற்காக இவிஎம் என்ற மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், அளித்த வாக்கை உறுதி செய்யும் விவிபாட் எந்திரங்கள் ஆகியவற்றை தேர்தல் கமிஷன் தயார்படுத்தி வருகிறது.

இந்த நிலையில், வாக்குப்பதிவு எந்திரங்கள் மேலாண்மையை தேர்தல் கமிஷன் செயல்படுத்துகிறது. அதன்படி, வாக்குப்ப திவு எந்திரங்கள், விவிபாட் எந்திரங்கள் ஆகியவற்றை அந்தந்த வாக்குச்சாவடிகளுக்காக 2-ம் கட்டமாக தேர்வு செய்யும் பணிகள் இன்று (16-ந்தேதி) முடிகிறது. அந்தப் பணிகள் முடிந்தவுடன், வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்களின் வரிசை எண், பெயர், புகைப்படம், சின்னம் ஆகியவை அடங்கிய இளஞ்சிவப்பு (பிங்க்) நிறத்திலான பேலட் பேப்பரை பொருத்தும் பணி நாளை (16-ந்தேதி) தொடங்க உள்ளது. இந்தப் பணிகள் அனைத்தும் அந்தந்த வேட்பாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில், தேர்தல் நடத்தும் அலுவலகத்தில் நடைபெறும்.

அதன்படி ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும். அங்கொன்றும் இங்கொன்றுமாக (ரேண்டம் முறையில்) வாக்குப்பதிவு எந்திரங்கள், விவிபாட் எந்திரங்களை தேர்வு செய்வார்கள். அப்படி தேர்வு செய்யப்பட்ட எந்திரங்களின் பட்டியல் மற்றும் ரிசர்வில் வைக்கப்பட்டுள்ள எந்திரங்களின் பட்டியல் போன்றவை அனைத்து வேட்பாளர்களுக்கும் தரப்படும்.

அந்த எந்திரங்களில் ஒவ்வொரு வாக்காளரின் பெயர், சின்னம் உள்ளிட்ட விவரங்கள் உள்ளிடப்படும். இதற்காக பெல் நிறுவனத்தில் இருந்து பொறியாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். ஒரு சட்டசபை தொகுதிக்கு 2 பொறியாளர் என்று இதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அந்தந்த தொகுதிக்கான வேட்பாளர், சின்னம் உள்ளிட்ட விவரங்களை, வாக்குப்பதிவு மற்றும் விவிபாட் எந்திரங்களுக்குள் தொழில்நுட்ப ரீதியாக பதிவிறக்கம் செய்வார்கள்.

அப்போது அந்த விவரங்கள் அனைத்தும் அந்த எந்திரங்களின் திரையில் தோன்றும். இந்தப் பணிகள் முடிந்த பிறகு அதில் வேட்பாளர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன் னிலையில் மாதிரி வாக்குப்பதிவு செய்து காட்டப்படும். வாக்குப்பதிவு எந்திரத்தில் ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்கும் வகையில் பட்டனை அழுத்தி, அந்த வாக்கு அவருக்குத்தான் சென்றதா? என்பதையும் உறுதிப்படுத்தி காட்டுவார்கள். அதை உறுதி செய்த பின்னர், அந்த வாக்குகளை அழித்துவிட்டு அந்த எந்திரங்கள் சீலிடப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்படும்.

வாக்குப்பதிவு நாளன்று இந்த பட்டியலில் இருக்கும் எந்திரங் களே ஒதுக்கப்பட்ட அந்தந்த வாக்குச்சாவடிகளில் பயன்படுத் தப்படும். இதுகுறித்த விரிவான அறிவுறுத்தல்கள், மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் குறித்த கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதை HTTPS://WWW.ECI.GOV.IN/EVM-VVPAT என்ற வலைத்தளத்தில் காணலாம் என்று தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது.

### தர்மபுரி: நடைபயிற்சியின்போது வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்



தமிழக சட்டசபை தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், திமுக தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தர்மபுரியில் பிரசாரத்தில் ஈடுபட உள்ளார். முன்னதாக அவர் நேற்று காலை பாலக்கோடு பகுதியில் நடைபயிற்சி மேற்கொண்டார். அப்போது, அவர் பாலக்கோடு திமுக வேட்பாளர் செந்தில் குமார் ஆதரித்து பொதுமக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

### இதை நாங்கள் நடக்க விடமாட்டோம் - பிரகாஷ் ராஜ் காட்டமான பதிவு



மகளிர் இடஒதுக்கீடு மற்றும் தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதாக்கள், நாடாளுமன்றத்தின் வரவிருக்கும் சிறப்புக் கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதன்மூலம் தென்னிந்திய மாநிலங்களின் அரசியல் அதிகாரத்தைப் பறிக்கும் முயற்சி நடப்பதாக கூறியுள்ள தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், இதற்கு எதிராக மிகப்பெரிய போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். தெலுங்கானா முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டியும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

தொகுதி மறுவரையறைக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், நடிகர் பிரகாஷ் ராஜ் அவர்களும் தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளார். இது தொடர்பாக பிரகாஷ் ராஜ் கூறியிருப்பதாவது:

"தோல்வியின் பயம் தெளிவாக தெரிகிறது; அதனால்தான் இந்த அரசு தொகுதி மறு வரையறை நடவடிக்கையைத் திணிக்க முயல்கிறது; தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை குறைத்து, நமது கூட்டாட்சி கட்டமைப்பை ஆபத்துக்குள்ளாக்கும் இந்த முயற்சி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படாது; இதை நாங்கள் நடக்க விடமாட்டோம்" என்று பதிவிட்டுள்ளார்.

### த.வெ.க. தமிழகத்தில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை- நடிகர் சரத்குமார் பேட்டி

ஆவடி தொகுதி பா.ஜனதா வேட்பாளரை ஆதரித்து நடிகர் சரத்குமார் நேற்று தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் பேசியபோது, 'தமிழகத்துக்கு வடக்கில் இருந்து எந்த ஆபத்தும் இல்லை. அமைச்சர் நாசருக்கு மக்கள் ஓட்டு போட மாட்டார்கள். தேசிய ஜனநாயக கூட்டணி மாபெரும் வெற்றி பெறும். த.வெ.க. தமிழகத்தில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. மக்களுக்கு தான் பாதிப்பு ஏற்படுத்தி உள்ளனர். கரூரில் நடந்த துயர சம்பவத்தில் நேரில் சென்று துக்கம் விசாரிக்காமல், வீட்டுக்கு அழைத்து அவர்களிடம் துக்கம் விசாரிக்கும் தலைவர் உலகில் யாரேனும் இருக்கிறார்களா?. நான் நடித்த 'ஜக்குபாய்' திரைப்படம் இணையத்தில் வெளியானது. ஒருவேளை படம் நன்றாக இல்லை என்று நீங்களே இணையத்தில் கசியவிட்டு, மக்கள் படத்தை பார்க்கட்டும் என விட்டீர்களா என்பது யாருக்கு தெரியும்' என பேசினார்.

## காவலர்கள், விவசாயிகள், நெசவாளர்களுக்கான தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்தார் விஜய்

திருப்பூரில் தவெக தலைவர் விஜய் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசியதாவது;

என் நெஞ்சில் குடியிருக்கும் கொங்கு மண்டல தங்கங்களே.. திருப்பூர் மக்களே.. உங்கள் அனைவருக்கும் வனக்கம். வருகிற 16ந்தேதி தேர்தல் வாக்குறுதிகளை புத்தகமாக வெளியிட உள்ளோம். அதற்கு முன் உங்களிடம் சில முக்கிய வாக்குறுதிகளை அறிவிக்கிறேன்.

நெசவாளர்கள்:

* நெசவாளர்களின் தயாரிப்புகளை நேரடியாக சர்வதேச சந்தைகளில் விற்க அரசு சார்பில் இ காமர்ஸ் பிராண்ட் உருவாக்கப்படும்.

*நிலையற்ற நுல் விலை, மின்சார நெருக்கடியை பகிர்ந்துகொள்ள, கைத்தறி, விசைத்தறி வைத்திருக்கும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஆண்டுக்கு ரூ30 ஆயிரம் வழங்கப்படும்.

* கைத்தறிகளுக்கு இலவச மின்சாரம் 500 யூனிட்டாகவும், விசைத்தறிகளுக்கு ரூ.1,500 யூனிட்டாகவும் வழங்கப்படும்.

* நெசவாளர்களின் உற்பத்தி செலவுகளை குறைக்க நூல், சாயங்களுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படும்.

*அனைத்து நெசவாளர்களுக்கும் ரூ.10 லட்சம் ஆயுள் காப்பீடு செய்யப்படும்.

*நெசவாளர்களின் முதியோர் ஓய்வூதியம் ரூ.3 ஆயிரம் ஆக உயர்த்தப்படும்.

*சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் மூடப்படுவதற்கான காரணங்களின் ஒன்று மின் கட்டணம்.. இது ஜவுளித்துறையை பாதித்துள்ளது

* சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களின் பீக் அவர்ஸ் மின் கட்டணத்தை தவெக நிறுத்தி வைக்கும்.

* சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு 5 ஆண்டுகளுக்கு 100 சதவீத மின்சார வரி விலக்கு அளிக்கப்படும்.

விவசாயிகள்:

* 5 ஏக்கருக்கு குறைவான விவசாய ஏக்கர் வைத்திருக்கும் விவசாயிகளின் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும்.

* 5 ஏக்கருக்கு மேல் விவசாய ஏக்கர் வைத்திருக்கும் விவசாயிகளின் பயிர்க்கடன் 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். * நெல் ஒரு குவிண்டாலுக்கு ரூ.3,500, கரும்பு டன் ரூ4,500 ஆக உயர்த்தப்படும்

* விவசாயி குடும்பத்துக்கு ஆண்டுக்கு 10 ஆயிரம் வழங்கப்படும்

* பயிர் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்.

அரசு உழியர்கள் நலன்

* அரசு ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதிய திட்ட குறித்து பரிசீலிக்கப்படும்.

*5க்கும் மேற்பட்ட ஆண்டுகள் பணியாற்றிய தற்காலிக ஆசியிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவர்.

* பதவி உயர்வுக்கு பணம் பெறும் கலாச்சாரம் முடிவுக்கு கொண்டுவரப்படும்

*காவலர்களுக்கான இடமாற்றம் வெளிப்படையாக நடைமுறைப்படும்

*காவலர்களின் மாத ஊதியம் ரூ.25 ஆயிரமாக உயர்த்தப்படும்

*காவலர்களுக்கு மாதம் ரூ.1000 கூடுதலாக வழங்கப்படும்.

*காவலர்களின் பணி நேரங்கள் ஒழுங்குபடுத்தப்படும்.

*காவலர்களுக்கான சலவைப்படி 1000 ரூபாயாக உயர்த்தப்படும்.


*காவலர் நல மருத்துவமனை நிறுவப்படும்

*பெண் காவலர்களுக்கென தனி ஓய்வறைகள், நடமாடும் டாய்லெட் யூனிட்டுகள் அமைக்கப்படும்

நீங்க எல்லோரும் விஜய்யை 100 சதவீதம் நம்பலாம். நான் உங்களுக்காக மட்டுமே வந்துள்ளேன். பொய் வாக்குறுதிகள் கொடுத்து ஏமாற்ற மாட்டேன். உங்க அண்ணனுக்கு, உங்க தம்பிக்கு, உங்க மகனுக்கு, உங்க பிள்ளைக்கு ஒரே ஒரு வாய்ப்பு கொடுங்கள். தயவு செய்து விசில் சின்னத்துக்கு ஒட்டு போடுங்க. இது ஒரு விசில் புரட்சி தேர்தலாக இருக்க வேண்டும். கான்பிடண்ட்டா இருங்கள் நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்."

இவ்வாறு அவர் கூறினார்.

## திமுக ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டு விட்டது: எடப்பாடி பழனிசாமி பேச்சு



தேனி மாவட்டம் அதிமுகவின் கோட்டை என்பதை நிரூபிக்க வேண்டும். ஆண்டிப்பட்டி நகரமே அதிர்கிறது. இந்த கூட்டம் வெற்றி பெறுவதற்கான அச்சாரம். விவசாயிகளின் கஷ்டம் எனக்கு தெரியும். நானும் விவசாயம் செய்து வருகிறேன். முல்லை பெரியாறு அணை பற்றி முதல்வர் சிந்திக்கவில்லை. விவசாயிகள் குறித்து முதல்வருக்கு அக்கறை இல்லை.

விவசாயிகளை புறக்கணித்த முதல்வர் ஸ்டாலின் வேண்டுமா? மக்களை ஏமாற்றி, கவர்ச்சியாக பேசி ஆட்சியை பிடிக்கும் முதல்வர் தேவையா? கூட்டணி அமைத்து ஆட்சியை பிடிப்பது முதல்வரின் லட்சியம்.

சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை சம்பவங்கள் தினமும் அரங்கேறுகிறது. கமிஷன், ஊழல்தான் திமுக அரசின் சாதனை. விலைவாசி விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது. ஏழை, எளிய மக்கள் வாழ முடியாத சூழல் உள்ளது. உணவுப்பொருட்களின் விலையை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வில்லை. மின் கட்டணம் 67 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. வீட்டுவரி 100 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பு முன்பு 900 ரூபாயாக இருந்த நிலையில், தற்போது ரூ.6 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

அதிமுக ஆட்சியில் மீண்டும் குடிமராமத்து திட்டம் கொண்டுவரப்படும். விவசாயிகளின் பம்புசெட்டுக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் கொடுக்கப்படும். விவசாயிகளின் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும்."

இவ்வாறு அவர் பேசினார்.

## தமிழ் புத்தாண்டு: திருத்தணி முருகப் பெருமானுக்கு பாலபிஷேகம்

**திருத்தணி, ஏப்.16:**

திருத்தணி முருகன் கோயிலில் தமிழ் புத்தாண்டையொட்டி, 1008 பால்குட ஊர்வலம், அபிஷேகம் நடைபெற்றது. இதில் திரளமான பக்தர்கள் பங்கேற்றனர்.

அதிகாலை, 5 மணிக்கு மூலவருக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தங்கவேல், தங்க கீரிடம், பச்சை மாணிக்க கல் மற்றும் வைர ஆபரணங்கள் அணிவித்து சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

மேலும் காலை 8.30 மணிக்கு, நந்தி ஆற்றின் கரையோரம் உள்ள, கோட்ட ஆறுமுக சுவாமி கோயிலில் இருந்து, 1,008 பால்குட ஊர்வலத்தை இணை ஆணையர் ரமணி, அறங்காவலர் சுரேஷ்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

பின்னர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள்,பால்குடம்சுமந்தவாறு ஆறுமுக சுவாமி கோயில் தெரு, பெரியதெரு, ம.பொ.சி. சாலை, திருக்குளம் அருகே உள்ள மலைப்படிகள் வழியாக மலை கோயிலுக்கு ஊர்வலம் வந்தது.

தொடர்ந்து, காவடி மண்டபத்தில் உற்சவர் முருகப்பெருமானுக்கு, 1008 பால்குட அபிஷேகம் நடந்தது. மதியம், 11.30 மணிக்கு உற்சவருக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் தீபாராதனை நடந்தன. இரவு 7.30 மணிக்கு, உற்சவர் முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையுடன் சிறப்பு அலங்காரத்தில் வெள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருளி, தேர்வீதியில் உலா வந்து, பக்தர் களுக்கு அருள்பாலித்தார்.

மலைப்பாதையில் இரு சக்கர வாகனங்கள் தவிர மீதமுள்ள அனைத்து வாகனங்களுக்கும் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

பக்தர்கள் வசதி க்காக கோயில் நிர்வாகம் சார்பில், 10 சிறப்பு பேருந்துகள் இலவசமாக இயக்கப்பட்டன. இருப்பினும் ஆயிரக்கணக்கான இரு சக்கர வாகனங்களில் பக்தர்கள் மலைக்கோயிலுக்கு வந்ததால் மலைப்பாதையில் கடும் நெரிசல் ஏற்பட்டது.

## ஏழுமலையான் உண்டியல் காணிக்கை ரூ.4.59 கோடி

திருமலை ஏழுமலையான் கோயில் உண்டியல் காணிக்கையாக ரூ.4.59 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

கோடை விடுமுறையை ஒட்டி பக்தர்கள் வருகை அதிகரித்துள்ள நிலையில் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி தர்ம தரிசனத்துக்கு 18 (தரிசன டோக்கன்கள் இல்லா தவர்கள்) மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனம், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கும் 3 முதல் 4 மணி நேரம் ஆனது.

இதற்கிடையே, சனிக்கிழமை முழுவதும் 72,724 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 31,986 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.4.59 கோடி வசூலானது என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

# ஏழுமலையான் லட்டு விற்பனையில் சாதனை: ஓராண்டில் 13.95 கோடி லட்டுகள் விற்பனை

**திருமலை, ஏப்.16:**



திருமலை ஏழுமலையான் லட்டு, விற்பனையில் தேவஸ்தானம் புதிய சாதனை படைத்துள்ளது.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் வரலாற்றில், கடந்த நிதியாண்டில் பக்தாகளுக்கு 13. 95 கோடி லட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. இதுவே முதல் முறையாகும்.

கூட்டணி அரசின் செயல்திறன், திருமலை திருப்பதி தேவஸ்தானத் தலைவா பி.ஆர். நாயுடு மற்றும் மூத்த அதிகாரிகளின் தொடாச்சியான கண்காணிப்பு மற்றும் மேற்பாாவையின் காரணமாக, ஏழுமலையான் லட்டு விற்பனை பெருமளவில் அதிகரித்துள்ளது.

திருமலை ஏழுமலையான் லட்டு விற்பனை சாதனை அளவை எட்டியுள்ளது. கடந்த நிதியாண்டில் 13.95 கோடி லட்டுகள் விற்பனையாகின.

ஏப்ரல் 2025 முதல் மார்ச் 2026 வரை, பக்தாகளுக்கு 13,95,43,231 லட்டுகள் விற்கப்பட்டன. அதே சமயம், 2024-25 ஆம் ஆண்டில் 12,18,53,535 லட்டுகள் விற்கப்பட்டன.

இதன் மூலம், அந்த ஆண்டில் கூடுதலாக 1.76 கோடி லட்டுகள் விற்கப்பட்டுள்ளன. திருமலை திருப்பதி தேவஸ்தானம் தற்போது ஒரு நாளைக்கு 4 லட்சம் லட்டுகளைத் தயாரித்து வருகிறது.

ஏழுமலையானை தரிசிக்க வரும் ஒவ்வொருவருக்கும் ஒரு லட்டு இலவசமாக வழங்குவதோடு, கூடுதலாக ஒன்று தேவைப்படுபவாகளுக்கு ரூ. 50-க்கு விற்பனை செய்கிறது. கடந்த ஆண்டில் லட்டு விற்பனை மூலம் ரூ. 567 கோடி வருவாய் ஈட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, ஏழுமலையான் லட்டுகளின் தரத்தில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. நெய்யின் தரத்தை உயா்த்துவதோடு, மூலப்பொருள்கள் கொள்முதலிலும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

லட்டுகளின் தரம் அதிகரித்துள்ளதால், பக்தாகள் அதைப் பாராட்டியுள்ளனா். இதற்குச் சான்றாக, கடந்த ஆண்டு பெருமளவிலான லட்டுகள் விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் புத்தாண்டு: திருவண்ணாமலை மாவட்ட கோயில்களில் சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை, ஏப்.16:**



தமிழ் புத்தாண்டை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பல்வேறு கோயில்களில் செவ்வாய்க்கிழமை சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

நினைத்தாலே முக்தி தரும் தலமாகவும், பஞ்சபூத தலங்களில் அக்னி தலமாகவும் விளங்குவது திருவண்ணாமலை அருணாசலேஸ்வரா் கோயில். இந்தக் கோயிலில் தமிழ்புத்தாண்டையொட்டி அதிகாலை நடை திறக்கப்பட்டு அருணாசலேஸ்வரா், உண்ணாமுலையம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

அதைத்தொடா்ந்து சிறப்பு அலங்காரத்தில் பக்தா்களுக்கு அருள்பாலித்தனா்.

புத்தாண்டையொட்டி ஏராளமான பக்தா்கள் காலை முதலே கோயிலில் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனா்.

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு அருணாசலேஸ்வரா் கோயில் நிா்வாகம் சாா்பில் கோயில் மூன்றாம் பிரகாரத்தில் அலங்கரிக்கப்பட்ட தங்கத் தேரில் சந்திரசேகரா் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி வலம் வந்து பக்தா்களுக்கு அருள்பாலித்தாா். தங்கத் தேரினை பக்தாகள் இழுத்து வழிபட்டனா்.

மூன்றாம் பிரகாரத்தில் உள்ள சம்மந்த விநாயகருக்கு தங்க கவசம் அணிவிக்கப்பட்டு, தங்க கவசவத்தில் பக்தா்களுக்கு அருள்பாலித்தாா்.

மேலும், சம்மந்த விநாயகா் சந்நிதி முன் நடப்பு தமிழ் ஆண்டுக்கான பஞ்சாங்கம் வாசித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

அப்போது,பஞ்சாங்கத்தை விநாயகா் சிலை முன் வைத்து வழிபாடு நடத்தப்பட்டு பராபவ ஆண்டுக்கான பஞ்சாங்கத்தை சிவாச்சாரியாகள் வாசித்தனா்.

# சிறுவாபுரி – பெரியபாளையம் கோயில்களில் தமிழ் புத்தாண்டு சிறப்பு வழிபாடு

தமிழ் புத்தாண்டு தினத்தையொட்டி, திருவள்ளூா் மாவட்டம், ஊத்துக்கோட்டை அருகே சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோயிலுக்கு தொடா்ந்து 6 வாரங்கள் வந்து நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்தால் வீடு, மனை, வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தைப்பேறு உள்ளிட்ட பக்தாகளின் வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது பக்தா்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

எனவே, இக்கோயிலுக்கு செவ்வாய்க்கிழமையில் பக்தா்கள் அதிகளவில் வந்து செல்வது வழக்கம். மேலும், ஞாயிற்றுக்கிழமை அரசு விடுமுறை நாள்கள் போன்ற விசேஷ நாள்களில் பக்தா்கள் அதிக அளவில் வந்து செல்வது வழக்கம். இந்த நிலையில், தமிழ் புத்தாண்டு மற்றும் செவ்வாய்க்கிழமை என்பதால் அதிகாலை கோயில் நடை திறக்கப்பட்டது. மூலவருக்கு பால், தயிா், பன்னீா், ஜவ்வாது உள்ளிட்ட 16 வகையான திரவியங்களால் அபிஷேகம், சிறப்பு பூஜைகள் செய்தனா். இதன் பின்னா், சிறப்பு அலங்காரம் மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றன. இதில், பல்வேறு பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான பக்தாகள் இத்திருக்கோயிலுக்கு வந்து காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனா்.

இதேபோல், பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலில் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு, மூலவா் மற்றும் உற்சவருக்கு அபிஷேகம்,சிறப்பு பூஜைகள், சிறப்பு வழிபாடு உள்ளிட்டவை நடைபெற்றது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

## உடல் சூட்டை தவிர்ப்பதற்கான வழிகள்!



* உடல் சூடு இருப்பவர்கள் முதலில் தண்ணீர் அதிகமாகக் குடிக்க வேண்டும். தண்ணீரை எந்த அளவுக்கு எடுத்துக் கொள்கிறோமோ அந்த அளவுக்கு உடலில் சூடு குறைவதுடன், இன்னும் பல பிரச்னைகளும் குறையும்.

* அடிக்கடி காற்றாட வெளியே செல்லுங்கள். வீட்டுக்குள்ளேயே அல்லது அலுவலகம் உள்ளேயே, புழுக்கத்திலேயே இருக்காதீர்கள். அவ்வப்போது இடைவெளி எடுத்துக்கொண்டு இயற்கையான குளிர்ந்த காற்றை உடலுக்குக் கொடுங்கள்.

குளிர்ந்த நீர் அல்லது அறை வெப்பநிலையில் உள்ள தண்ணீரில் குளியுங்கள். உடல் சூடு இருப்பவர்கள் வெந்நீர், சூடான நீரில் குளிப்பதைத் தவிர்க்கும்போது, வெளிப்புறமாக உடல் சூடு அதிகமாவதைத் தடுக்கலாம்.

* குளிர்ந்த நீர் அல்லது ஐஸ்கட்டி கொண்டு உடலின் முக்கியமான புள்ளிகளான மணிக்கட்டு, கழுத்து, நெஞ்சுப் பகுதி போன்ற வற்றில் ஒற்றி எடுங்கள். இவை உடலின் உள்ளே மிக விரைவாக குளிர்ச்சியை ஏற்படுத்தும். * இயல்புக்கு அதிகமாக வெப்பமாக உள்ள இடத்தில் இருக்கும்போது உடற்பயிற்சி செய்வதை, உடலுக்கு அதிகமான வேலைகளைக் கொடுப்பதைத் தவிர்த்திடுங்கள். முடிந்தவரை காற்றோட்டமான இடத்தில் இவற்றையெல்லாம் செய்யும்போது உடல் வெப்பம் அதிகமாகாமல் இருக்கும்.

* சில வகை துணிகள், வெப்பம் மிக எளிதாக உடலுக்குள் செல்ல இடம் அளிக்கக்கூடியது. குறிப்பாக, அக்ரிலிக் மற்றும் நைலான் போன்ற செயற்கை துணிகளைத் தவிர்க்கவும். மாறாக, பருத்தி மற்றும் கைத்தறி துணிகள் உடலில் இருந்து வெப்பத்தை எளிதாக வெளியேற்ற அனுமதிக்கும். அதனால் காட்டன் மற்றும் கதர் உடைகள் போன்றவற்றை அணியலாம்.

* எண்ணெய் தேய்த்துக் குளிப்பது உடல் சூட்டை குறைக்க மிக நல்ல வழி. உடலில் ஏதாவது பிரச்னை உள்ளவர்கள், மருத்துவ ஆலோசனை பெற்ற பின்னர் எண்ணெய் தேய்த்துக் குளிக்கவும். சில உடல் பிரச்னைகளுக்கு எண்ணெய்க் குளியலை தவிர்க்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

* உடல் சூடு பிரச்னை உள்ளவர்கள், கண் வலி, கண் எரிச்சல், தலைவலி, வெள்ளைப்படுதல் போன்ற பிற பிரச்னைகளையும் கொண்டிருந்தால், அது சிகிச்சை தேவைப்படும் நிலை. எனவே, காரணத்தை அறிய தாமதிக்காமல் மருத்துவரிடம் செல்லவும்.

# இடைத்தரகர் இல்லாத டிஜிட்டல் புரட்சி! பிளாக்செயின் தொழில்நுட்பம்!

பிளாக்செயின் தொழில்நுட்பம் (BLOCKCHAIN TECHNOLOGY) என்பது இடைத்தரகர்கள் இல்லாமல், தரவுகளைப் பாதுகாப்பாக, மாற்ற முடியாத வகையில் பரவலாக்கப்பட்ட லெட்ஜரில் (DECENTRALIZED LEDGER) சேமிக்கும் ஒரு டிஜிட்டல் தொழில்நுட்பமாகும். இது இடைத்தரகர்களை நீக்கி, வெளிப்படைத்தன்மை, அதிவேக பரிவர்த்தனைகள் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பை உறுதி செய்கிறது. கிரிப்டோகரன்சி, நிதி, சப்ளை செயின், ஹெல்த்கேர் மற்றும் அரசுத்துறை போன்ற பல்வேறு துறைகளில் இது புரட்சிகரமான பயன்களை அளிக்கிறது.

பிளாக் செயின் தொழில்நுட்பத்தின் முக்கிய பயன்கள்:

*** மேம்பட்ட பாதுகாப்பு (ENHANCED SECURITY):**

பிளாக்செயினில் பதியப்படும் தரவுகளை மாற்றவோ, அழிக்கவோ முடியாது. இது ஹேக்கிங் மற்றும் மோசடிகளைத் தடுக்கிறது. இது குறியீட்டு முறை (CRYPTOGRAPHY) மற்றும் பரவலாக்கப்பட்ட லெட்ஜர் மூலம் தரவுகளை பாதுகாப்பதால் ஹேக் செய்வது மிகவும் கடினம்.

*** வெளிப்படைத்தன்மை (TRANSPARENCY):**

அனைத்து பரிவர்த்தனைகளும் பொது லெட்ஜரில் பதியப்படுவதால், நெட்வொர்க்கில் உள்ள அனைவரும் அதைக் காணமுடியும். இதனால் மோசடிகள் குறையும். இது நம்பிக்கையை அதிகரிக்கிறது.



*** இடைத்தரகர்கள் நீக்கம் (DECENTRALISATION):**

வங்கி அல்லது மூன்றாம் தரப்பு நிறுவனங்கள் இல்லாமல், பயனர்கள் நேரடியாகத் தகவல்களை பரிமாறிக் கொள்ளலாம். இதனால் நேரமும், செலவும் குறைகிறது.

*** ஸ்மார்ட் ஒப்பந்தங்கள் (SMART CONTRACTS):**

ஒப்பந்த நிபந்தனைகள் தானாகவே நிறைவேற்றப்படும் (SELF-EXECUTING CONTRACTS). அதாவது நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் தானாகவே செயல்படும் ஒப்பந்தங்கள் மூலம், நம்பகமான மற்றும் விரைவான ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடியும். உதாரணமாக ஒரு பொருள் கைமாறியவுடன் பணம் தானாகவே பரிமாற்றப்படும்.

* சப்ளை செயின் மேலாண்மை (SUPPLY CHAIN MANAGEMENT):

ஒரு பொருளின் உற்பத்தியிலிருந்து வாடிக்கையாளரை சென்றடையும் வரை உள்ள அனைத்து நிலைகளையும் துல்லியமாக கண்காணிக்க முடியும்.

*** நிதி மற்றும் வங்கித்துறை (FINANCE):**

எல்லை கடந்த பண பரிவர்த்தனைகளை (CROSS-BORDER REMITTANCES) குறைந்த செலவிலும், அதிவேகமாகவும் செய்ய முடிகிறது.

* டிஜிட்டல் அடையாளம் மற்றும் தரவு பாதுகாப்பு (DIGITAL IDENTITY):

மின்னணு மருத்துவப் பதிவுகள் (HEALTHCARE RECORDS) மற்றும் நிலப் பதிவுகள் போன்றவற்றை பாதுகாப்பாக சேமிக்க பயன்படுகிறது.

* வாக்குப்பதிவு முறை (VOTING SYSTEMS):

பாதுகாப்பான மற்றும் மோசடியற்ற தேர்தல் நடத்த பிளாக்செயின் பயன்படுத்தப்படலாம்.

* பிளாக்செயின் தொழில்நுட்பம் என்பது தரவுப் பாதுகாப்பு மற்றும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு அதிநவீன டிஜிட்டல் உள்கட்டமைப்பாகும்.

* முக்கிய பயன்பாட்டுத் துறைகள்: கிரிப்டோகரன்சி: பிட்காயின் (BITCOIN) மற்றும் இத்தீரியம் (ETHEREUM) போன்ற டிஜிட்டல் நாணயங்கள் பிளாக்செயினை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றன.

* சுகாதாரம் (HEALTHCARE): நோயாளிகளின் மருத்துவத் தரவுகளைப் பாதுகாப்பாக நிர்வகிப்பதும், தேவைப்படும்போது மருத்துவர்கள் அணுகக் கூடிய வகையிலும் சேமிக்கப் பயன்படுகிறது.

* வணிகம் (LOGISTICS): பொருட்களை கண்காணித்தல்.

* அரசுத்துறை: நிலப்பதிவுகள், டிஜிட்டல் அடையாள மேலாண்மை மற்றும் வாக்களிப்பு முறைகளில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வர இது உதவுகிறது.

# எது உண்மையான செல்வம்



நம்மைப் பெரியவர்கள் ஆசிர்வாதம் செய்யும் பொழுது 16 செல்வங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என்று சொல்லி நம்மை ஆசீர்வதிப்பது உண்டு. இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் நாம் அனைவருக்கும் நிறைய தேவைகள் உள்ளது. அது ஆட்களுக்கு ஏற்ப மாறுபடும். நல்லூர் என்ற கிராமத்தில் நடந்த ஒரு சிறிய சம்பவம். ராமு–சோமு என இரு நண்பர்கள் இருந்தனர். இவர்களில் ராமு என்பவர் பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவர். சோமு மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். இருவரும் ஒரே பள்ளியில் படித்து வந்தனர். ராமு எப்பொழுதும் தன்னிடம் இருக்கும் வீடு, பணம் ,தோட்டம், துறவு என அனைத்தையும் பற்றி பெருமையாகப் பேசிக் கொண்டு இருப்பான். இதைக் கேட்கும்போது தன்னிடம் இவ்வளவு செல்வம் இல்லையே என்று சோமுவும் மிகவும் வருத்தப்பட்டது உண்டு. ஒருநாள் தன்னுடைய வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் வந்தார். அவர் பாடம் எடுக்கும்போது சொன்னார் ஒருவருக்கு என்றும் அழியா செல்வம் என்பது அவர் பெற்ற கல்வி என்று. அதற்காக திருக்குறள் ஒன்றையும் மேற்கோள் காட்டினார்.

“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை”.
அதிகாரம் – 40 – கல்வி

இதனைக்கேட்ட சோமு கல்வி ஒருவரின் வாழ்க்கையை மாற்றுமா! என்று நினைத்தான் . தான் மிகவும் கடினப்பட்டு உழைத்து சோமு ஒரு மாவட்டத்தின் ஆட்சியராகப் பொறுப்பேற்றான். தன்னால் இயன்றவரை கல்வி பெற முடியாத நிலையில் உள்ள மற்றவர்களுக்கு உதவிகளையும் செய்து வந்தான். இதன்மூலம் அரசின் உயரிய விருதுகளையும் பெற்றான்.

இப்பொழுது ராமுவுக்கு வருவோம் . எப்பொழுதும் தன்னுடைய சொத்துக்களை பட்டியலிட்ட ராமு, குறைந்த அளவு கல்வியை மட்டுமே கற்று தன்னுடைய சொத்துக்களை மேலும் மேலும் பெருக்க முடியாமல் தனக்கு என்று ஊரில் இருந்த பெரிய பணக்கார குடும்பம் என்ற பெயரையும் இழந்துவிட்டான். இறுதியாக அவர் இன்று ஊரில் யாரும் மதிக்க முடியாத அளவிற்கு சென்று விட்டான். இந்த சமயத்தில் சோமு தன்னுடைய நல்லூர் கிராமம் இருக்கும் அதே மாவட்டத்திற்கு ஆட்சியராக இடமாற்றம் கிடைத்து வந்தார். பிறகு தன்னுடைய பழைய பள்ளிக்குச் சென்று தனக்கு கற்றுத் தந்த ஆசிரியரைப் பார்த்து வரவேண்டுமென்று சென்றார். அப்பொழுது அந்த ஆசிரியருக்கு மிகவும் ஆச்சரியம். சோமு இப்போது மாவட்ட ஆட்சியராக இங்கு வந்திருக்கிறார் என்று ஆசிரியர் மாணவரிடம் சொன்னார் .கல்வி என்ற ஒன்றின் மூலம் தன்னுடைய ஏழ்மையை மாற்றியவர் இவர் என்று மற்ற மாணவர்களுக்கு உதாரணமாக சோமுவை காட்டினார் . கல்வி என்பது என்றும் அழியாச் செல்வம் என்றும் கூறி மாணவர்கள் மத்தியில் சோமுவை உதாரணமாக காட்டினார் . இப்போது உங்களுக்கே புரிந்திருக்கும் எது உண்மையான செல்வம் என்று. நன்றி

- கா.ச.சோமேஸ்வரன்.
ஸ்ரீ வித்யா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி,
திருஈங்கோயிமலை, முசிறி.

# புரிந்துகொண்டாள் பூங்கொடி



வீடு அமைதியாக இருந்தது. திண்ணையில் உட்கார்ந்து தெருவை வெறித்துப் பார்த்தார் எழிலனின் அப்பா கந்தசாமி. வீட்டுத் தோட்டத்தில் பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்தாள் அம்மா கல்யாணி.

எழிலன் இசையருவி தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சியில் ஒளிபரப்பான கலந்துரையாடலை ரசித்தபடி உட்கார்ந்திருந்தான்.

ஒரே மகனின் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று வருத்தப்பட்ட கல்யாணியின் முகம் இன்றுதான் சற்று தெளிந்தது.

'கல்யாணி' என்று அழைத்தவாறு கந்தசாமி வீட்டிற்குள் நுழைந்து 'மருமக வரா' என மகிழ்சியாக சொன்னார்.

செய்திருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு, மருமகள் பூங்கொடியை ஆசையாக வரவேற்க வீட்டு வாசற்படியில் காத்திருந்தாள் கல்யாணி.

அண்ணன் மகள் பூங்கொடி தோலில் பேக்கை மாட்டிக்கொண்டு, களைத்த முகத்தோடு உள்ளே நுழைந்து, மின்விசிறி பட்டனைத் தட்டிவிட்டு கயிற்றுக்கட்டிலில் உட்கார்ந்ததும் 'இந்தாம்மா' தண்ணீர் கொடுத்தாள் கல்யாணி.

வந்தவளை வா என்று கூட அழைக்காமல் இசையருவியில் ஓடிக்கொண்டிருந்த 'என்னவளே அடி என்னவளே என் இதயத்தை தொலைத்துவிட்டேன்' என்ற பாடலை முணுமுணுத்தவாறு தொலைக்காட்சிப் பெட்டியை பார்த்துக்கொண்டே இருந்தான் எழிலன்.

பூங்கொடி யாருடனும் பேசவில்லை. சமையல்கட்டுக்கு சென்று மாமியார் செய்து வைத்திருந்த சோத்தை தட்டில்போட்டு சாப்பிட்டுவிட்டு, பரணையில் இருந்தக் கோரப் பாயை எடுத்து காரத்தறையில் விரித்துப் போட்டு தலையணை இல்லாமல் கீழேப் படுத்தாள். கயிற்றுக் கட்டிலிருந்து தலையணையை எடுத்து, கல்யாணியின் தலைக்கு கீழே வைத்துவிட்டு வெளியே வந்தான் எழிலன்.

மூன்று மணிக்கு கூட்டுறவு மணி அடித்ததும், சில்வர் செம்பை எடுத்துக்கொண்டு பால் வாங்கச் சென்றார் கந்தசாமி.

அந்தி சாய்ந்தது.

தூங்கி எழுந்த பூங்கொடி, வீடு பெருக்கி கோலம் போட்டு, விளக்கேற்றி கோயிலுக்கு சென்றுவந்து, அடுப்பங்கரையில் சமையல் செய்யத் தொடங்கினாள்.

நிலவின் வெளிச்சத்தில் வீட்டிற்குமுன் உள்ள பூவரச மரநிழலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த மாமனார் மாமியாரை “ வாங்க மாமா சாப்பிடலாம்' என்று அழைத்தாள். ”ஏம்பா கைகழுவிட்டு வா சாப்பிடலாம்' கல்யாணி தனது மகனை அழைத்து, தண்ணீர் சொம்பை வந்து பக்கத்தில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள். பூங்கொடி அமைதியாக பரிமாறினாள். குறை சொல்லாமல் தொலைக்காட்சியில் செய்தியை பார்த்தபடி சாப்பிட்டு முடித்தனர் அனைவரும்.

மணி 9 ஆனது. உள்ளேயிருந்து கயிற்றுக் கட்டிலை வெளியே போட்டுப் படுத்தார் கந்தசாமி. தனது கணவன் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலுக்கு கீழே பாய்விரித்து படுத்தாள் கல்யாணி.

'மாமா பக்கத்துல தண்ணி வச்சிருக்கேன். புரண்டு படுக்கும்போது சாய்ச்சிட போறீங்க. அதை கொஞ்சம் எடுத்துவச்சுட்டு படுங்க' என சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்த பூங்கொடி, கதவைத் தாழிட்டாள்.

அமைதியாகயிருந்த கணவனின் பக்கத்தில் உட்கார்ந்து, அவன் முகத்தை திருப்பி 'என் மேலக் கோபமா?' என கேட்டாள்.

'போடி' என்று செல்லமாய் கோபப்பட்டவனின் நேரில் உட்கார்ந்து, படபடவென பேசினாள். 'உனக்கு சொல்லத் தெரியலையா, இல்லை எனக்குப் புரிஞ்சுக்கிற தன்மை இல்லையா, எதுவுமே எனக்கு புரிய மாட்டேங்குது. என்ன நடந்தாலும் அமைதியாக இருக்கிற மாமா. டேய் விடுடான்னு உன்ன அதட்டி, என் பக்கம் உள்ள நியாயத்தை எடுத்து சொல்றது அத்த, எல்லாம் சரியா இருக்கு. ஆனா நீ மட்டும்தான் சரி இல்லை. உன்னை என்னால புரிஞ்சுக்கவே முடியல. ஏன்?' எனக் கேட்டுவிட்டு பேச்சு நிறுத்தி, அவன் முகத்தை இரு கைகளால் பிடித்து திருப்பி, முறைத்து பார்த்துக் கேட்டாள் பூங்கொடி.

கொஞ்சம் அமைதியாக இருந்துவிட்டு,'வயசான காலத்துல உங்க அம்மா அப்பாவை விட்டுட்டு உங்க அண்ணா அண்ணி தனிக் குடித்தனம் போனா ஏத்துக்குவியா? அதே மாதிரிதான் எனக்கும் எங்க அம்மா அப்பா முக்கியம்.' என இறுக்கமான முகத்தோடு எழிலன் சொல்லி முடித்ததும்,

'ஏன் போன வேகத்தில திரும்பிவந்துட்ட, நீ போனதப் பாத்தா திரும்பி வரமாட்டேன் நினைச்சன். இன்னும் ஆறுமாசம் இருக்க வேண்டியதுதானே.'என அவளை உத்துபார்த்து கேட்டான்.

முகத்தை குழந்தைத்தனமாக வைத்துக்கொண்டு 'மரியாதையே இல்லங்க. யாரும் என்கூட பேசல. உங்க அக்காதான் என்கிட்ட அமைதியா சொன்னாங்க. நீ போ உன்வீட்டுக்கு. உங்க அப்பா அம்மாவை நான் நல்லா பாத்துக்குறேன். என் அப்பா அம்மாவை குறை இல்லாம பாத்துக்கோ. நீ இங்க இருந்தா உனக்கு மரியாதையே இருக்காதுன்னாங்க' என்று அவள் சொல்வதைக்கேட்டு மகிழ்ச்சி அடைந்தவன், மனப்பூர்வமா சிரித்துக்கொண்டே ஜன்னலை சாத்திவிட்டு விளக்கை நிறுத்தினான்.

பொழுது விடிந்தது. தலைமுழுகி சமையல் அறையில் சுறுசுறுப்பாக வேலை செய்தாள் பூங்கொடி. அலுவலகத்திற்கு செல்ல தயாராகி வாசலில் நின்றிருந்தான் எழிலன். வண்டி சாவியை கணவனிடம் கொடுத்து, சிரித்த முகத்தோடு 'மாமா வரும்பொழுது மல்லைகைப் பூ வாங்கிட்டு வா' என கையசைத்த அண்ணன் மகள் பூங்கொடியைப் பார்த்து கலைவாணி சிரித்தாள். கந்தசாமி கண்டும் காணாததுபோல் உட்கார்ந்திருந்தார் கயிற்றுக் கட்டிலில்.

-கோமளவல்லி
மும்பை

# Boomer to Gen Z

பாகம் 26




வி.பிரபாவதி
மடிப்பாக்கம்.

அந்தப் பையன் மாதவன் நல்லப் பிள்ளையாகத் தெரிந்தான். அவன் அப்பா பக்கத்து ஊரில் பள்ளிக்கூட வாத்தியாராக இருக்கிறார் என்பதும் தெரிய வந்தது. உடனே ஹரிக்கு ஒரு யோசனை தோணியது. அவர்களுக்கு இந்த வீட்டை வாடகைக்கு விடலாமே என்று நினைத்தான். மாதவன் மாமா, மாமா என்று ஹரியிடம் ஒட்டிக் கொண்டான்.

இதற்கிடையில் மாலு பேரன் பேத்திகளைப் பார்ப்பதற்கு வெளிநாடு செல்ல வேண்டியிருந்தது. ஆப்திகத்திற்குள் வந்துவிட எண்ணி பயணத்தை தீர்மானித்தாள். அபிஷேக்கிடம் பேரனைப் பார்த்துக் கொள்ள ஆள் வைத்துக் கொள்ளச் சொன்னாள். அம்மாவுக்கு போன் செய்து பேசிவிட்டு உடம்பை கவனித்துக் கொள்ளச் சொல்லிக் கிளம்பினாள்.

ஹரி உத்திரம் எல்லாம் உளுத்துப் போயிருந்ததை



சரி செய்துவிட்டு கொஞ்சம் அங்கங்கே பெயர்ந்து போன சுவற்றை சிமெண்ட் வைத்துப் பூசிவிட்டு வாசல் திண்ணையில் கொஞ்சம் டைல்ஸ் போட்டு வீட்டை அழகு படுத்தினான்.

மாதவனின் அப்பா வீட்டிற்கு குடிவர சம்மதித்தார். அவர், மனைவி, வயதான அம்மா, மாதவன் நால்வரும் ஆப்தீகம் கழித்து வருவதாய் இருந்தது. இதற்கிடையில் சுந்தரி சொன்னாள், அம்மாவை அவள் கொஞ்ச நாள் அழைத்துப் போவதாகவும், ஹரி சென்னைக்குச் சென்று மகன், மருமகளுடன் இருந்துவிட்டு வரச்சொன்னாள். ஹரிக்கும் சரியெனப் பட்டது. மணியக்காரரிடம் சொல்லி நிலங்களை கொஞ்சம் குத்தகைக்கு விட்டு விட்டு, மீதி நிலத்தை அம்மா ஒப்புதலோடு விற்கவும் ஏற்பாடு செய்து விட்டான்.

பஸ் ஸ்டாப்பின் அருகில் இருந்த நான்கு கிரவுண்ட் நிலத்தை ஏழைகளுக்கு தானமாகக் கொடுக்க முடிவு செய்தான்.

சரிசமமாக எட்டு பாகமாகப் பிரித்து மிகவும் கஷ்டப்படும் குடும்பத்திற்கு, திருநங்கைகளுக்கு, அறக்கட்டளைக்கு என்று பிரித்துக் கொடுக்கவும் ஏற்பாடு செய்து விட்டான். மனம் மிகவும் மகிழ்ச்சியடைவதையும் இலேசானது போலும் உணர்ந்தான். ஓரிரு மாதங்கள் இருந்து விட்டு அப்பாவின் வருஷ திவசத்தை முன்னிட்டு மீண்டும் கிராமத்திற்கு வர நினைத்திருந்தான். எல்லாம் நொடியில் நடந்து விட்டாற்போல் தோன்றியது. மனது வலித்தது.

சென்னைக்கு வந்த பிறகும் போன் மூலம் சில வேலைகளைச் செய்து கொண்டிருந்தான். அம்பி ஐயர் கிட்டச் சொல்லி பெரிய பித்தளை தவளைகள், அடுக்குகள், கங்காளம் என ஒரு ஆள் உள்ளே உட்காரும் சைசில் இருந்த பித்தளைப் பாத்திரங்களை நல்ல விலைக்கு விற்றுவிட்டான்.

கொஞ்சம் எவர்சில்வர், வெங்கலப் பானைகள், ரயிலடுக்கு செட் எல்லாம் உள் பரணையில் போட்டு வைத்தான். அம்மா காலம் வரைக்கும் இருக்கட்டும் என்று நினைத்தான்.

அம்மாவிற்கும் சுந்தரிக்கும் தினமும் போன் பண்ணிப் பேசினான்.

ஒரு வழியாக எல்லாம் முடிந்து ஊரைவிட்டுக் கிளம்பும்போது மனம் கனத்தது. இரண்டு மூன்று அறைகளும், தாழ்வாரம், தொட்டி மித்தம், அடுப்பங்கரை, கிணற்றடி, கோட்டை அடுப்பு, மாட்டுக் கொட்டில் எனப் பெரிய வீடு. அரண்மனை மாதிரி வீட்டிலிருந்து கோமளம் சென்னையில் அடுக்கு மாடிக் குடியிருப்பில் வசிக்கப் போகிறாள். அகலக்கால் வைத்தால் அடுத்தவர் போர்ஷனுக்கு போய்விடுவோம் என்றிருக்கும்.

ஒவ்வொருவராக அதுவும் பல வருஷங்கள் நகமும் சதையுமாகப் பழகியவர்கள் பிரியா விடைத் தந்தனர்.

ஒரு ரூமில் கொஞ்சம் சாமான்களை வைத்துப் பூட்டி விட்டு மாதவன் தந்தை பத்ரிசாரிடம் சாவிகளை விட்டு வந்தார்கள். "நீங்க எப்ப வேணும்னாலும் வரலாம். நம்பாம் மாதிரி, உரிமையோடத் தங்கிட்டுப் போங்கோ" பத்ரி சாரின் அம்மா வாய்நிறைய சொன்னார். ஹரிக்கு ரொம்ப சந்தோஷம். மாலு, வாசு, ஹரி, சுந்தரி எல்லோரும் பழைய நட்புகளை மீண்டும் சந்தித்த மகிழ்வோடு விடைபெற்றுக் கிளம்பினார்கள். அம்மா வீட்டையும் ஊரையும் கண் கொட்டாது பார்த்துக் கொண்டே வந்தாள். பிரியா விடை பெற்று வந்து கொண்டிருந்தாள். கோமளத்தின் தம்பி குடும்பத்தார் மாயவரத்திலிருந்து வந்து வழி அனுப்பி வைத்தனர்.

தொடரும்...

# ஸ்ரீசுதர்சனர் வழிபாடு பற்றிய அரிய 10 விஷயங்கள்!



ஸ்ரீசக்கரத்தாழ்வாரை தரிசித்தால், சகல தோஷங்களும் விலகும். அவரின் பரிபூரண அருள் கிடைக்கப்பெற்று நிம்மதியும், சந்தோஷமும் பொங்க வாழலாம் என்பது ஐதீகம். ஸ்ரீசக்கரத்தாழ்வார் வழிபாடு பற்றிய அரிய 10 விஷயங்கள்

1. ஸ்ரீசுதர்சனரை வழிபட சித்திரை நட்சத்திர தினங்கள் சிறப்பானவை. சித்திரை அவருக்குரிய நட்சத்திரம்.

2. சுவாமி தேசிகனின் சுதர்சனாஷ்டகமும், ஷோட சாயுத ஸ்தோத்திரமும் சொல்லி வந்தால் எளிதில் ஸ்ரீசுதர்சனரின் அருளைப் பெறலாம்.

3. சக்கரத்தானை, ‘திருவாழியாழ்வான்’ என்று போற்றுகின்றனர் ஆழ்வார்கள்.

4. சுவாமி தேசிகன் இவரை ‘சக்ர ரூபஸ்ய சக்ரிண’ என்று போற்றுகிறார். அதாவது, திருமாலுக்கு இணையானவர் என்று இதற்குப் பொருள்.

5. கும்பகோணம் சக்ர படித்துறையில் உள்ள சக்கர தீர்த்தத்தில்தான் பிரம்மா அவப்ருத நீராடல் செய்து யாகம் செய்தார். உடனே பாதாளத்திலிருந்து சக்கரம் வெளிக்கிளம்பி மேலே வந்தது. அந்த சக்கரத்தின் நடுவில் பிரம்மனுக்கு அன்று காட்சி தந்த ஸ்ரீமந் நாராயணன்தான் இன்று நமக்கு ஸ்ரீசக்ரபாணியாகக் காட்சி தருகிறார்.

6. சாளக்ராமங்களில் சுதர்சன சாளக்ராமம் மிகச் சிறந்தது. ஒரு சக்கரம் மட்டுமே உள்ள மிகப் பெரிய சாளக்ராமம் சுதர்சனமாகும். திருமாலின் சக்ராயுதத்தின் பூர்ண சக்தி இதற்கு உண்டு.

7. ஸ்ரீசக்கரத்தாழ்வாரையும், அவர் பின்புறமுள்ள ஸ்ரீநரசிம்மரையும் வணங்கி சுற்றி பிரதட்சணம் செய்தால், நான்கு வேதங்களையும், பஞ்ச பூதங்களையும் அஷ்ட லட்சுமிகளையும், எட்டு திசைகளையும் வணங்கிய பலன் கிடைக்கும். 16 வகையான பேரருளும் கிடைக்கும் என்பது முன்னோர்களின் வாக்கு!

8. நரசிம்ம அவதாரத்தில் அரக்கனின் வரத்தையொட்டி எந்த ஆயுதமும் இல்லாமல் ஹிரண்யகசிபுவை நரசிம்மர் அழித்தபோது, அவரது நகங்களாக விளங்கியவர் சுதர்சனரே.

9. வாமன அவதாரத்தில், சுக்ராச்சாரியாரின் கட்டளையை மீறி மகாபலி மன்னன் வாமனனுக்கு தானம் கொடுக்க தாரை வார்த்தபோது, சுக்ராச்சாரியார் வண்டாக வந்து கமண்டல நீர்ப் பாதையை அடைத்தார். அப்போது திருமால் பவித்திரத்தால் கிளற, சுக்ராச்சாரி யார் தனது கண்ணை இழந்தார். அங்கு பவித்திரமாக வந்தவர் சுதர்சனரே.

10. சக்கரத்தாழ்வார் பல பழைமையான திருக்கோயில்களில் தனிச்சன்னிதி கொண்டு காட்சியளிப்பதைக் காணலாம். (குறிப்பாக ஸ்ரீரங்கம், காஞ்சி வரதர் கோயில், திருமாலிருஞ்சோலை (கள்ளழகர்) கோயில், திருமோகூர், ஸ்ரீவில்லிபுத்தூர்.) தற்போது ஸ்ரீசுதர்சனரின் மகிமையைப் புரிந்துகொண்டு பல திருத்தலங்களில் இவருக்குத் தனிச்சன்னிதி அமைக்கப் பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

A.S.Govinda rajan
KODAMBAKKAM CHENNAI

# தினம் ஒரு தலைவர்கள் — பாகாஜதீன் வரலாறு

புரட்சித் தளபதி பாகாஜதீன் (1879-1915) இந்திய விடுதலைக்காக போராடியவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர். வீரம் மிக்கவர்.

இவர் 1879 டிசம்பர் 5 ஆம் தேதி உமேஷ் சந்திர முதர்ஜி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் ஜதீந்திர நாத் முகர்ஜி.

இளம் வயதிலேயே, வங்காள மாநிலம் நாதியா மாவட்டத்தின் கோயா கிராமத்தில் உள்ள கோடுய் நதிக்கரைப் புதரில் மறைந்திருந்த ஒன்பது அடி நீள வங்கப் புலி இவர் மீது பாய்ந்தது. இருபது நிமிடம் அதனுடன் போராடி சிறு கத்தியின் உதவியுடன் அதனைக் கொன்றதோடு புலி கடிபட்ட காலை வெட்ட வேண்டும் என்று மருத்துவர் கூறியதற்கு சம்மதிக்காமல் மனோபலத்தால் குணமடைந்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் ’புலியைக் கொன்றவன்’ என்ற பொருளில் பாகா ஜதீன் என்று மக்கள் இவரை அழைத்தனர்.

ராஷ்பிகாரி போஸ் போன்ற தலைவர்களின் பேச்சுக்கள் , கதர்க்கட்சி வீரர்களின் போராட்டங்கள், சுவாமி விவேகானந்தரின் கொள்கை முழக்கங்கள் போன்றவற்றால் ஈர்க்கப்பட்ட ஜதீன் அரவிந்தரின் இயக்கத்தில் அவருக்கு வலது கரமாக செயல்பட்டார். அதன்பின் அனுசீலன் சமிதி என்ற புரட்சி இயக்கத்தை உருவாக்கி செயல்பட்டார்.

தாம் சம்பந்தப்படாத வழக்கில்



சிக்கவைக்கப்பட்டு ஓராண்டு சிறையில் சித்திரவதை அனுபவித்த பின்னர் 1911 பிப்ரவரி 21 இல் விடுதலையாகி வெளியே வந்தார்.

டார்ஜிலிங்கிற்கு ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த போது, ஒரு முதியவருக்கு குடிக்க தண்ணீர் கேட்டு தவித்துக்கொண்டிருந்ததை கண்டு அவருக்கு அடுத்த நிலையத்தில் தன்னிடமிருந்த பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்தார். அப்போது சிறிது நீர் மற்றவர்களை கேலி செய்து கொண்திருந்த ஆங்கிலேய இராணுவ அதிகாரிகள் நால்வரில் ஒருவர் மேல் சிந்த அந்த அதிகாரி தடியார் ஜதீனை அடித்தார். அதை பொருட்படுத்தாமல் பெரியவரிடம் சென்று அருந்துவதற்கு தண்ணீரைக் கொடுத்துவிட்டு கீழே இறங்கி தன்னை அடித்த அதிகாரியின் கையை முறுக்கினார். அவருக்கு உதவ வந்த மற்ற மூன்று அதிகாரிகளும் இவர் ஒருவராலேயே அடித்து துவம்சம் செய்யப்பட்டு நடைபாதையிலேயே துவண்டு விழுந்தனர்.

இதன் காரணமாக தொடரப்பட்ட வழக்கில், ஆங்கிலேய நீதிபதி ஒரே ஓர் இந்தியன் நான்கு ஆங்கிலேயரை அடக்கினார் என்ற செய்தி வெளியே தெரிந்தால் இந்தியர்களுக்கு தன்னம்பிக்கையும் துணிவும், ஆங்கிலேயருக்கு இந்தியர் மேல் அச்சமும்,அவமானமும் ஏற்படும் என்று உணர்ந்து வழக்கை தள்ளுபடி செய்தார்.

# பிரதீப் ரங்கநாதனுக்கு கடவுள் ஆசீர்வாதம் அதிகம் என எஸ்.ஜே. சூர்யா பாராட்டு



தமிழ் திரையுலகின் முன்னணி இளம் நட்சத்திரமான பிரதீப் ரங்கநாதன் கதாநாயகனாக நடிக்க, முன்னணி இயக்குநர் விக்னேஷ் சிவன் இயக்கத்தில் உருவான 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' (LIK) திரைப்படம், கடந்த ஏப்ரல் 10-ஆம் தேதி உலகமெங்கும் வெளியாகி, ரசிகர்கள் மற்றும் திரை ஆர்வலர்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்று வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

திரையரங்குகளில் பெரும் வரவேற்புடன் ஓடிக்கொண்டிருக்கும் இந்தப் படத்தின் வெற்றி கொண்டாட்ட நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய இயக்குநரும், நடிகருமான எஸ்.ஜே. சூர்யா பிரதீப் ரங்கநாதனிடம் ஏழு ஆண்டுகளுக்கு முன் கூறியதை நினைவுகூர்ந்தார்.

அப்போது பேசிய அவர், "உலகம் முழுக்க இருந்து மெசேஜ்கள் வருகிறது — மலேசியா, சிங்கப்பூர், டொரண்டோ... நீண்ட நாட்களாக தொடர்பில் இல்லாத நண்பர்கள்கூட மீண்டும் தொடர்பு கொள்கிறார்கள். அது எல்.ஐ.கே. படத்தின் வெற்றியை சொல்கிறது. பிரதீப் ரங்கநாதன் சாருக்கு கடவுளின் ஆசீர்வாதம் ரொம்ப அதிகம்.

ஒரு சாதாரண ஆரம்பத்திலிருந்து இன்று பெரிய ஹீரோவாக உயர்ந்திருக்கிறார். அவருடைய பயணம் உண்மையிலேயே பிரமிப்பானது. நான் எப்போதும் மனதில் பட்டதை தான் சொல்வேன். அதுபோலவே, அவர் நடித்ததை பார்த்தபோது — "நீங்கள் பெரிய அளவுக்கு போவீர்கள்" என்ற நம்பிக்கை வந்தது. நான் ஏழு வருடம் முன்பு சொன்னது, அது இன்று உண்மையாகி இருக்கிறது," என்றார்.



நடிகை ஸ்ரீதேவியின் மகள் ஜான்வி கபூர் ஹிந்தி சினிமாவை தாண்டி தெலுங்கிலும் சில படங்கள் நடித்து இருக்கிறார். ஜான்வி கபூர் தொடர்ந்து தாராள கவர்ச்சி காட்டி வரும் நிலையில் அவரது போட்டோக்களும் இணையத்தில் அடிக்கடி வைரல் ஆகின்றன. தற்போது ஜான்வி வெள்ளை நிற உடையில் ஹாட் போட்டோஷூட் எடுத்திருக்கிறார். அந்த புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# தென்னிந்திய ஹிப் ஹாப் நட்சத்திரங்கள் ஒரே மேடையில்



தென்னிந்திய ஹிப்-ஹாப் இசை உலகத்தை ஒன்றிணைக்கும் "வணக்கம் வணக்கம் பெங்களூர்" ஏப்ரல் 11-ம் தேதி பெங்களூருவில் நடந்தது. இதில் மூன்று மாநிலங்களைச் சேர்ந்த 8-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் ஒரே மேடையில் பங்கேற்று ரசிகர்களுக்கு அதிரடி அனுபவத்தை வழங்கினர்.

வேடன், காப்ரி, ஸ்டிக், சந்தன் ஷெட்டி மற்றும் டகால்டி ஆகியோரின் உற்சாகமான நிகழ்ச்சிகளுடன் தமிழ் கலைஞர்கள் அறிவு மற்றும் அசல் கோலாரும் சிறப்பு நிகழ்ச்சிகள் வழங்கினர். இவை ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்றது. மலையாளம், கன்னடம், தமிழ் ஹிப்-ஹாப் இசையின் பல்வேறு முகங்களை ஒரே மேடையில் கொண்டு வந்த இந்த விழா, மொழி மற்றும் கலாசார எல்லைகளைத் தாண்டிய இசை ஒன்றிணைப்பாக அமைந்தது. Alt+ மற்றும் The High Culture இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

இதன் அடுத்த பதிப்பு "வணக்கம் வணக்கம் சென்னை" என்ற பெயரில் விரைவில் நடைபெற உள்ளது. ஐதராபாத், மும்பை உள்ளிட்ட நகரங்களிலும், அதன்பின் உலகளாவிய அளவில் பல நாடுகளுக்கு இது விரிவடைய உள்ளது.

# தனுசுக்கு ஜோடியாகும் சாரா அர்ஜூன்

தனுஷ் தனது 56-வது படத்தை தமிழரசன் பச்சமுத்து இயக்கத்தில் நடிக்க இருக்கிறார். படத்தில் கதாநாயகியாக ருக்மினி வசந்த் நடிக்க இருந்தார். கால்ஷீட் பிரச்சனை காரணமாக ருக்மினி படத்தில் இருந்து விலகினார். அவருக்கு பதிலாக 'துரந்தர்' படத்தின் கதாநாயகியான சாரா அர்ஜூன் நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

விக்ரம் நடித்த தெய்வத் திருமகள் படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்த சாரா அர்ஜூன் சைவம், பொன்னியின் செல்வன் ஆகிய படங்களில் நடித்தார். தொடர்ந்து கதாநாயகியாக நடிக்க தொடங்கிய சாரா அர்ஜூன், ரன்வீர்சிங்குடன் 'துரந்தர்' படத்தில் நடித்தார். படம் திரைக்கு வந்து மாபெரும் வெற்றியடைந்ததையொட்டி சாரா சர்வதேச அளவில் பிரபலமடைந்தார். தற்போது தனுசுடன் அவர் நடிக்க இருப்பது ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பவன் கல்யாண், ராம் சரண் கிண்டல்



ஆந்திரப் பிரதேச துணை முதலமைச்சரும், ஜனசேனா கட்சியின் நிறுவனருமான பவன் கல்யாண் மற்றும் நடிகர் ராம் சரண் உள்ளிட்ட மெகா குடும்ப உறுப்பினர்களைக் கிண்டல் செய்ததாக, ஹைதராபாத்தைச் சேர்ந்த நகைச்சுவை கலைஞர் அனுதீப் கடிகலா ஆந்திரப் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் உள்ள தனது பெற்றோரைப் பார்க்கச் சென்றிருந்த அனுதீப்பை, ஆந்திர மாநில காக்கிநாடா போலீசார் நேற்று கைது செய்தனர். முதலில் பிரயாக்ராஜில் உள்ள ஒரு உள்ளூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் ரயில் மூலம் காக்கிநாடாவிற்கு கொண்டு செல்லப்பட்டார்.

அண்மையில் நடைபெற்ற "தி டோலிவுட் ரோஸ்ட் ஷோ" என்ற நிகழ்ச்சியில், பவன் கல்யாணின் விவாகரத்துக்கள் மற்றும் ராம் சரணின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து அவர் கிண்டலாகப் பேசிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.அனுதீப்பின் கருத்துக்கள் பெண்களை இழிவுபடுத்தும் வகையிலும், ஆபாசமாகவும் இருப்பதாகக் கூறி ஜனசேனா கட்சியின் உறுப்பினர் படே வெங்கட கிருஷ்ணா அளித்த புகாரின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர் மீது அவதூறு பரப்புதல், ஆபாசமான கருத்துக்களை வெளியிடுதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஐஐடி பட்டதாரியாக இருந்து ஸ்டாண்டப் காமெடியனாக மாறிய அனுதீப் கடிகலா, ஹைதராபாத்தில் தெலுங்கு ஸ்டாண்ட்-அப் காமெடி கலாச்சாரத்தைத் தொடங்கி வைத்தார். மேலும், இந்தியாவின் முதல் தெலுங்கு ஸ்டாண்ட்-அப் காமெடி கூட்டமைப்பான 'சில்லி சவுத் காமெடி' என்ற குழுவையும் நிறுவினார்.



நடிகை ஐஸ்வர்யா லட்சுமி மலையாள நடிகை என்றாலும் தமிழிலும் ஏராளமான படங்களில் நடித்திருக்கிறார். ஹீரோயின் ரோல் மட்டுமின்றி பல படங்களில் சின்ன ரோல்களிலும் அவர் நடித்துள்ளார். அவர் நடித்த கட்டா குஸ்தி, மாமன் போன்ற படங்கள் பெரிய ஹிட் ஆகி இருக்கின்றன. அடுத்து அவர் கட்டா குஸ்தி 2 படத்தில் நடித்து வருகிறார். தற்போது ஐஸ்வர்யா லக்ஷ்மி பட்டு சேலையில் அழகிய போஸ் கொடுத்திருக்கும் புகைப்படங்களை பாருங்க.

# ராம்சரண் தீவிர ஐயப்ப பக்தர்


தெலுங்கு திரை உலகில் முன்னணி கதாநாயகனும் சிரஞ்சீவியின் மகனுமான ராம்சரண் தீவிர ஐயப்ப பக்தர் ஆவார். அடிக்கடி விரதம் இருந்து சபரிமலைக்கு சென்று வருகிறார்.

இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

என் தந்தையின் அறிவுரையின்படி 17 வயதில் நான் ஐயப்ப விரதத்தை தொடங்கினேன். இந்த விரதம் என் வாழ்வின் ஒழுக்கத்தை அதிகரித்தது. என் எண்ணங்களை கட்டுப்படுத்த உதவியது. தேவையற்ற விஷயங்களில் இருந்து விலகி மன அமைதியை பெற எனக்கு பெரிதும் உதவியது. என் தந்தையிடம் இருந்து கடின உழைப்பின் தத்துவத்தை நான் பெற்றேன். மற்றவர்கள் 50 மணி நேரம் உழைத்தால் நீ 100 மணி நேரம் உழை என்பது என் தந்தை எனக்கு கற்றுக் கொடுத்த கொள்கை. இப்போது நான் ஒரு நடிகர் மட்டுமல்ல ஒரு பொறுப்பான தந்தையாக இருப்பது எனது முதல் முன்னுரிமை.

என் பிள்ளைகள் வீட்டில் சேட்டை செய்வதை பார்க்கும்போது நான் அவர்களை இன்னும் அதிகமாக ஊக்குவிப்பேன். அவர்களைக் குதிக்க விடுவேன். கீழே விழுந்தாலும் மீண்டும் எழுந்து நிற்பதை உறுதி செய்வேன். சேற்றில் விளையாடினாலும் ஏறி இறங்கினாலும் எனக்கு பயமில்லை. சிறு வயதில் இருந்தே அவர்கள் தைரியத்துடனும், துணிச்சலுடனும் வளர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்களின் அம்மா மிகவும் மென்மையாக கவனித்துக் கொள்வார். குழந்தைகளைப் பற்றி மிகவும் கவலைப்படுவார். அம்மா அவர்களை திட்டும் போதெல்லாம் கிளிங்கரா என்னிடம் வருவாள்.இவ்வாறு அவர் கூறினார்.




SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


அருள்தரும் தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!



உ
ஸ்ரீ வாசவி சகாயம்
கரூர் ஸ்ரீ வாசவி
கன்னிகாபரமேஸ்வரி அம்மன்
ஜெயந்தி தின விழா
அழைப்பிதழ்
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
(15.04.2026 முதல் 27.04.2026 முடிய)


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009



# புதுக் கவிதை பகுதிகள்



நீ நிராகரித்த
காரணத்தால் மட்டும் என்
அன்பு பொய்யாகாது.
அன்பு பெறப்படுவது
வரம் என்றாலும்
கொடுக்கப்படுவதும்
பேரின்பம் தான்!

**லி.நெளஷாத் கான்-**

---

தேவை அளவுக்குரியது
மலிவு மாயவித்தை
அளவு மீறி நிரப்புவது
பயனற்றது பாழாக்கும்..

தூய்மை செய்தல்
மனத்தைக் கழுவுதல்
வாக்கு ஒழுங்கு
வாக்கு நடத்தை
வாக்கு விளைச்சல்..

ஒதுங்குதல் வேறு
ஒதுக்குதல் வேறு
வாழ்வில் இரண்டும்
உண்டு ஒன்றன்று...

தொடங்கிய பிறப்பும்
முடிக்கும் இறப்பும்
இரண்டு விதிகள்..



விதியே மதி
மதியே விதி
உணர்..

**ஹரணி**
தஞ்சாவூர்

---

## ஹைக்கூ !

மேகங்களின் மோதல்
மின்னல் விழிகளின்
மோதல் காதல் !

புவி ஈர்ப்பு சக்தியை
வென்றது
விழி ஈர்ப்பு சக்தி !

பேசாவிட்டாலும்
பார்வையாலேயே
பசியாறி விடுகின்றனர் !

நடந்து செல்கையில்
திரும்பி ஒரு பார்வை
அதிர்வலைகள் !

இமைக்காமல் பார்ப்பதில்
அவளுக்கு நிகர் அவளே !

காந்த அலை வீசும்
கண்கள் வலை !

பரவச நிலை
மிதக்கும் கலை காதல் !

பார்க்காததால்
வரையவில்லை
இரவிவர்மன் !

காதலன் விழிகளுக்கு
அவன் காதலி பேரழகி !

அடிக்கடி
சந்திக்கின்றன
மனஅலைகள் !

சிலையே



சிலையை
ரசித்தது
கோவிலில்
அவள் !

**கவிஞர்**
**இரா .இரவி**

---

இரட்டை வால் பையன்
படத்தை எடுத்து வெளியிட
கோடிகளில் பொருட்செலவு
அனுபவங்களின் கூட்டு
முயற்சி கடின உழைப்பைச்
சுரண்ட எப்படி மனது
இணங்குகிறது
துரோகத்திற்கு துணை
போகிறது தவறு எவர்
செய்திருந்தாலும்
அராபிய சிரச்சேதம்
விதித்திடு அந்த
எண்ணத்தைப் புதைத்திடு




## சுபதினம்

தமிழ்ப் புத்தாண்டு
தவழ்ந்து வருகிறது
சீரான மழை பொழியட்டும்
விவசாயம் செழிக்கட்டும்
நாடு வல்லரசாகட்டும்
புதுமையான தொற்றுக்கள்
அண்டாமலிருக்கட்டும்
கிரிக்கெட்டிலும் மரம்
நடட்டும்
பச்சைப்பசேலாக
மாறட்டும்
புதியதலைவர்
உருவாகட்டும்



**பி. பழனி,**
சென்னை.

---

என் மனசிறையில்
இருந்த வார்த்தைகளுக்கு
விடுதலை கொடுத்தேன்
கவிதை பிறந்தது...!!



மண் பொன்
ஈர்ப்பு
வரிசையில்
நீயும்
நிற்கின்றாய்
என்பதை
நன்றாக புரிந்து
வைத்திருக்கின்றாய்

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

---



## மனசுக்குள்ளே வந்துச்சா !

பள்ளி விடுமுறையில்
மனைவி குழந்தைகளுடன்
ஊருக்கு போகிறேன்
என்றதும்....பல
கணவன்மார்களின்
மனதிற்குள் முதலில் வந்து
விடுகிறது... ' சரக்கு '
' சியர்ஸ் '
'மச்சி இன்னொரு ஃபுல் '
போன்ற குரல்களின்
எதிரொலிப்புகள்

## பூச்சாண்டி !.

"ஒழுங்கா சாப்பிடலைன்னா
பூச்சாண்டி கிட்ட பிடிச்சு
கொடுத்துடுவேன்...
பேய் வரும்,சாமி கண்ணை
குத்திடும்... !"
போன்ற வார்த்தைகள்
தற்கால குழந்தைகளிடம்
எடுபடுவதில்லை..

தற்காலக் குழந்தைகளை
அழாமலும்... அடம்பிடிக்க
வைக்காமலும்.... வேண்டிய
பொறுப்பு கைபேசியிடம்
ஒப்படைக்கப்பட்டு விட்டது !"

## நினைத்ததெல்லாம்..

நாம் நினைக்கிற மாதிரியே
வாழ்க்கையில் எல்லாம்
அமைந்து விடுவதில்லை...
திருமண வாழ்க்கை முதல்...
வீடு வாசலாகட்டும்...
நம்மை ஆளுகின்றவர்
களாகட்டும்.... நாம் பெற்ற
குழந்தைகளாகட்டும்.
இப்படியாக எல்லாம்...
நாம் நினைத்தபடி அமையா
விட்டாலும்..



அமைந்து
விட்டதற்காகவே
நாம்தான்
வாழ்க்கையை
மாற்றிக்
கொள்ள
வேண்டிய
தாகிறது !

**எம்.பி.தினேஷ்.** கோவை

---

## கொடையைச் சிறப்பாய்க் கொடு!

நேரிசை வெண்பா!

ஈட்டிடும் செல்வந்தான்
ஈவதற்கே என்றேதான்
நாட்டினரே வள்ளுவர்
நன்றாய்... அடைந்த
உடைமையின் தன்மையை
உள்ளார்ந்தே எண்ணிக்
கொடையைச்சிறப்பாய்க்
கொடு!

இரக்க குணத்துடன்
இல்லார்க்கே ஈதல்
பரிந்தேதான்
கேட்பார்க்குப் பார்த்து...
விரைந்தே உடைமையின்
தன்மையை உள்ளார்ந்தே
எண்ணிக்கொடையைச்
சிறப்பாய்க் கொடு!

## சித்தர்களைப் போற்றுவோம்!

நேரிசை வெண்பா!

சித்த மருத்துவத்தின்
சீர்மையை நன்றேதான்

வித்தகமாய்ப் போற்றி
விழிப்புணர்வு..மொத்தமாய்க்

காண்பமே!
சித்தர்கள் கண்ட
மருத்துவத்தைப்

பேணுவம் முக்காலும் பீடு!

உடலும் மனமுமே
ஒன்றிச்செயலில்

திடமாய்க்கண்டிடத்
தேர்ந்தே...திடம்பட

மெய்ஞ்ஞானம் பெற்றிட
மேன்மையாய்
எக்காலும்



நெய்மணக்க
சித்தரையே
நேர்!

**முனைவர்**
**இராம.**
**வேதநாயகம்**
திருவண்ணாமலை.

---



## மூத்தோர் சொல் கேள்!

முன்னேற்ற பாதையிலே நாமும் செல்ல
மூத்தோரின் வார்த்தைகளைக் கேட்டல் நன்றாம்
நன்மைகளை நமக்குத்தான் உரைக்கும் நல்லோர்
நலம்நாடும் நல்மனத்தார் மூத்தோர் தாமே
பின்னாளில் வருவதைத்தான் முன்னே சொல்வார்
பின்தங்க விட்டிடாமல் முன்னேர் ஆவார்
சொன்னாலே மூத்தோர்தாம் திசையின் காட்டி
சொல்லாலே ஈர்க்கின்ற சொல்லின் செல்வர்!



வாழ்ந்திட்ட வாழ்க்கையின் சாட்சி யாக
வரமாக நமக்கெல்லாம் நன்மை செய்வார்
தாழ்ந்திடவே விடாமல்நல் லூக்கம் தன்னை
தரமாக வழங்குவதில் அறிஞர் போன்றோர்
வீழ்ந்திடவா வாழ்க்கையென்று எழுச்சி கூட்டி
வீரத்தை உசுப்புகின்ற விந்தை உள்ளம்
ஆழ்ந்திட்ட சிந்தனைகள் உதிக்கும் மூளை
அறநெறிகள் கற்பிக்கும் ஆசான் அன்றோ!

சோகத்தால் சோம்பித்தான் இருக்கை யில்நாம்
சொற்களாலே ஆறுதலை சொல்லும் சொந்தம்
வேகத்தைக் கூட்டுகின்ற வேக மானி
வெளிச்சத்தைக் காட்டுகின்ற அறிவின் ஞானி
தாகத்தைத் தணிக்கின்ற தண்ணீர் மூத்தோர்
தலைமுறைகள் தழைத்திடவே விதைகள் மூத்தோர்
நோகடிக்கும் செயலைத்தான் நிறுத்தி விட்டு
நொடியாமல் நம்மைத்தான் தேற்றும் மாந்தர்

சிக்கலான சூழலைத்தான் தெளிவாய் தீர்க்க
சிறப்பான பண்புகளைப் பகரும் வல்லோர்
தக்கவழி ஆய்ந்துசொல்லும் மேன்மை கொண்டோர்
தலைமகுடம் நமக்களித்து மகிழ்ச்சி காண்போர்
இக்கால சூழலிலே அவரே மூலம்
இனிமையாக உணர்த்துவதில் மூத்தோர் பாலம்
முக்காலம் போற்றிடுவோம் மூத்தோர் சொல்லை
முற்போக்குச் சிந்தனைகள் வகுக்கும் எல்லை!

**கவிஞர் மு.வா.பாலாஜி,** ஒசூர்

---

# புத்தக விமர்சனம்

## சிங்கப்பூரின் பன்முகத்தன்மை ஆய்வாளரின் பார்வையில்!




சிங்கப்பூர் என்றவுடன் பெரும்பாலும் நமக்கு நினைவுக்கு வருவது அந்த நாட்டைச் செதுக்கிய மாபெரும் தலைவர் லீகுவான் இயூ என்றால் மிகையில்லை. சிங்கப்பூரின் பன்முகத் தன்மையை, குறிப்பாக, தமிழ் மொழியும், இலக்கியமும், தமிழர் பண்பாடும், கலாச்சாரமும், சமகாலச் சூழலில் சிங்கைத் தமிழர்களிடையே ஏற்பட்டிருக்கும் வாழ்வியல் மாற்றங்களும், தமிழர்களின் அரசியல் பங்கேற்பும் என பல விஷயங்களை வரலாற்றின் அடிப்படையில் செறிவான பத்துக் கட்டுரைகளைத் தாங்கி வந்திருக்கும் நூல் 'அறிந்ததும் அறியாததும் : சிங்கப்பூர் குறித்த பல்துறை ஆய்வுக் கட்டுரைகள்". இதை எழுதியிருப்பவர் 1991 ஆம் ஆண்டிலிருந்து அங்கு வசித்து வரும் முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி

பன்முகத் தன்மை கொண்ட இவர் நூற்றுக்கணக்கான ஆய்வுக்கட்டுரைகளையும், முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியிருக்கிறார். இவருடைய படைப்புகளுக்கும், செயல்பாடுகளுக்குமென 25க்கும் மேற்பட்ட விருதுகளையும் பட்டங்களையும் இந்தியாவிலும் சிங்கப்பூரிலும் பெற்றவர்.

"தமிழர் திருநாள் தந்த பன்முக எழுச்சி" என்ற கட்டுரையோடு இந்த நூல் ஆரம்பமாகிறது. 1952 ஆம் ஆண்டு மலாயாப் பெரியார் என்றழைக்கப்பட்ட ஈப்போ தமிழ்ப் பிரமுகர் ரெ.ரா. ஐயாறு வழங்கிய ஆலோசனையின் பேரில் ஜனவரி மாதம் 14 ஆம் தேதி இந்த மதச்சார்பற்றத் திருவிழா கொண்டாடப்பட்டது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரிடையேயும் இது ஓர் எழுச்சியை ஏற்படுத்தியது.

இன்றைக்குச் சிறுபான்மையினராகத் தமிழர்கள் இருந்தாலும் அன்று அதிக எண்ணிக்கையில் இருந்தனர். 1965 ஆம் ஆண்டு சிங்கப்பூரின் தந்தை என அறியப்படும் லீகுவான் இயூ தமிழர் திருநாள் கூட்டத்தில் உரையாடியதோடு சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பிரிவு அமைப்பதற்குக் கொள்கை அளவில் ஒப்புதல் கிடைத்தது. இது ஒரு மொழிக்கு அயலகத்தில் அந்நாளில் கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும்.

இன்றைய நிலை குறித்து ஆசிரியர் தனது ஆதங்கத்தைச் சற்றுக் கடினமாகவே வெளிப்படுத்தியிருக்கிறார். அதாவது, புதிய குடியேறிகள் உள்ளூர் தமிழர்களை மதிப்பதில்லை, இளைய சமுதாயம் தமிழ் மொழியின் மீது அக்கறை காட்டுவதில்லை (அங்கு மட்டுமா, இங்கும் அதே நிலைதானே என எண்ணத் தோன்றுகிறது), வீட்டில் தமிழ் பேசுவதில்லை, பொருளாதார நிலையில் உயர்ந்தாலும் தமிழை மறந்து வருகிறார்கள் என்பதோடு அந்த எழுச்சிமிக்கத் திருநாளும் சில ஆண்டுகளாக நின்று போனது எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழிசையின் தொன்மை அறியாதவர்கள் கர்னாடக சங்கீதத்தைத் தொன்மையானது என்று கருதி அதில் மயங்குவதாக குறிப்பிட்டிருக்கும் ஆசிரியர் இசைத் தமிழ் குறித்த இலக்கண நூல்களையும் தொல்காப்பியத்தையும் மேற்கோள் காட்டி தமிழிசையின் பழமையை வலியுறுத்தியிருக்கிறார். அதோடு ஆரியர் வரவால் தமிழர்கள் இழந்த செல்வங்களுள் ஒன்று தமிழிசைச் செல்வமாகும். இது தமிழரின் அறியாமையாலும், மெத்தனப்போக்காலும் ஏற்பட்டதா? என்கிற வினாவை எழுப்புகிறார்.

சிங்கப்பூர் ஆலயங்களில் தமிழிசை ஒலித்தது, திரு அம்பலவாணர் தொடங்கியும் பல ஆண்டுகள் நடத்தியும் வந்த திருமுறை மாநாடு, கலைகளுக்கு அரசின் ஆதரவு என பல அரிய, அறியாத செய்திகளை ஆசிரியர் அறியத் தந்திருக்கிறார்.

ஒரு நாட்டின் மொழிக் கொள்கைக்கும் அந்நாட்டு இலக்கிய வளர்ச்சிக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. சிங்கப்பூரில் 1959 ஆம் ஆண்டு மக்கள் செயற்கட்சி வெற்றி பெற்று பதவிக்கு வந்ததும் ஆங்கில மொழிப் பயன்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்ததோடு, தாய்மொழியை இரண்டாம் மொழியாகவும் கற்க வகை செய்தது. அதன்படி சீனர்கள் சீன மொழியையும், மலாய்காரர்கள் மலாய் மொழியையும், தமிழர்கள் தமிழையும் கற்பதன் மூலம் இருமொழிக் கொள்கை பயன்பாட்டுக்கு வந்தது.

சிங்கப்பூர் அரசு மாற்றுத்திறனாளிகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தையும், அதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள் செயல்படும் விதத்தையும் பெருமிதத்தோடு ஆசிரியர் பாராட்டி எழுதியிருக்கும் கட்டுரை மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

தமிழ்ப் பண்பாடு குறித்து தனது எண்ணங்களையும், தமிழ் மொழி கல்வியை எப்படியெல்லாம் கற்பிக்கலாம் என்றும், என்ன மாதிரியான புதிய அணுகுமுறைகளை பயன்படுத்தி அதை அடுத்தக் கட்டத்துக்கு எடுத்துச் செல்லலாம் என்பது பற்றியும் தனது தெளிவான கருத்துக்களை நூலாசிரியர்



முன் வைத்திருக்கிறார்.

சிங்கப்பூர் அரசியலில் தமிழர்களின் ஈடுபாடு குறித்து எழுதியிருக்கும் அதே வேளையில் பெண்களின் பங்களிப்புக் குறைந்து வருவதைச் சுட்டிகாட்டியிருக்கிறார்.

இக்கால தமிழ் சமூகத்தினரிடையே ஏற்பட்டிருக்கும் வாழ்வியல் மாற்றங்களை, குறிப்பாக பெருந்தொற்றுக் காலத்துக்குப் பிறகு, எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கிறார்.

இறுதியாக, 'சிங்கப்பூர் கல்வி முறையும் மன ஆரோக்கியமும் ஓர் அறிமுகம்' என்கிற கட்டுரையில் உலக நாடுகளின் கல்வி முறையில் சிங்கப்பூரின் கல்வி முறைக்கு தனித்ததோர் இடமுண்டு என்பதோடு ஆரோக்கியமான கல்வி முறையாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டிருக்கிறார். பள்ளிகளின் எதிர்பார்ப்பு, பெற்றோர்களின் எதிர்பார்ப்பு இதனால் மாணவர்களிடையே ஏற்படும் மனநலப் பிரச்சனைகள், அவற்றிலிருந்து மாணவர்களை மீட்க அரசு, கல்வி அமைச்சகம், சுகாதார அமைச்சகம் ஆகியவை மேற்கொள்ளும் முன்னெடுப்புகள் ஆகியவை குறித்து விரிவாகவும், தெளிவாகவும் இக்கட்டுரை பேசுகிறது. புதியக் கல்விக் கொள்கை பற்றி விவாதிக்கும் நம்மவர்கள் இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன.

சிங்கப்பூர் குறித்து வாசகர்களாகிய நாம் அறிந்த விஷயங்களை விட அறியாத பல விஷயங்களைக் கொண்ட தகவல் சுரங்கமாக இந்நூல் அமைந்திருக்கிறது. இன்றையச் சூழலில் பல தரப்பினரையும் கொண்ட சிங்கப்பூர் எந்த அளவுக்கு ஒவ்வொரு மொழிக்கும், பண்பாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்து சமூக, சமய நல்லிணக்கத்தைப் பேணி வருகிறது என்பதை மற்ற நாடுகளும், நாட்டினரும் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

சிங்கப்பூர் பற்றியும் வரலாற்று ரீதியாக தமிழும், தமிழர் பண்பாடும், இலக்கியமும், எப்படி அங்கு தலைத்தோங்கியது என்பது பற்றியும் அதற்குக் காரணமாக இருந்த சமூக ஆர்வலர்கள், அரசியல்வாதிகள், இலக்கியகர்த்தாக்கள் குறித்தும் அறிந்து கொள்வதற்கு பல அரிய தகவல்களைக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் இந்நூல் ஓர் அரிய ஆவணமாகும்.

நூலின் பெயர்: அறிந்ததும் அறியாததும் சிங்கப்பூர் குறித்த பல்துறை ஆய்வுக் கட்டுரைகள்

ஆசிரியர்: முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி

நூலறிமுகம்: சித்தார்த்தன் சுந்தரம்

பதிப்பகம்: ஸ்ரீலக்ஷ்மி வெளியீடு, சிங்கப்பூர்


பக்கங்கள்: 135

விலை (சிங்கப்பூர் டாலர் 15)

---

## நிதானமே நேர்த்தி


எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
வாழ்வில் அர்த்தமும்
ஆனந்தமும் செழிக்க
அவசரம் அவசியம் இல்லை
காண்... வேகத்தின்
உடன்பிறப்பு அவசரம்
பகட்டாய் தோன்றி
பள்ளத்தில் வீழ்த்தும்
தோற்றத்தில் மயங்கினால்
தோல்வி தான் தொடரும்...
ஆயுளைக் குறைக்கும்
ஆபத்தும் அவசரத்தில்
உண்டு காண்... பொறுமை
உள்ளடங்கிய நிதானம்
என்றும்
நிம்மதி அளிக்கும்
நேர்வழிச் சாலை...
என்னினிய இளைஞனே...
மதி மயக்கும்
மேலோட்டப் பார்வையில்
மகத்துவம் இல்லை...
அற்புதம் காட்டும்
அறிவியல் வழியில்
ஆழ்ந்து நோக்கும்
ஆன்மீகப் பார்வையே
ஆறறிவின் எல்லை...
அவசரம் அறிவென்றால்
பொறுமை ஞானம்
என்பதை எளிமையாய் புரிந்து
ஏற்றம் காண்... விதையின்
வீரிய வெளிச்சம்
வினையில் இல்லை...
பூமிக்குள் புதைபடும் போது
போற்றி ஒழுகும்
பொறுமை நேர்த்தியில்...
மண்பாரம் தாங்கும்
மகா அழுத்தத்தில்...!
என்னினிய இளைஞனே...
மிதிவண்டி வேகத்தில்
மெதுவாய் பயணிப்பது
பழுதில்லை... பிழையில்லை...
தடுமாறும் நிலையில்
திசை புரியாமல்
தாறுமாறாய் செல்லும்
திக் திக் பயணமே
தேக திடத்தின் எதிரி!
தாமதத்தை தீண்டத்தகாத
தீட்டாய் எண்ணி முகம்
சுழிக்காதே... விவேகத்தின்
சின்னமாய் உணர்ந்து
செதுக்கப் பழகு... காரியம்
யாவிலும் கச்சித சீர் பெறும்...



கண்ணியம் மிக்க
கனமான கனிவான
வாழ்வு என்றென்றும்
கைகூடும் !

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

---



## அன்போடு வாழ,,,

தாய் தான்பெற்ற பிள்ளைகளை
ஒரே மாதரியாகதான்
பாவிப்பாள் அதனால்தான்
தாயை பூமிக்கு ஒப்பிட்டு
பூமிதாய் என்கிறோம்,,,
அதுக்கூட தவறோயென
தோனுகிறது,,, ஆம் நண்பனே
பூமியிலிருந்து கிடைக்கும்
தண்ணீர் ஒரு இடத்தில்
நல்லத்தண்ணீர் ஒரு
இடத்தில் சப்பத்தண்ணீர்
இன்னொரு இடத்தில்
உப்புத்தண்ணீர்
மற்றொரு இடத்தில்
தண்ணீரேஇல்லாதப்போது
எப்படி தாயோடு
ஒப்பிடுவது,,,?!

வானம்போல
பாரபட்சமில்லாமல்
அன்பை பொழியச்
சொல்கிறோம்,, வானமும்
அப்படிதான் வருடம் முழுவதும்
சிரபுஞ்சியில்
மழைப்பொழிவதாக
வரலாறு சொல்கிறது
நம்மவூரில்
மழையில்லாமல்
காய்கிறது
சிலநேரம் சுனாமியாக வந்து
சீரழிக்கிறது இதுதான்
பாரபட்சமில்லாமையா,,,?!

இயற்கையே இப்படி
இருக்கையில் நாமெல்லாம்
மனிதர்கள்தானே



சின்னச்சின்ன புரிதல்
இல்லாமையையும் சகித்து
அன்போடு வாழ
முயற்சியாவது செய்வோம்
என் இனியதோழமைகளே,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை




### மெகா தொடர் !

கூட்டுக் குடும்ப
வாழ்க்கை சரியாகத்தான்
போய்க்கொண்டிருந்தது...
தொலைக்காட்சியில் அந்த
மெகா தொடர் ஆரம்பிக்கும்
வரை...

அதை பார்க்க தொடங்கிய
பின் வீட்டில் ...
மகனை , மருமகள்
சந்தேகப்படுகிறார்..

மருமகளை , மாமியார்
சந்தேகப்படுகிறார்,

மகன், என்னை சந்தேக
கண்ணோடு பார்க்கிறான்.

வீட்டு வேலைக்காரியை
கூட விட்டு வைக்காமல்
குடும்பத்தை சின்னாபின்ன
படுத்தியது அந்த
மெகாதொடர்...


இருப்பினும்... அந்த
தொடர் ஒளிபரப்பாகும் நேரம்
குடும்பம் சகிதமாய் அமர்ந்து
பார்ப்பது தவிர்க்க முடியாமல்
போய்விடுகிறதென்பது நூறு
சதவிகித உண்மை !

**எம்.பி.தினேஷ்.** கோவை

### மௌனம் !

ஏதாவது
வார்த்தைகளினாலோ...,
இல்லை ஆயுதத்தினாலோ...
என்னை காயப்படுத்தி
விட்டு கூட போ... ஆனால்
மௌனமாய் இருந்து மட்டும்
என்னை கொன்று விடாதே
பெண்ணே !

**எம்.பி.தினேஷ்**
கோவை



### அந்த ஏழு நாட்கள் !

அசைவ கடைகளில்
வரிசையும்.... மதுபானக்
கடைகளில் தள்ளுமுள்ளும்
நடக்கிறதென்றால்
அது ஞாயிறென்றறிக !

பள்ளிக் குழந்தைகள்
அடம்பிடித்து
செல்கிறதென்றால் அது
திங்களென்று அறிக...

தோஷ நிவர்த்தி
பரிகார பூஜைகள்
நடபெறுகிறதெனில் அது
செவ்வாய் !

பொன் கிடைத்தாலும் புதன்
கிடைக்காது என்ற சொல்
புதனுக்குரியதாய் அறிக...

சாய்பாபா கடவுளை
வாரம் ஒரு முறை
நினைவுபடுத்துவது
வியாழன் !

மஞ்சள் பூசிய முகவும்,
தலையில் பூவோடும்
கையில் பிரசாத தட்டோடும்
பெண்கள் நடப்பின் அது
வெள்ளியே !

இறப்பு வீட்டில் ஒரு
கோழியையும் பலி
கொடுக்கிறார்கள் என்றால்
அது சனி...
(சனிப்பிணம் தனியே
போகாதாம் !)



மீண்டும்...
ஞாயிறு
தொடங்குகிறது.
"டாஸ்மாக்
கடையில் !"

**எம்பி.தினேஷ்.** கோவை

### இறையே!

உன்னைத் தவிர வேறு
நினைப்பேது?
நினைவும் கனவும், நிறைவும்
குறையும், கரைய கரைய
உன்னை ஒழிய வேறு ஏதும்
நான் காணிலை.
காணும் இடமெல்லாம்
காணும் எதுவும்
நீயே ஆனபின்
நினைப்பு– மறப்பு எனும்
இருமை இல்லை எனக்கு.
பிறப்பும் இறப்பும் இல்லை;
இனி எனக்கு. அகண்டனே!
அகிலனே!அனாதியே!
செம்பொன் பேரொளியே!
உன் ஒளிக்குள் நான்
ஒருமித்து உள்ளேன்.
என் உயிரொளியில் நீ!
இதை எங்கனம்
நான் விவரிக்க?
விரிக்க இயலாது!



சுருங்கி
உன்னில்
இருக்க
இரும்; என்றே
உரையும்.

**சசிகலா விஸ்வநாதன்**



சக்கரை இருந்தும்
இனிக்கவில்லை
நோயானதால்....

அப்பாவின் வாரிசென
சத்தமின்றி சொன்னது
" நீரிழிவு நோய்"

**ஸ்ரீகாந்த்** திருச்சி

ஒவ்வொரு விடியலுக்கு
பின்னும் ஏதோ ஒரு
நிகழ்வை

தனக்குள் ஒளித்து
வைத்து விளையாடிப்
போகிறது காலம்

நானும்
பக்குவப்பட்டுவிட்டேன்
வருவதை
ஏற்றுக்கொள்வதென

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

இதன் பிறகாவது
நீ சொல்லி இருக்கலாம்..
அந்த மழை நாளில்
ஒரு குடையின் கீழ்
நடந்த போதும்..
பேருந்தின் இருக்கையில்
அருகருகே அமர்ந்த
போதும்.. உன் உள்ளங்கை
விரித்து என்னைப் பற்றி
சிக்கலான இடத்தைக்
கடந்தபோதும்..
எல்லாம் விட்டு
விடியல் கனவில்
வந்து சொல்கிறாய்
என்னை நேசிப்பதாய்..
பதில் சொல்வதற்குள்



கலைகிற
கனவுக்குள்
என்
சாம்ராஜ்யம்
அஸ்தமிக்கிறது
பெருமூச்சுடன்!

**ரிஷபன்**

### ம(ா)யம்

வங்கிகள் கணினி மயம்
கல்லூரிகள் கணினி மயம்
திரைப்படம் கணினி மயம்
முன்பதிவு நிலையங்களில்
கணினி மயம்

வாக்குப் பதிவிலும் கணினி
மயம்

எல்லாம் கணினி மயமாகிற
எங்கள் தேசத்தில், இன்னும்
கணினி மயமாகாமல்



இருக்குமிடம்...
கட்டணக்
கழிப்பறைகள்
மட்டுமே.

**எஸ். தயாளன்**
காட்பாடி
சேவூர்.



### "அம்மாவின் அஸ்தி கரைத்த கடல்"

இன்று கடல் அமைதியாய்
என்னுள்ளம்
கொந்தளிப்பாய்!

கைகளில் மண் சட்டி
அதனுள் அம்மா
வாழ்ந்த வாழ்வின் மிச்சம்!

அலைகள் பாதத்தைத்
தொட்ட போது,
அம்மாவின் கைப்பிடி
போல் இதமாய்
உணர்ந்தேன்!

கரைத்தேன் அஸ்தியை,
கரையவில்லை நினைவுகள்!
அலைகளாய்த்
திரும்பத் திரும்ப
உள்ளத்தில் மோதின!

“சாப்பிட்டியா?” எனக்
கேட்கும் குரல் “சோர்வா?”
எனத்தலை வருடும் கரம்
இப்போது
நீரின் ஆழத்தில்!

அன்று முதல், ஒவ்வொரு
கடற்கரையும் எனக்குத்
தாயின் மார்பாய்!
அலைஓசை யெல்லாம்
தாலாட்டாய்!

அம்மா கடலாய்ப்



பரந்து
விட்டாள்!
நான் இன்னும்
அவள் மடியில்
குழந்தையாய்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்.



### தொல்லியல் அறிவு கொள்.!

கல்லெல்லாம் சிலையாக
செதுக்கி வைத்தார்.. அதை
காலத்தை வென்று எவர் வாழ
வைத்தார்.?

சிதைப்பட்ட சிலைகளைப்
பார்க்கும் போது..
என் கண்ணில் உதிரம்
வழிகின்றதே.!

ஓலையிலே பாட்டுகளை
எழுதி வைத்தார்.. அதில்
ஓராயிரம் குறிப்புகளைப்
பொதித்து வைத்தார்.!

நாளைவரும் தலைமுறைகள்
அறிவதற்குள்..
அதனை போகியிலே
எரித்தாரே.. நெஞ்சுப்
பொறுக்குதில்லையே.!

இசைக்கூத்து எழில் மாடத்
திருக்கோவில்.. கல்வெட்டு
குடைவரைகள்.. இங்கே
ஏராளமாய் முன்னோர்
படைத்தளித்தார்.!தொல்லியலை
நாம் காக்க மறந்து
விட்டோம்!

பாறைகளில் கிறுக்கி
வைத்தோம்.. சிலைகளை
உடைத்து வைத்தோம்..
குகைகளிலே குடித்து விட்டு
படுத்துக் கிடந்தோம்.! இந்த
கொடூரத்தை நம்மாலே
தடுக்க இயலவில்லை.!

தொண்மையினை
தொல்லியலை அருங்காட்சி
காப்பகத்தில் வைத்து
விட்டோம்.! சேர்த்து நம்
பண்பாட்டைக் கல்லறையில்
வைத்து விட்டோம்.!

ஒரு தலை முடியைக்
கூட.. உருவாக்க நம்மாலே
முடிவதில்லை! இதுதான
நிலை.. இனியாவது
இருக்கின்ற தொல்லியலை
காக்கப் புறப்படுவோமே.!

**வே.கல்யாண்குமார்.**

### சித்திரையே வருக வருக




சித்திரையே நித்திலமே வருக
சிறப்புகளை அள்ளியள்ளித் தருக !
முத்தமிழின் சுவைவாழ்வில் பொழிக
முகிழ்வின்பம் கையிலேந்தி வருக !

நல்லாட்சி மலர்ந்திடவே வருக
நல்லவரைத் தேர்ந்தெடுத்தே தருக !
வல்லோரை ஓடவைத்து வருக
வளம்கொழிக்க வாழ்த்துரைத்து வருக !



தங்கிருக்கும் அவலங்கள் நீங்க
தரணியெல்லாம் செழிப்பள்ளிப் பொழிக !
மங்கலமே மனையெல்லாம் பொங்க
மகிழ்ச்சியெனும் மலர்களினைக் கொணர்க !

அன்புதனை மனங்களிலே சேர்ப்பாய்
அரவணைக்க மனிதநேயம் வளர்ப்பாய் !
வன்முறைகள் இல்லாமல் ஒழிப்பாய்
வளர்ச்சியினை ஒற்றுமையால் விளைப்பாய் !

பொய்மைகளின் முகம்கிழித்துக் கொல்வாய்
பொதுமையெண்ணம் பகையழிக்கும் சொல்வாய் !
மெய்மைகளே நலம்பயக்கும் என்பாய்
மேன்மையெலாம் உழைப்பதில்தான் மொழிவாய் !

செந்தமிழைத் தெருவெல்லாம் ஏற்று
செவ்வறமே நமதென்று சாற்று !
சிந்தனையில் புதுமைகளை ஊற்றிச்
சித்திரையே எமைவாழ்த்திப் போற்று !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**




### தலையாட்டிப்பொம்மை..

எத்திசைக்கும் தலையாட்டும்
ஒத்திசைவாய் தலையாட்டும்..

தலையாட்டல்
தப்பித்தல் ஒருவழி
ஆட்டுபவருக்கு அன்பூட்டி
ஆடி நிமிர்ந்து விடும்...

எவர் கருத்து சொன்னாலும்
தலையாட்டித்தன் வழிக்கு
நிமிர்வது போல்
கொள்கையே
தலையாட்டும் தத்துவம்..

வளைந்து கொடுப்பதும்
வசம் இழக்காமல் இருப்பதும்
மற்றவர் புண்படா
மதிப்பதும் தலையாட்டும்
பெருமையன்றோ..

மௌனமாகத் தலையாட்டி
மனசாட்சி சொன்னபடி
மதிப்புற வாழ்வதும்
சொல்லாமல் சொல்லுவது
தலையாட்டிப் பொம்மை
யன்றோ...

**ஹரணி** தஞ்சாவூர்

1. மனிதர்களுக்கு எதில்
ஆர்வம் இருக்கிறதோ
அதற்கு அவர்களுக்கு நேரம்
இருக்கும் எதில் ஆர்வம்
இல்லையோ அதில் நேரம்
இருக்காது

2. கோவிலுக்கு வெளியே
இருக்கும் ஏழையும்
கோவிலுக்கு உள்ளே
இருக்கும் பணக்காரனும்
இருவரும் கடவுளிடம்
கேட்பது பிச்சை தான்

3. விறகு விற்பவன்
கண்ணுக்கு வீணை கூட
கிலோ கணக்கில் தான்
தெரியும்

4. அன்று அடிப்படை
வசதிகள் இல்லாமல்
இருந்தோம் மனசு
சந்தோசமாக இருந்தது
இன்று எல்லா வசதியும்
இருந்தும் மனசு நிம்மதி
இல்லாமல் தான் இருக்கிறது



5.
வசதிகளும்
ஆசைகளும்
குறைவாக
இருக்கும்
இடத்தில்வாழ்வதற்கான
வாய்ப்புகள் அதிகம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி





அசைகின்ற இலைகள்
காற்றின் இருப்பை



உணர்த்து
கின்றன.
அசையாத
வயிறுகள்
மனிதம்
இல்லாமையை!

**கே. பி. ஜனார்த்தனன்**



உன் புன்னகையை
சிந்தி விட்டுப் போ
பறித்து கொள்கிறேன்
சாமந்தி பூக்களை!

அடி நெஞ்சில் குல்பியாய்
இனிக்கிறது–உன் செல்பி!

அப்படியெல்லாம் பார்க்காதே
அணைந்து போகிறது?
இளமை விளக்கு!

நிமிஷங்கள் எல்லாம்
நின்று விட்டால்
நல்லதென தோணுகிறது
உன்னை காதலிப்பதை
காட்டிலும் உன் பார்வையில்
படுதலும் வரம் தான்!

அந்த வரம் தினம்,தினம்
திகட்டாமல்
கிடைத்தாலென்ன!

எந்த தேசம் என்றாள்?
உன்னை காதலிப்பதே
உத்தேசம் என்றேன்!

ப்ரியத்தை தானடி
கேட்டேன்–ஏனடி
பிரிவை பரிசளிக்கிறாய்!

நீ பாதி கொடுத்த
பில்டர் காபியில் மணக்கிறது
உன் வாசம்!

தற்பெருமை வேண்டாமடி
உலக அதிசயங்களே



உலக
அதிசயத்தை
புகைப்படம்
எடுத்துக்
கொண்டால்
எப்படி?!

**லி.நௌஷாத் கான்**



"தன்முனைக் கவிதைகள்"

### "மனம் நிறையும் மண்வாசம்"

1.அமாவாசையில் ஒய்வெடுக்கும்/உலாப்போகும் மதி/
கோடையில் இளைப்பாறும்/சதிராடும் நதி.

2.கழிவுநீர் வழித் தடத்தின்/ஆக்கிரமிப்புகளை அகற்றுவோம்/
குடியிருப்புகளின் சுற்றுப்புறச்/சூழலைப் பாதுகாப்போம்.

3.கிழவியும் குமரியானாள்/குமரியும் கிழவியானாள்/
பாழாய்ப்போன சினிமாவில்/நடிக்கும் கற்பனைகளில்.

4.அன்பிற்கு உண்டோ/அடைக்கும் தாழ்/அதிகமான ஆசைக்கு
நீ/போடு தாழ்ப்பாள்..!

5.காடுகள் அழிந்தன/மரங்கள் சாய்ந்தன/புறாக்களின்
புகலிடம்/ஆலயக் கோபுரங்கள்.

6.பயணத்தை இனிதாக்கும்/வாகனச் சக்கரம்/மனித ஆயுளைத்
தீர்மானிக்கும்/ காலதேவனின் விதிச்சக்கரம்..!

7.சேமித்து வைத்தக்/கணக்கிலடங்கா நன்நூல்கள்/
கண்டிப்பாகக் குறையும்/தண்டனைக்குரிய குற்றங்கள்.

8.மூன்றாம் பிறை/முழுநிலவுப் பருவம்/இவ்விரண்டும்
சொன்னது/இதுவும் கடந்துபோகுமென.

9.மனிதனின் கால்களை/முத்தமிடும் கடலலைகள்/எல்லார்க்கும்
பணிதலை/உணர்த்தும் தத்துவம்..!

10.மீனுக்கும் மானுக்குமிடையேத்/தொடரும் கடும்போட்டி/
அழகியின் கண்களில்/முதலிடத்தைப் பிடிப்பது யாரென்று..!

11.மூலிகைச் சாறு கலந்த/அருவியொரு அருமருந்து/காக்கை
வலிப்புக் காய்ச்சலும்/நீராடியதால் குணமாகியது..!

12.கண்ணைக் கவரும்/கவின்மிகு சிற்பம்/பலராலும்
பாராட்டப்பட்டது/சிற்பியின் தொழில்நுட்பம்.

13.அறுவடை வயலில்/சிட்டுக்குருவி தேடியது/காணாமல்
போயிருந்த/உழவனின் கால்தடத்தை.

14.தேர்த்திருவிழாத் திருநாள்/வழிநெடுக அன்னதானம்/வயிறு
நிறைந்த அடியார்கள்/வீண் விரயமாகும் பிரசாதம்..!

15.கோவலன் நாடகத்தை/மீண்டும் அரங்கேற்றியது/
நகைதிருடியக் குற்றச்சாட்டு/கோவில் காவலாளி மரணம்.

16.எங்கும் இலவசம்/எதிலும் இலவசம்/குறைந்தது உடலுழைப்பு/
பெருகியது மருத்துவப் பிழைப்பு..!

17.தேநீர் வியாபாரிக்கு இளநீர்/இளநீர் வியாபாரிக்கு தேநீர்/
பிடிக்கும் என்பது/அழகின் முரண்.

18.தந்தையர் தினத்தில்/குவியும் நல்வாழ்த்துகள்/பிறவிப்பயனை
அடைந்த/மகிழ்ச்சியில் நாட்காட்டி.

19.அரசியல் கலப்பில்லாததே/சரியான ஆன்மிகம்/மற்றவைகள்
எல்லாம்/வெற்றுக்கூச்சல் ஆரவாரம்.

20.பனையோலை விசிறியோடு/மின்விசிறி இருக்கட்டும்/
காலமெல்லாம் நானுனக்கு/விசிறியானேன்
ஒப்பந்தத்தில்.



21.உள்ளத்தாமரையில்/வழியும் நற்குணத்தேன்/
ருசித்த மனநிறைவுடன்/ ஆசி தரும்
ஆண்டவன்.

**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,**

தன்னம்பிக்கை கவிதைகள் !

### திறந்தே இருக்கும் !

வாய்ப்பு உன் வாசல் வந்து
கதவைத் தட்டுமென்று
காத்திருந்து பொன்னான
பொழுதை வீணாக்காதே !
வாய்ப்பு எனும் வாசல் தேடி
நீ சென்றால் கதவைத்
தட்ட வேண்டாம் ! திறந்தே
இருக்கும் !

-------------------

### மன நிலையைப் பெற்றிடு !

ஒரே ஒரு முறை முயற்சி
செய்து விட்டு தோற்றதும்
துவண்டிடும் மன நிலை விடு!
வெற்றி கிட்டும்வரை முயற்சி
செய்யும்
மன நிலையைப் பெற்றிடு !

-------------------

### வாழ்க்கைவசந்தமாகும்!

வெற்றி சில
நிமிடங்களில் கிட்டிட
வாழ்க்கை திரைப்படம்
அன்று ! பயிற்சி செய் !
முயற்சி செய் !
தோல்வி கிடைத்தால்
காரணத்தை
ஆராய்ந்தால்
அடுத்தப் போட்டியில்
அதனைத் தவிர்த்திடு !
வெற்றி வசமாகும் !
வாழ்க்கை வசந்தமாகும் !
நினைத்தது கிட்டும் !
கவிஞர் இரா .இரவி !
என்னால் முடியும் !
என்றே முயன்றால் !
முயன்றது முடியும் !
என்னால் முடியாது !
என்றே நினைத்தால் !
முயன்றது முடியாது !
யாரை நீ நம்பாவிட்டாலும் !
உன்னை நீ நம்பு !
நினைத்தது கிட்டும் !

### இனிதே பயன்படுத்து !

பொழுதைப் போக்குவதல்ல
பொன்னான வாழ்க்கை !
பொழுதைத் திட்டமிடு !
பழுது நீங்கும் !
ஒவ்வொரு வினாடியும்



ஒவ்வொரு வைரம் !
போன பொழுது
திரும்ப வராது !
இருக்கும் பொழுதை
இனிதே பயன்படுத்து !

**கவிஞர் இரா .இரவி!**


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹1.80
லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
VILLA PLOTS
FOR SALE
BOOK NOW
+91 77083 95118


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF
(Male & Female)
MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD
(Male & Female)
ELECTRICIAN & HELPERS
(Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


குன்னத்தோழம்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெனிமக்கு வரான்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


ADVERTSE
WITH
US
7789941009


WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
Salary: ₹10,000 – ₹15,000
Attractive Incentives
Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families


Manjal Mart
SOMETHING FOR EVERY FAMILY
எந்தவித கலப்படமும் இல்லாத தரமான மஞ்சள், குங்குமம், விபூதி, சந்தனம், ஜவ்வாது, விற்பனைக்கு உள்ளது
www.manjalmart.com


ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


SHRI RAGHAVENDRA SCAN CENTRE
We Are
HIRING
PRO
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING: 9AM-8PM
Attractive salary package
@TONDIARPET
+91 8189997221
+91 9094337745
ADDRESS: THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Channel
Real Choice Channel
Real Choice Channel


THANIGAI
WANTED
ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work ☑ No Age Limit / No Investment
☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
Location: (Nr Mylapore Jn)
Direction: N/ Face
Total Area: 2400 sft
Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com


Special Invitation
To Retired Senior Housewives Businessmen Bankers CAs NRIs Age.30 to 70.Qualification. SSLC/Graduate
★ To Restart Your Second Innings With A Career Business Opportunity
• Flexible Timing Unlimited Incentive.
• No Target Work From Home Training Provided
• For Successful Business.
Contact Mr.Irudaya Raj
Ph.9486634780

**WANTED**
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED
Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000
Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer
Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000
Call/wapp: 9438610756

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

WANTED: FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889



! WANTED !
Muslim Lady Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet



Contact: 99401 46318

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539

WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756

WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

WANTED
M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


DIGITAL
MARKETING
SOLUTIONS
SEO
DIGITAL MARKETING
EMAIL MARKETING
smartpromoters.com


THE BEST CENTRE OF
CAR
WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


ஸர்வேஜநா
சுகிநோபவந்து
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
RAVIKUMAR AND COMPANY
AJANTHA
అజంతా
వక్కపలుకులు
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
சம்பிரதாய
தாம்பூல பாக்கு!
பூஜைக்கு
உகந்த பாக்கு
TRADITIONAL THAMBULA BETEL NUTS
21, North Mada Street, Viilivakkam, Chennai - 600 049 PH: 044 26171341 | emalir ajanthasupari@hotmail.com


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PALANIVEL
PR
TRANSPORT
9677174691
9176232026
NO.1-B, parivallai street, Murugappa nagar,
Manali high road, Ernavoor,Chennai-57


Sri Manjal Mart
YOUR DESIRE WE DELIVER
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com


வாரம் தோறும்
பல்சுவை செய்திகளை
தரும் தரமான
வார இதழ்
பேப்பர்பாய்
www.Paperboy.com

# பல்சுவை களஞ்சியம்




# கோடையில் சருமம் கருக்காமல் இருக்க

கோடைகாலம் ஆரம்பித்துள்ள இவ்வேளையில் அதிக வெப்பம், புழுதி ஆகியவற்றால் சருமத்தில் கருமை, நீர்ச்சத்துக் குறைபாடு, முகப்பரு, பொலிவின்மை போன்ற பல பிரச்சனைகள் ஏற்படலாம்.

இந்நிலையில், கோடையில் சருமம் கருக்காமல் இருக்க சில ஆலோசனைகளை பார்க்கலாம்...

கோடை காலத்தில் சூரியனின் புற ஊதாக்கதிர்கள் சருமத்தை நேரடியாகத் தாக்குகின்றன. இதனால், அயர்ச்சியான தோற்றமும் கருமையும் உண்டாகின்றன. இதைத் தடுக்க 'நான்-நானோ ஜிங்க் ஆக்சைடு' கலந்த மினரல் சன் ஸ்கிரீனை பயன்படுத்த வேண்டும்.

இந்த வகை சன் ஸ்கிரீன், சருமத்துக்குள் ஊடுருவாமல், ஒரு படலமாக மேலேயே இருந்து சூரியக் கதிர்களைப் பிரதிபலித்து வெளியே தள்ளும். வீட்டை விட்டு வெளியே கிளம்புவதற்கு 20 நிமிடங்களுக்கு முன்பாக இந்த வகை சன் ஸ்கிரீனை சருமத்தில் தடவ வேண்டும்.



**நீர்ச்சத்தை அதிகரித்தல்**

கோடைகால வெப்பம் காரணமாக அதிக வியர்வை வெளியேறி விரைவாகவே உடல் நீர்ச்சத்தை இழந்து விடும். இதனால் சருமம் பொலிவற்று காட்சி தரும். இதைத் தடுக்க நாளொன்றுக்கு குறைந்தது 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் பருக வேண்டும். அதிகம் காபி, டீ அருந்துவதை தவிர்ப்பதோடு, தர்பூசணி, வெள்ளரி, ஆரஞ்சு போன்ற நீர்ச்சத்து நிறைந்த பழங்களை அதிகமாக உட்கொள்ள வேண்டும். மேலும் சர்க்கரை அதிகம் கலந்த பானங்களைத் தவிர்ப்பது நல்லது.

**முறையான சுத்திகரிப்பு**

கோடைகாலத்தில் காற்றில் உள்ள மாசு மற்றும் வியர்வையின் காரணமாக சருமத் துளைகள் அடைபட்டு முகப்பருக்கள் உண்டாகின்றன. இதைத் தடுக்கவும், சருமத்தின் இயற்கையான ஈரப்பதத்தைத் தக்கவைக்கவும் மென்மையான பேஸ் வாஷ்களை பயன்படுத்தி தினமும் 2-3 முறை முகத்தைக் கழுவ வேண்டும்.

**மாய்ஸ்சரைசரை மறக்காதீர்கள்**

கோடை காலத்தில் சருமம் வறட்சி அடையாமலும், எண்ணெய்ப் பசையாக மாறாமலும் சமநிலையில் இருப்பது அவசியம். ஆகவே இக்காலத்தில், சருமத்தை ஈரப்பதமாக வைத்துக்கொள்ள பிசுபிசுப்பு இல்லாத, அடர்த்தியற்ற மாய்ஸ்சரைசர்களை தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவது சருமத்துக்கு நல்லது.

**இயற்கையான குளிர்ச்சி தரும் பொருட்கள்**

கோடை வெயிலால் தோலில் எரிச்சல் மற்றும் சிவந்த தழும்புகள் ஏற்படுவது இயற்கையே. இதைக் குறைக்க இயற்கையான குளிர்ச்சி தரும் பொருட்களான கற்றாழை, வெள்ளரிச்சாறு மற்றும் நறுமண எண்ணெய்களைப் பயன்படுத்துவது சருமத்துக்கு உடனடி ஆறுதலைத் தந்து, தோல் எரிச்சலைக் குறைத்து புத்துணர்ச்சியை வழங்கும்.

**நேரடி வெயிலைத் தவிர்த்தல்**

கோடைகாலத்தில் சருமம் கருப்பாகாமல் இருக்க கிரீம்கள் மட்டும் உதவாது. நேரடி வெயிலைத் தவிர்க்க அகலமான விளிம்புள்ள தொப்பிகள், தரமான கூலிங் கிளாஸ், ஸ்கார்ப் அல்லது குடையைப் பயன்படுத்து வதும் சருமத்துக்கு பாதுகாப்பாக அமையும். மேலும் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை தேவை யற்ற பயணங்களைத் தவிர்ப்பதும் பாதுகாப்பாகும்.

**சத்தான கோடைகால உணவு**

வைட்டமின் சி நிறைந்த எலுமிச்சை, நெல்லிக்காய் மற்றும் ஆன்டி ஆக்சிடென்டுகள் நிறைந்த கீரைகளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். சருமம் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்ள பருப்பு மற்றும் கொட்டைப்பருப்புகளை சாப்பிடுவது நல்லது.

# மீம்ஸ்







# விடுகதை



| | |
|---|---|
| இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்? | தேள் |
| பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன? | தலைமுடி |
| உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான்? அவன் யார்? | வெங்காயம் |
| கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்? | கரும்பு |
| மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல அது என்ன? | விழுது |
| இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன? | பட்டாசு |

# உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் இளநீர் தினமும் குடிக்கலாமா?

இளநீரில் அதிக அளவில் பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் சத்துக்கள் இருப்பதால் உயர் ரத்த அழுத்தம் கொண்டவர்களுக்கு இளநீர் சிறந்த தேர்வாக இருக்கும்.

ஏனெனில் இளநீரில் பொட்டாசியம் மிகுதியாக இருக்கிறது. அதனால்



உடலில் உள்ள அதிகப்படியான சோடியத்தை அகற்றவும், ரத்த நாளங்களைத் தளர்த்தவும் உதவும். அதன் காரணமாக ரத்த அழுத்தம் குறையக்கூடும்.

அதேவேளையில் ரத்த அழுத்தத்திற்கான மருந்துக்கு மாற்றாக இளநீரை கருதக்கூடாது. இளநீரை அதிகம் உட்கொள்வதும் ஆபத்தானது. உயர் ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த சுமார் 300 மி.லி. முதல் 500 மி.லி. வரை இளநீர் பருகுவது பாதுகாப்பானது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

எனினும் ரத்த அழுத்தத்திற்கு மருந்து உட்கொள்பவர்கள் மருத்துவர்களின் ஆலோசனை பெற்றே இளநீர் பருகும் அளவை தீர்மானிக்க வேண்டும்.

# ஜோக்ஸ்

1. கிருஷ்ணா ஜெயந்திக்கும்



கம்யூனிசத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன ?கால் குறிகள்.

2. ஈக்கள் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன ?மின்னஞ்சல்

3. குறுக்குச் சுற்றுக்கும் பொறளைக்கும் என்ன ஒற்றுமை ?வயர்- எரியர்து

4. குத்துச்சண்டைக்கும் காளி தேவிக்கும் என்ன ஒற்றுமை ?நாக்-

அவுட்

5.டீ பாவ் அலிக் கும் போங் ஆளுக் கும் யென் நாங் எ வித்யா சாம் ?தீபாவளி அன்னிக்கு பொங்கல் சாப்பாடு ஆனா பி ஓங்கள் அன்னிக்கு தெப்பாவலியாsapda mudiyaadhu.

6.LIC ஓட 14வது ஃப்ளோர்ல சந்தானம் பூசி இருக்காங்க. ஒய் ஏன்?Y aenna adhu Mottai maadi.

7. ஒரு அண்ணனும் தங்கச்சியும் ஓடி வர்றாங்க. அண்ணன் மேல்மூச்சு வாங்கறான். தங்கச்சி?Ava Female moochchu vaanguvaaa

8. எலி(அதாங்க எலி) அடிக்கு யான் வாழ் யிருக்கு?செத்த புடிச்சு தூக்கி போடா.


9. அரவிந்தசுவாமி என்பதன் எதிர்ச்சொல் என்ன ?அரவிந்த் என்னைப் பார்க்கவில்லை

10. LEO காபி எ யான் கல்யாணம் பண்ணிக்க முடியாது?யென்னா "மனமானா" காபி லியோகாபி



# வாங்க சம்பாதிக்கலாம்

## மின்னணு நிறுவனத்தில் பணி



மத்திய அரசின் எலக்ட்ரானிக்ஸ் கார்பரேஷன் ஆப் இந்தியாவில் (இ.சி.ஐ.எல்.,) ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

புராஜக்ட் இன்ஜினியர் 17, டெக்னிக்கல் ஆபிசர் 8, சீனியர் ஆர்டிசன் 7 என மொத்தம் 32 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,

வயது: 18 -30, 18 -33 (26.3.2026ன் படி)

பணிக்காலம்: 1 - 3 ஆண்டு

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரி பார்ப்பு, வாக் - இன் - இன்டர்வியூ.,

இடம்: ECIL Zonal Office, Economist House, Post-Box No. 3148, S-15, Industrial Estate, Guindy, Chennai - 600 032

நாள்: 18.4.2026

விவரங்களுக்கு: ecil.co.in

## இன்ஜினியரிங் நிறுவனத்தில் பணி



மத்திய அரசின் கீழ் செயல்படும் மெட்டலர்ஜிகல் இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் நிறுவனத்தில் அறிவிப்பு வெளியாகி உள்ளது.

அக்கவுன்டன்ட் 14, அசிஸ்டென்ட் பிரிவில் எச்.ஆர்., 2, அட்மின் 2, செக்ரட்ரியல் சர்வீஸ் 6 என மொத்தம் 24 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.பி.ஏ., / ஐ.சி.ஏ.ஐ., / ஐ.சி.எம்.ஏ.ஐ.,

வயது: 18-28 (6.5.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 875. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 625.

கடைசிநாள்: 6.5.2026

விவரங்களுக்கு: careers.meconlimited.co.in

## வங்கியில் சேர விருப்பமா...



மத்திய அரசின் கீழ் செயல்படும் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. 'ஸ்பெஷலிஸ்ட் ஆபிசர்' பிரிவில் ரிஸ்க் மேனேஜ்மென்ட் 18, ரிஸ்க் அனாலிசஸ் 6, மார்க்கெட் ரிஸ்க் 2 என மொத்தம் 26 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,/ எம்.பி.ஏ., / சி.ஏ.,

வயது: 20-35 (28.2.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 850. பெண்கள் / எஸ்.எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 175.

கடைசிநாள்: 30.4.2026

விவரங்களுக்கு: centralbank.bank.in

## ரசாயன நிறுவனத்தில் கெமிக்கல் ஆப்பரேட்டர் பணி



மத்திய அரசின் கீழ் செயல்படும் ராஷ்ட்ரிய ரசாயனம், உர நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஆப்பரேட்டர் (கெமிக்கல்) டிரைனி பிரிவில் மொத்தம் 188 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: ஐ.டி.ஐ., / டிப்ளமோ / பி.எஸ்சி.,

வயது: 18-30 (1.2.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, ஸ்கில் தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லை ன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 700. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 27.4.2026

விவரங்களுக்கு: rcfltd.com

## ரயில்வே சுற்றுலா நிறுவனத்தில் கண்காணிப்பாளர் வாய்ப்பு



ரயில்வே உணவு, சுற்றுலா நிறுவனத்தில் ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'ஹாஸ்பிடாலிட்டி மானிடர்ஸ் (விருந்தோம்பல் கண்காணிப்பாளர்)' பிரிவில் மொத்தம் 84 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.எஸ்சி., / பி.பி.ஏ., / எம்.பி.ஏ.,

வயது: 18-27 (1.4.2026ன் படி)

ஒப்பந்த காலம்: மூன்றாண்டு

ஊதியம்: மாதம் ரூ. 30 ஆயிரம்

பணியிடம்: தமிழகம், கேரளா, கர்நாடகா.

தேர்ச்சி முறை: பூர்த்தி செய்த விண்ணப்பம், அசல் சான்றிதழ்களுடன் 'வாக் இன்' இன்டர்வியூவில் பங்கேற்க வேண்டும்.

இடம்: 6A, The Rain Tree Place, No.9, Mc Nichols Road, Chetpet, Chennai - 600 031

நாள்: 2026 ஏப். 25, 27, 28

நேரம்: காலை 10:30 - மாலை 5:30 மணி.

விவரங்களுக்கு: irctc.com

## சென்னை ஐ.ஐ.டி., கல்லூரியில் எக்சிகியூட்டிவ் வேலை




சென்னை ஐ.ஐ.டி., யில் ஒப்பந்த பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

'ஜூனியர் எக்சிகியூட்டிவ்' பிரிவில் மொத்தம் 6 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு (பி.காம்.,/பி.பி.ஏ.,க்கு முன்னுரிமை)

வயது: 18-28 (26.4.2026ன் படி)

பணிக்காலம்: ஓராண்டு (நீட்டிக்கப்படவும் வாய்ப்பு உள்ளது )

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.

ஊதியம்: மாதம் ரூ. 18 ஆயிரம்.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

கடைசிநாள்: 26.4.2026

விவரங்களுக்கு: icsrs taff.iitm.ac.in

# ஏறுமுகத்தில் பங்குச்சந்தை! சென்செக்ஸ் 1,300 புள்ளிகள் உயர்வு!!



அமெரிக்கா - ஈரான் இடையேயான போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கும் என்ற நம்பிக்கையில் மும்பை பங்குச்சந்தை ஏற்றத்துடன் வர்த்தகமாகி வருகிறது.

அமெரிக்கா - ஈரான் இடையேயான போர்நிறுத்தப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததால், சில நாள்களாக இறங்குமுகத்தில் இருந்த மும்பை பங்குச்சந்தை மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கும் என்ற நம்பிக்கையில் எழுச்சிப் பெறத் தொடங்கியுள்ளது.

புதன்கிழமை காலை 9.30 மணியளவில் மும்பை பங்குச்சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 1,189.51 புள்ளிகள் உயர்ந்து 78,237.08 புள்ளிகளாகவும், தேசிய பங்குச்சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 366.40 புள்ளிகள் உயர்ந்து 24,209.05 புள்ளிகளாகவும் வர்த்தகமாகி வருகிறது.

இதனால், முதலீட்டாளர்களுக்கு ஒரே நாளில் ரூ. 9 லட்சம் கோடி வரை லாபம் கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

சென்செக்ஸில் இண்டிகோ, அல்ட்ராடெக் சிமெண்ட், எல் அண்ட் டி, பஜாஜ் பைனான்ஸ், இஸ்ஃபோசிஸ், ஏசியன் பெயிண்ட்ஸ் மற்றும் பஜாஜ் பின்செர்வ் ஆகியவை 2 முதல் 4 சதவிகிதம் வரை லாபம் ஈட்டின. இவற்றுள் ஐசிஐசிஐ வங்கி மட்டும் சரிவுடன் வர்த்தகமாகி வருகிறது.

அமெரிக்கா - ஈரான் பேச்சுவார்த்தையால் கச்சா எண்ணெய் விலை மிகப் பெரியவைச் சந்தித்திருக்கிறது. நேற்றிரவு பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 100 டாலர்களில் இருந்து 95 டாலராகவும், டபிள்யூடிஐ கச்சா எண்ணெய் விலை 91 டாலராகவும் சரிந்தது.

## ரூபாய் மதிப்பு உயர்வு

அமெரிக்கா-ஈரான் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கும் என்ற நம்பிக்கையின் மத்தியில், கச்சா எண்ணெய் விலை குறைந்திருந்தாலும், டாலர் பலவீனமடைந்திருப்பதால், இன்றைய வர்த்தகத்தில் இந்திய ரூபாய்க்கு நிகரான டாலர் மதிப்பு 20 காசுகள் மீண்டு ரூ.93.15 என்ற நிலையில் நிறைவடைந்தன.

ஈரானுடன் 2ஆம் கட்டப் பேச்சுவார்த்தை, அடுத்த இரண்டு நாட்களுக்குள் நடத்தப்படலாம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியதையடுத்து, முதலீட்டாளர்களின் மனநிலை சாதகமாக மாறியது.

மேற்கு ஆசியாவில் நிலவும் மோதலுக்கு அமைதியான தீர்வு காண இரு தரப்பினரும் முயற்சியை தொடர்ந்ததையடுத்து, கச்சா எண்ணெய் விலை கடும் வீழ்ச்சி அடைந்ததாக அந்நியச் செலாவணி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.


வங்கிகளுக்கு இடையிலான அந்நியச் செலாவணிச் சந்தையில், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு ரூ.93.19 என்ற நிலையில் வர்த்தகம் தொடங்கியது. பிறகு வலுவடைந்து, காலை நேர வர்த்தகத்தில் டாலருக்கு நிகரான ரூ.93.15 என்ற நிலையில் வர்த்தகமானது. இது அதன் முந்தைய நாள் வர்த்தக முடிவில் இருந்த நிலையை விட 20 காசுகள் அதிகம்.

நேற்றைய முன்தினம் (திங்கள்கிழமை) அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 52 காசுகள் சரிந்து ரூ.93.35 என்ற நிலையில் வர்த்தகம் நிறைவு பெற்றது.

அம்பேத்கர் ஜெயந்தியை முன்னிட்டு, நேற்று (செவ்வாய்க்கிழமை) அந்நியச் செலாவணிச் சந்தைக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.




இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## ஸ்ரீ ஸ்வாமி பல்லக்கு புறப்பாடு



ஸ்ரீ உடையவர் திருவவதார உத்ஸவம் நாள-3 ஸ்ரீ ஸ்வாமி பல்லக்கு புறப்பாடு

## சித்திரை திருநாள் உத்ஸவம்



மாமதுரை திருக்கூடல் ஸ்ரீமதுரவல்லி தாயார் சமேத ஸ்ரீகூடல் அழகர் திருக்கோயில் ஸ்ரீ பராபவ வருடப்பிறப்பு சித்திரை திருநாள் உத்ஸவம் மாலை ஸ்ரீ வியூக சுந்தரராஜ பெருமாள் புறப்பாடு கன்டருளி திவ்ய சேவை.

## தமிழ் வருஷப் பிறப்பு




திருவதிகை ஸ்ரீசரநாராயணப் பெருமாள் தமிழ் வருஷப் பிறப்பு ஆஸ்தானம்.

# வேலூர் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் எஸ். ஆர். கே.அப்பு இளைஞர்களுடன் விளையாடி வாக்கு சேகரிப்பு!

**வேலூர், ஏப். 16:**
வேலூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக வேட்பாளராக எஸ். ஆர். கே. அப்பு களம் இறங்கியுள்ளார். இவர் தற்போது சூறாவளி பிரச்சாரம் செய்து வருகிறார்.

குறிப்பாக வழியில் காண்போரை எல்லாம் வணங்கி இரட்டை இலை சின்னத்துக்கு வாக்களிக்குமாறு பணிவுடன் கேட்டு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

திமுகவின் வாக்குறுதிகள் காற்றிலே பறக்க விடப்பட்டதை விளக்கிக் கூறி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார் அதிமுக வேட்பாளர் எஸ். ஆர். கே. அப்பு.

இதில் வாக்கு சேகரிக்கும் போது புதிய நடைமுறையை புகுத்தி இளைஞர்களுடன் கேரம் போர்டு, கிரிக்கெட், பேட்மிட்டன் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகளை



விளையாடி அவர்களை மகிழ்வித்து இளைஞர்களின் வாக்குகளை கவர்ந்து வருகிறார் எஸ். ஆர். கே. அப்பு என்று சொன்னால் அது மிகையாகாது. வேலூரில் நூதன முறையில் இளைஞர்களிடம், அதாவது அவர்களுடன் சேர்ந்து விளையாடி வாக்கு சேகரித்தது வாக்காளர்களை வெகுவாக கவர்ந்தது குறிப்பிடத்தக்கது. எளிமையுடனும், நட்புடனும் பழகி வருவது அனைவரையும் வெகுவாக கவர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக வேலூர் தொகுதியில் அதிமுகவின் கை ஒரு படி ஓங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்த நூதன வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியின் போது அதிமுக நிர்வாகிகள் மற்றும் பாஜக உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் வாசவி ஜெயந்தி தின விழாவை முன்னிட்டு 1-ஆம் நாள் நம் வாசவி அம்மன் ஸ்ரீபார்வதி அலங்காரத்தில்

**கரூர், ஏப்.16:**
கரூர் மாவட்டம் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால், வெட்டிவேர் மாலையுடன் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, பக்தி பாடல்களை பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. முதல் நாள் அலங்காரம் ஸ்ரீ பார்வதி அலங்காரத்தில் ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. இன்றைய உபயதாரர் : m/s AR பாலகிருஷ்ணன் சன்ஸ் கரூர்.தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை




## ஸ்ரீபாஷ்யகாரர் அவதார உத்ஸவம்



திருமயிலை ஸ்ரீஸ்ரீநிவாஸப் பெருமாள் சன்னதி ஸ்ரீபாஷ்யகாரர் அவதார உத்ஸவம் புறப்பாடு மூன்றாம் நாள்



திருமலை ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் 3ம் திருநாள் காலை திவ்ய சேவை.

# வந்தவாசி பகுதியில் பிரதோஷ வழிபாடு..!




**வந்தவாசி, ஏப் 16:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நேற்று பிரதோஷ வழிபாடு வெகு விமரிசையாக நடைபெற்றது. மேலும் நந்தி பகவான் மற்றும் மூல மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

இதைப் போல வந்தவாசி ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற பிரதோஷ வழிபாட்டில் உற்சவ மூர்த்தி மேளதாளத்துடன் கோவில் பிரகாரத்தில் வீதியுலா வந்தார்.

செய்தியாளர்: பா. சீனிவாசன், வந்தவாசி.

# திவ்ய சேவை





ஸ்ரீபெரும்புதூர் ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் 3ம் திருநாள் காலை திவ்ய சேவை.

## பரபவ நாம சம்வத்சர வருடப்பிறப்பு



அரியக்குடி ஸ்ரீதிருவெங்கமுடையன் குருட சேவை நேற்று மாலை பரபவ நாம சம்வத்சர வருடப்பிறப்பு தௌவறானும்


## குருவாயூரப்பன் கிருஷ்ணரை போன்ற ஸ்ரீபழங்களால் சிறப்பு அலங்காரம்



தமிழ் புத்தாண்டை முன்னிட்டு நேற்று தென்னாங்கூர் ஸ்ரீபாண்டுரங்கன் திருக்கோவில் குருவாயூரப்பன் கிருஷ்ணரை போன்ற ஸ்ரீபழங்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு காட்சியளித்தார்

## ரவுசு மணி

ஒரு சிற்பி
கல்லுக்கு
உயிர் கொடுத்து
சிலை ஆக்குவது
போல் இல்லாமல்
விவசாயி
விதையை
மரமாக வளர்ப்பது
போல்
குழந்தைகளை
வளருங்கள்



ராஜகோபாலன்.J
பெங்களூரு

# வாக்கு எண்ணும் மையத்தில் ஆய்வு



**திருவண்ணாமலை ஏப், 16:**
திருவண்ணாமலை மாநகராட்சியில் உள்ள வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் முன்னேற்றம் குறித்தும், பாதுகாப்புகள் கட்டமைப்புகள் குறித்தும் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## அஞ்சல் வாக்குச்சாவடி மையத்தில் ஆய்வு




**திருவண்ணாமலை ஏப், 16:**
சிஷ்யா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள அஞ்சல் வாக்குச்சாவடி மையத்தில் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு.க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் வாக்குச்சாவடி மையத்தில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: தமிழகக் கோயில்களின் அறியப்படாத அதிசயங்கள்




திருக்கண்ணங்குடி பெருமாள் கோவிலில் ஆண்டுக்கு ஒருநாள் மட்டும் விபூதி கொடுக்கிறார்கள். இதை வைணவர்களும் பூசிக் கொள்கிறார்கள். இதை ஒரு விழாவாக 'திருநீரணத் திருவிழா' என்று கொண்டாடுகிறார்கள்.

திருக்காளஹத்தியில் உள்ள காளஹஸ்தீஸ்வரர் கோவிலில் பச்சை கற்பூரத்தை தண்ணீரில் கலந்து அந்த தீர்த்தத்தை சங்கின் மூலம் வழங்குகிறார்கள். இங்கு திருநீறு வழங்குவது கிடையாது. காரணம் கண்ணப்பரால் அபிஷேகம் செய்யபப்பட்ட சுயம்பு மூர்த்தி காளஹஸ்தீஸ்வரர் ஆவார்.

சிருங்கேரியில் கல்விக் கடவுளான சரஸ்வதிதேவி மாணவியாக, படிக்கின்ற கோலத்தில் காட்சி தருகிறாள்.

சிவனின் (சுயம்புலிங்கம்) எதிரில் சூரிய பகவான் நின்று சிவதரிசனம் செய்யும் கோலத்தினை தஞ்சை பரிதியப்பர் கோவில் பாஸ்கரேஸ்வரர் ஆலயத்தில் மட்டுமே காணலாம்.

ஈரோடு ராட்டைசுற்றிபாளையம் பைரவர் கோயில் உள்ளது. இங்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய 33 அடி உயர காலபைரவர் சிலை இங்கு அமைந்துள்ளது சிறப்பு.

கேரள மாநிலம் கோட்டயம் அருகே உள்ள வன்னியர் விநாயகர் கோவிலில், விநாயகரின் மடியில் குழந்தை கண்ணன் வீற்றிருப்பது சிறப்பு.

ஆடுதுறைக்கு அருகேயுள்ள ஊர் மருத்துவக்குடி. இங்கு உள்ள ஆலயத்தில் தேள் போன்ற வடிவமைப்பில் விநாயகர் விருச்சிகப் பிள்ளையாராக அருள்கிறார்.



சென்னை சவுகார்பேட்டையில் உள்ள பைராகி மடம் திருவேங்கடம் ஏழுமலையான் ஆலயத்தில், பெண் வடிவிலான கருடனை தரிசிக்கலாம்.

சென்னை வண்டலூர் செல்லும் சாலை புதுப்பாக்கத்தில் அமைந்துள்ள கஜகிரி என்ற மலை மீது அமைந்துள்ளது வீர ஆஞ்சநேயர் கோவில். 108 படிகள் ஏறிச் சென்றால் மலை மீது அற்புதமாக, அமைதியாக அருள் செய்யும் ஆஞ்சநேயரை தரிசிக்க முடியும். பவுர்ணமி தோறும் இங்கு ஆஞ்சநேயரே கிரிவலம் வருவதாக நம்பிக்கை. அந்த சமயத்தில் நாமும் கிரிவலம் வந்து வழிபட்டால் நாம் நினைத்த காரியங்கள் அனைத்தும் நடக்கும் என்பது நம்பிக்கை.

பொதுவாக சூரிய பகவானும், சனி பகவானும் நேருக்கு நேர் பார்க்க மாட்டார்கள். ஆனால் தஞ்சை மாவட்டம் திருவலஞ்சுழியில் உள்ள கபர்தீஸ்வரர் கோவிலில் வெளி பிரகாரத்தில் சூரிய பகவானும், சனீஸ்வரனும் நேருக்கு நேர் பார்த்தபடி அமர்ந்த காட்சியளிக்கின்றனர்.

திருவலஞ்சுழி வெள்ளை விநாயகர் கோவில்: கும்பகோணத்திற்கு அருகில் உள்ள, கடலிலிருந்து எடுக்கப்பட்ட நுரை (FOAM) போன்ற பொருளால் ஆன வெள்ளைப் பிள்ளையார் கோவில்

திருக்கண்ணங்குடி பெருமாள் கோவில்: இங்கு ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே விபூதி வழங்கப்படுகிறது. இது 'திருநீரணத் திருவிழா' என அழைக்கப்படுகிறது.

காளஹஸ்தீஸ்வரர் கோவில் (திருவள்ளூர் மாவட்டம்): இங்கு பச்சை கற்பூரத்தை தண்ணீரில் கலந்து, சங்கு மூலம் தீர்த்தமாக வழங்குகிறார்கள். இங்கு திருநீறு கொடுக்கும் பழக்கம் இல்லை.

சிருங்கேரி சாரதாம்பாள் கோவில்: கல்விக்கு அதிபதியான சரஸ்வதி தேவி, இங்கு மாணவியாக, புத்தகம் ஏந்திப் படிக்கும் கோலத்தில் காட்சி தருகிறார்.

பரிதியப்பர் கோவில் (தஞ்சை): சிவனின் (சுயம்புலிங்கம்) எதிரே சூரிய பகவான் நின்று சிவனை தரிசிக்கும் கோலத்தை இங்கு மட்டுமே காண முடியும்.

கிருஷ்ணாபுரம் கோவில் (திருநெல்வேலி): சிறிய கிராமக் கோவிலாக இருந்தாலும், இதன் சிற்பக்கலை மிகவும் நுட்பமானது மற்றும் வியக்கத்தக்கது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### பொதுத்துறை நிறுனத்தில் வேலை வேண்டுமா?

அறிவிப்பு விளம்பர எண்.: 07/2026

பணி: Project Engineer தகுதி : பொறியியல் துறையில் சிஎஸ்இ, ஐடி பிரிவில் 60% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் மூன்று ஆண்டுகள் பணிஅனுபவம் பெற்றிருக்க வேண்டும். சம்பளம் : முதலாம் ஆண்டும் மாதம் ரூ. 40,000, இரண்டாம் ஆண்டு மாதம் ரூ. 45,000, மூன்றாம் ஆண்டு மாதம் ரூ.55,000 வயது வரம்பு : 33-க்குள் இருக்க வேண்டும்.

பணி: Technical Officer, தகுதி : பொறியியல் துறையில் சிஎஸ்இ, ஐடி பிரிவில் 60% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் ஒரு ஆண்டு பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். சம்பளம்: முதலாம் ஆண்டு மாதம் 25,000, இரண்டாம் ஆண்டு மாதம் ரூ. .28,000, மூன்றாம் ஆண்டு மாதம் ரூ.31,000 வயது : 30-க்குள் இருக்க வேண்டும்.

பணி: Assistant Project Engineer தகுதி : பொறியியல் துறையில் 60% மதிப்பெண்களுடன் எலக்ட்ரானிக்ஸ் பிரிவில் தேர்ச்சியுடன் ஒரு ஆண்டு பணி அனுபவமும் பெற்றிருக்கவேண்டும். சம்பளம்: மாதம் ரூ.25,506

வயது: 30-க்குள் இருக்க வேண்டும்.

பணி: Senior Artisan தகுதி: ஐடிஐ தேர்ச்சியுடன் 2 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சம்பளம்: மாதம் ரூ.23,368. வயது : 30-க்குள் இருக்க வேண்டும். வயதுவரம்பு சலுகை: உச்ச வயது வரம்பில் எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும் சலுகை வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: www.ecil.co.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து, அதனுடன் தேவையான அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களையும் சுய சான்றொப்பம் செய்து, அசல் சான்றிதழ்களுடன் நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளவும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் மற்றும் இடம்:

நாள்: 18.4.2026

இடம்: ECIL Zonal Office, Economist House, Post Box No. 3148, S-15, Industrial Estate, Guindy, Chennai - 600 032.

விண்ணப்பிப்போரின் கூடுதல் விவரங்களுக்கு இங்கே கிளிக் செய்து தெரிந்துகொள்ளவும்.

## சிறையில் இருந்து பரோலில் வந்து தாயாரின் இறுதிச் சடங்கில் பங்கேற்ற சவுக்கு சங்கர்




**சென்னை, ஏப். 16:**

தனது தாயாரின் இறுதிச் சடங்கில் பரோலில் வந்து சவுக்கு சங்கர் பங்கேற்றார். சவுக்கு சங்கர் தாயாரின் மறைவுக்கு பழனிசாமி உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர்.

சவுக்கு மீடியா சிஇஓவும் யூடியூபருமான சங்கர் மீதான இரு மோசடி வழக்குகளில், ஆதம்பாக்கம், சைதாப்பேட்டை போலீஸார் அவரை 2025 டிச.13-ம் தேதி கைது செய்தனர். அவரை ஜாமீனில் விடுவிக்கக் கோரி அவரது தாயார் கமலா தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் மார்ச் 25 வரை அவருக்கு இடைக்கால நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது. அன்றையதினம் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், அவரை தலைமறைவு குற்றவாளியாக அறிவித்து போலீஸார் தேடி வந்தனர். பின்னர் ஆந்திராவில் சவுக்கு சங்கர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கிடையே உடல்நலக் குறைவு காரணமாக, சவுக்கு சங்கரின் தாயார் கமலா நேற்று முன்தினம் காலமானார். பெங்களூரு வில்சன் கார்டன் மின் மயானத்தில் நேற்று நடைபெற இருந்த தயாரின் இறுதிச் சடங்கில், பங்கேற்க சவுக்கு சங்கருக்கு ஏப்.13 இரவு 8 மணி முதல் ஏப் .16 இரவு 8 மணி வரை பரோல் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தாயார் கமலாவின் இறுதிச் சடங்கில் சவுக்கு சங்கர் கலந்து கொண்டார்.

## ராமேசுவரம் மீனவர்கள் 4 பேர் இலங்கை கடற்படையால் கைது.. சிறையில் அடைப்பு..

**ராமேசுவரம், ஏப்.16:**

ராமேசுவரத்தில் இருந்து மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதும், படகுகள், வலைகள் சேதப்படுத்தப்படுவதும், கைது செய்யப்படும் சம்பவங்களும் அவ்வப்போது நடக்கின்றன. இந்தநிலையில் ராமேசுவரத்தில் இருந்து நேற்று முன்தினம் 200-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு சென்று இருந்தனர்.



இதில் ராமேசுவரத்தை சேர்ந்த சேசூராஜா என்பவருக்கு சொந்தமான ஒரு விசைப்படகில் சக்திவேல் (வயது 54), அருணகிரி (54), சேகர் (66), பாலு (54) ஆகிய 4 மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர். இந்த மீனவர்கள் நடுக்கடல் பகுதியில் மீன்பிடித்து கொண்டு இருந்தபோது இலங்கை கடற்படையினர் அங்கு வந்தனர். எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மேற்கண்ட 4 மீனவர்களையும் கைது செய்தனர்.

அவர்களின் விசைப் படகையும் பறிமுதல் செய்தனர். நடுக்கடலில் சிறைபிடிக்கப்பட்ட ராமேசுவரம் மீனவர்கள் 4 பேரையும் இலங்கை கிளிநொச்சி கிராஞ்சி கடற்படை முகாமுக்கு அழைத்துச்சென்று விசாரணை நடத்தினர்.

பின்னர் ஏப்-17ம் தேதி வரை மீனவர்களை வவுனியா சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் நேற்று இரவில் இருந்துதான் தொடங்கி உள்ளது.

## உதயநிதி சொத்து விவரம் தொடர்பான வழக்கு: வருமான வரித்துறைக்கு ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, ஏப்.16:**

சென்னை ஐகோர்ட்டில், குமாரவேல் என்பவர் உதயநிதி ஸ்டாலின் சொத்து விவரங்களில் முரண்பாடு உள்ளதாக கூறி மனு தாக்கல் செய்து இருந்தார். அவர் தாக்கல் செய்த மனுவில் "சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டசபை தொகுதியில் வாக்காளராக உள்ளேன்.

இந்த தொகுதியின் எம்.எல்.ஏ.வாக துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளார். இவர், கடந்த 2021-ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் இந்த தொகுதியில் போட்டியிடும்போது வேட்புமனு தாக்கல் செய்தார். அதில், ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனத்தில் 7 கோடியே 36 லட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ளதாக கூறியிருந்தார். தற்போது அவர் தாக்கல் செய்துள்ள வேட்புமனுவில் ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனத்தில் ரூ.2 கோடியே 63 லட்சம் முதலீடு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



அதேபோல், 2021-ம் ஆண்டு தாக்கல் செய்த வேட்புமனுவில் 11 கோடியே 6 லட்சம் ரூபாய் ஸ்னோ ஹவுசிங் நிறுவனத்திற்கு கடன் கொடுத்துள்ளதாக கூறியிருந்தார். ஆனால், தற்போது தாக்கல் செய்துள்ள வேட்புமனுவில் ரூ.10 கோடி என குறிப்பிட்டுள்ளார். 2020-ம் ஆண்டுக்கு முன்பு ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் வருமானம் இருந்ததாக குறிப்பிட்டிருந்த உதயநிதி ஸ்டாலின், தற்போது 10 கோடியே 98 லட்சம் ரூபாய் வருமானம் உள்ளதாக கூறியுள்ளார். அவருக்கு வருமானம் மற்றும் சொத்துகள் அதிகரித்துள்ளது. ஆனால், அதற்காக உரிய விளக்கங்கள் தெரிவிக்கப்படவில்லை.

இதுபோல், சொத்து விவரங்கள் குறித்து தவறான மற்றும் முழுமையற்ற தகவல்களை வேட்பாளர்கள் தெரிவிப்பது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்திற்கு விரோதமானது என்பதால், இந்த முரண்பாடுகள் குறித்து விசாரணை நடத்த வருமான வரித்துறைக்கும், கம்பெனி விவகாரத்துறைக்கும் உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி, நீதிபதி ஜி. அருள்முருகன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், வருமான வரித்துறை அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டனர். மேலும் மனு மீதான விசாரணையை வரும் 20 ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

## மீண்டும் உயர்ந்த தங்கம் விலை...

**சென்னை, ஏப்.16:**

தங்கம் விலை நேற்று தங்கம் விலை ஒரு கிராம் ரூ. 14,220-க்கும், ஒரு சவரன் ரூ.1,13,760-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில், சென்னையில் ஆபரண தங்கத்தின் விலை (15.04.2026 - புதன்கிழமை) மீண்டும் உயர்ந்துள்ளது. அதன்படி, சென்னையில் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 800 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,14,560-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் கிராமுக்கு ரூ.100 உயர்ந்து, ஒரு கிராம் ரூ. 14,320-க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ஒரு கிராம் ரூ.275-க்கும், கிலோவுக்கு ரூ. 10 ஆயிரம் உயர்ந்து ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 75 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## 14 வயது சிறுமியிடம் அத்துமீறிய முதியவர் போக்சோ சட்டத்தில் கைது

**தூத்துக்குடி, ஏப்.16:**

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, பசுவந்தனை சாலையில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் கணபதி (வயது 61). இவர் 14 வயது சிறுமியிடம் பாலியல் ரீதியாக அநாகரிகமாக நடந்துகொண்டதாக கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமியின் தரப்பில் அளிக்கப்பட்ட புகாரை தொடர்ந்து, கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் முதியவர் கணபதி சிறுமியிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து போலீசார் அவர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கணபதியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர். பின்னர் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது..

## ஓடும் ரெயிலில் பெண் பயணியிடம் நகை பறிக்க முயற்சி: அறநிலையத்துறை ஊழியர் கைது

**தென்காசி, ஏப்.16:**

கடந்த 12-ம் தேதி நெல்லையிலிருந்து செங்கோட்டைக்குச் சென்ற பயணிகள் ரெயிலில் கீழப்பாவூர் பகுதியைச் சேர்ந்த சாந்தி என்பவர் பயணம் செய்தார். ரெயில் தென்காசி ரெயில் நிலையத்தை வந்தடைந்தபோது, அதே பெட்டியில் இருந்த மர்ம நபர் ஒருவர் திடீரென சாந்தியின் கழுத்தில் இருந்த நகையைப பறிக்க முயன்றுள்ளார். சாந்தி கூச்சலிடவே, பிடிபடுவோம் என்ற பயத்தில் அந்த நபர் ரெயிலிலிருந்து இறங்கி தப்பி ஓடிவிட்டார். பாதிக்கப்பட்ட சாந்தி அளித்த புகாரின் பேரில், தென்காசி ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். ரெயில்வே டி.எஸ்.பி. லட்சுமணன் மேற்பார்வையில், இன்ஸ்பெக்டர் கேத்தரின் சுஜாதா தலைமையிலான தனிப்படை போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். போலீசாரின் விசாரணையில் நகை பறிக்க முயன்றவர் தென்காசி மாவட்டம் குற்றாலம் கீழரத வீதியைச் சேர்ந்த கருப்பசாமி (வயது 55) என்பது தெரியவந்தது. இவர் குற்றாலம் குற்றாலநாதர் கோவிலில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் தமிழ் புலவராகப் பணியாற்றி வருவது உறுதி செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து கருப்பசாமியைப் போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# தொகுதி மறுசீரமைப்பு, மத்திய அரசின் பாரபட்சமான நடவடிக்கை: விஜய் கண்டனம்



**சென்னை, ஏப்.16:** தொகுதி மறுசீரமைப்பு, மத்திய அரசின் பாரபட்சமான நடவடிக்கை என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தவெக தலைவர் விஜய் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"மத்திய அரசு, மக்களவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை தற்போதுள்ள 543-இலிருந்து 850 ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட 'அரசியலமைப்பு (131ஆவது திருத்தம்) மசோதா, 2026' மூலம், மக்களவையின் அமைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை முன்மொழிந்துள்ளது. இந்த மசோதா, நாளை தொடங்க உள்ள நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத் தொடரில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா, நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட இருப்பதைத் தமிழக வெற்றிக் கழகம் வரவேற்கிறது. மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவைத் தவிர்த்து, 'அரசியலமைப்பு (131ஆவது திருத்தம்) மசோதா, 2026 நிறைவேறினால், தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்திற்கும், வட மாநிலங்களின் பிரதிநிதித்துவத்திற்கும் இடையே உள்ள விகிதாசார வேறுபாடு, வெகுவாக அதிகரிக்கும்.

அப்படி நிகழ்ந்தால், மொழி, கலாசாரம் மற்றும் மாநில உரிமைகள் சார்ந்த சட்டங்கள் இயற்றுதல் மற்றும் மத்திய அரசின் கொள்கைகள் வகுத்தல் உள்ளிட்டவற்றில் தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறைந்து, வட மாநிலங்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும். இதனால் தென் மாநில மக்களின் கோரிக்கைகள், குறிப்பாக மத்திய அரசின் அறிவிப்புகளை முழுமையாகக் கடைப்பிடித்த தமிழ்நாட்டு மக்களின் குரல், நாடாளுமன்றத்தில் ஒலிக்காமல் போகும். இது மத்திய அரசின் பாரபட்சமான நடவடிக்கை ஆகும். மத்திய அரசின் அறிவிப்பை, ஆண்டாண்டுக் காலமாகக் கடைப்பிடித்த ஒரு மாநிலத்திற்கு "தண்டனை"யையும், அதைப் பின்பற்றாத மாநிலங்களுக்கு "வெகுமதி"யும் தருவது போல் இந்த மசோதா நிறைவேற்றம் அமைகிறது. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், நிதிப் பகிர்விலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை - விகிதாசாரம் மாறுவது, மாநிலத்திற்கான நிதி ஒதுக்கீட்டிலும் எதிரொலிக்கும்.

ஏற்கெனவே தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் நிதிப்பகிர்வில் இழப்பைச் சந்தித்து வருவதாக மாநில அரசு, மத்திய அரசு மீது குற்றம் சாட்டி வருகிறது.

பட்ஜெட் தாக்கலின் போதும் தமிழ்நாட்டிற்குப் போதுமான நிதியையும் திட்டங்களையும் மத்திய அரசு தருவதில்லை. அப்படி இருக்கையில், தொகுதி மறுவரையறை செய்யப்பட்ட பிறகு, மக்கள் தொகை அடிப்படையிலான திட்டங்களுக்கான நிதி மேலும் குறையவே வாய்ப்புள்ளது.

இப்படிப் பல்வேறு வகைகளில் தென் மாநிலங்களுக்கு, குறிப்பாகத் தமிழ்நாட்டிற்குப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய அரசியலமைப்பு (131ஆவது திருத்தம்) மசோதா, 2026 நிறைவேற்றும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்றும், தற்போது உள்ள பழைய நடைமுறையே தொடர வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## க்ரைம் கார்னர்

### சாத்தூர் திமுக வேட்பாளர் வீட்டில் 122 பவுன் நகை திருட்டு

**சாத்தூர், ஏப்.16:** சாத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக சார்பில் கடற்கரைராஜ் போட்டியிடுகிறார். இவர் சாத்தூர் அருகே உள்ள வெங்கடாசலபுரத்தைச் சேர்ந்தவர். இவரது மனைவி நிர்மலா, முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர். நேற்று முன்தினம் இரவு சாத்தூர் தொகுதிக்கு உட்பட்ட சத்திரப்பட்டி பகுதியில் திமுக வேட்பாளர் கடற்கரை ராஜுவை ஆதரித்து மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் பிரச்சாரம் செய்தார். வேட்பாளர் கடற்கரை ராஜ் வீட்டில் தேர்தல் பணி தொடர்பாக பலர் வந்து சென்றனர். அதைப் பயன்படுத்தி மர்ம நபர்கள் சிலர் நேற்று முன்தினம் இரவு வீடு புகுந்து 122 பவுன் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். நேற்று காலையில் வீட்டிலிருந்த பீரோவை குடும்பத்தினர் பார்த்தபோது அதிலிருந்த நகைகள் திருடுபோனது தெரிய வந்தது. இதுகுறித்து, கடற்கரை ராஜின் மகள் வத்சலாதேவி சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். தடயவியல் நிபுணர் எஸ்ஐ சுரேஷ்குமார் தடயங்களைச் சேகரித்தார். மோப்ப நாயும் துப்புத்துலக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. மாவட்ட எஸ்பி ஸ்ரீநாதா விசாரணை மேற்கொண்டார். மேலும் தனிப்படை அமைத்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### தொழில் நிறுவன உரிமையாளரிடம் கடனை திரும்ப கேட்டு காரில் கடத்தி தாக்கிய இருவர் கைது

**சென்னை, ஏப்.16:** சென்னை, வளசரவாக்கம், எம்.ஜி.சக்கரபாணி நகரில் வசித்துவருபவர் சுரேஷ்குமார் (34). ஒன்றரை ஆண்டுகளாக ரெடிமேடு காம்பவுண்டு சுவர் தயாரிக்கும் தொழில் செய்து வருகிறார். தொழில் வளர்ச்சிக்காக கடந்த ஜனவரி மாதம் நெற்குன்றத்தைச் சேர்ந்த பாலாஜி (32) என்பவரிடம் ரூ.2.10 லட்சம் கடன் பெற்றுள்ளார். பின்னர், கடந்த மாதம் வரையில் பல்வேறு தவணைகளாக ரூ.1 லட்சத்து 10 ஆயிரம் கொடுத்துள்ளார். மீதமுள்ள பணத்தை செலுத்தவில்லை. எனவே பாலாஜி கடந்த 11-ம் தேதி தனது நண்பருடன் சுரேஷ்குமாரின் வீட்டுக்குச் சென்று பணத்தை கேட்டுள்ளார். அப்போது இரு தரப்பினரிடையே தகராறு ஏற்பட்டது. இதனால் கோபம் அடைந்த பாலாஜி இருவரும் சுரேஷை தாக்கி காரில் கடத்தினர். பின்னர் போகும் வழியிலும் அடித்து பணம் கேட்டனர். இதையடுத்து சுரேஷ்குமார் தனது பழைய முதலாளி விஜயகுமார் என்பவரிடமிருந்து ஜிபே மூலம் ரூ.50 ஆயிரம் பெற்று பாலாஜிக்கு அனுப்பியுள்ளார். இதையடுத்து மீதமுள்ள ரூ.50 ஆயிரத்தை ஒரு வாரத்தில் தர வேண்டும் எனக்கூறி காரிலிருந்து கீழே தள்ளிவிட்டு தப்பினர். காயம் அடைந்த சுரேஷ் குமார் சிகிச்சைக்குப் பின்னர் மதுரவாயல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து, காரில் கடத்தி தாக்கிய பாலாஜி, அவரது கூட்டாளியான சென்னை ஆழ்வார் திருநகரைச் சேர்ந்த நரசிம்மன் (31) ஆகிய இருவரைக் கைது செய்தனர்.

### பெரம்பூர் ரயில் நிலையத்தில் ரூ.5 கோடி மதிப்பு போதைப் பொருள் சிக்கியது

**சென்னை, ஏப்.16:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, பறக்கும் படையினர், ரயில்வே பாதுகாப்புப் படையினர் இணைந்து, ரயில் நிலையங்களில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில், அசாம் மாநிலம் நியூ தின்சுகியாவில் இருந்து பெரம்பூர் வழியாக பெங்களூரு நோக்கிச் செல்லும் விரைவு ரயில் வந்தது. அந்த ரயிலின் பொதுப் பெட்டியில் ஆர்பிஎஃப் போலீஸார் சோதனை மேற்கொண்டனர். அந்த ரயில் பெட்டியில் கேட்பாரற்று ஒரு சூட்கேஸ் நெடு நேரமாக இருந்தது. அதை உரிமை கோரிப் பெற யாரும் முன்வரவில்லை. தொடர்ந்து அந்த சூட்கேசை திறந்து பார்த்தபோது, அதில் 4 பாக்கெட்டுகளில் பவுடர்கள் இருந்தன. அதை சோதித்தபோது, ஹைட்ரோபோனிக் போதைப் பொருள் என்பது தெரியவந்தது. 5 கிலோ எடை கொண்ட இவற்றின் மதிப்பு ரூ.5 கோடி. இதையடுத்து இந்த போதைப் பொருட்கள் மேல் அதிகாரிகளின் விசாரணைக்காக போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டன. போதைப் பொருட்களை ரயிலில் கடத்திய நபர் யார் என ஆர்பிஎஃப் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

## விளையாட்டு செய்திகள்

### நூர் அஹமது அசத்தல்: கொல்கத்தாவை வீழ்த்தி சிஎஸ்கே அபார வெற்றி



**சென்னை, ஏப்.16:** நடப்பு ஐபிஎல் தொடரின் 22-வது லீக் ஆட்டத்தில், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 32 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சென்னை சூப்பர் கிங்ஸ் தனது இரண்டாவது தொடர் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் டாஸ் வென்ற கொல்கத்தா கேப்டன் அஜிங்க்யா ரஹானே முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தார். சென்னை அணிக்குத் தொடக்க வீரர்களாக ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் சஞ்சு சாம்சன் களம் இறங்கினர். இதில் ருதுராஜ் 7 ரன்களில் வெளியேறினாலும், கடந்த போட்டியின் சதம் தந்த உத்வேகத்துடன் ஆடிய சஞ்சு சாம்சன் 32 பந்துகளில் 48 ரன்கள் குவித்து வலுவான அடித்தளம் அமைத்தார்.

அவருக்குத் துணையாக டெவால்ட் பிரெவிஸ் 41 ரன்களும், ஆயுஷ் மத்ரே அதிரடியாக 17 பந்துகளில் 38 ரன்களும் சேர்த்தனர். இதன் பலனாக சிஎஸ்கே அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 192 ரன்கள் என்ற இலக்கை எட்டியது. கொல்கத்தா தரப்பில் கார்த்திக் தியாகி 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

193 ரன்கள் என்ற இலக்கை நோக்கி ஆடிய கொல்கத்தா அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. இம்பாக்ட் வீரரான ஃபின் ஆலன் ஒரே ரன்னின் வெளியேறினார். சிஎஸ்கே பவுலர்களின் துல்லியமான தாக்குதலால் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்தன. குறிப்பாக சுழற்பந்து வீச்சாளர் நூர் அஹமது, தனது 4 ஓவர்களில் வெறும் 21 ரன்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 3 முக்கிய விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார்.

ரமன்தீப் சிங் (35) மற்றும் ரோவ்மன் பவல் (31) ஜோடி 63 ரன்கள் சேர்த்துப் போராடிய போதிலும், அது வெற்றிக்கு போதுமானதாக இல்லை. இறுதியில் கொல்கத்தா அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 160 ரன்கள் மட்டுமே எடுத்துத் தோல்வியைத் தழுவியது.

இந்தப் போட்டியில் அபாரமாகப் பந்துவீசிய நூர் அஹமது ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்துள்ளது. மறுபுறம், இந்த சீசனில் இதுவரை ஒரு வெற்றியைக் கூடப் பெறாமல் கொல்கத்தா அணி இக்கட்டான நிலையில் உள்ளது. எம்.எஸ் தோனி காயம் காரணமாக இந்தப் போட்டியிலும் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, சிறைகளிலிருந்து 61 கைதிகள் வாக்களிக்கின்றனர்

**புதுடெல்லி, ஏப்.16:** தமிழக சிறைகளில் தண்டனைக் கைதிகள், விசாரணைக் கைதிகள், தடுப்புக் காவல் கைதிகள் என மொத்தம் 16,000 போ உள்ளனா. இவா்களில் சுமாா 6,000 போ தண்டனைக் கைதிகளைத் தவிா்த்து விசாரணைக் கைதிகள், தடுப்புக் காவல் கைதிகள் ஆகியோா் வாக்களிப்பதற்கு தகுதியானவா்களாவா.

ஆனால், விசாரணைக் கைதிகள் குறிப்பிட்ட நாள்களுக்குப் பின், பிணையில் சென்றுவிட முடியும் என்பதால், அவா்களுக்கு சிறையிலிருந்து வாக்களிக்க அனுமதி வழங்கப்படுவதில்லை. இதனால் குண்டா் தடுப்புச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சிறையில் இருப்பவா்களுக்கு மட்டும் சிறையிலிருந்து வாக்களிக்க அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த கைதிகளிடம் பேரவைத் தோ்தலில் வாக்களிப்பது தொடா்பாக சிறைத் துறை இரு வாரங்களுக்கு முன்பு அறிவிப்பு வெளியிட்டது. இதில் வாக்களிக்க விருப்பமுள்ள கைதிகள், தங்களது பெயா், தங்களது தொகுதி, வாக்காளா் அடையாள அட்டை, வாக்குச்சாவடி எண் உள்ளிட்ட விவரங்களை அளித்தனா். இதில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியுடைய 61 பேருக்கு மட்டும் வாக்களிக்க சிறைத் துறை அனுமதி வழங்கியுள்ளது. கைதிகள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் சிறைத்துறை ஏடிஜிபி சங்கா் செய்துள்ளாா்.

இது தொடா்பாக சிறைத்துறை உயா் அதிகாரி கூறியதாவது: அனைத்து மத்திய சிறைகளிலும் தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் அனைவரும் வாக்களிக்க ஊக்கம் அளிக்கப்பட்டது. விருப்பம் தெரிவித்த கைதிகளில் பெரும்பாலானவா்களிடம் போதிய ஆவணங்கள் இல்லாததால் விண்ணப்பிக்கும் தகுதியை இழந்துவிட்டனா்.

விண்ணப்பித்தவா்களில் 61 கைதிகள் தபால் வாக்குகள் அளிக்க தகுதியானவா்கள் என தோ்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வரும் தோ்தல்களில் இந்த எண்ணிக்கையை மேலும் உயா்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றாா் அவா்.

2014-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற தோ்தல்களில் அதிகபட்சமாக 2019 மக்களவைத் தோ்தலில் 132 கைதிகள் வாக்களித்தனா். 2021 சட்டப்பேரவைத் தோ்தலில் குறைந்தபட்சமாக 15 கைதிகள் வாக்களித்தனா்.

# சென்னை இணைப்புப் பெட்டி தொழிற்சாலையில் நாட்டின் முதல் வந்தே பாரத் சரக்கு ரயில் தயாரித்து அனுப்பிவைப்பு

**சென்னை, ஏப்.16:** உலகப் புகழ்பெற்ற ரயில் பெட்டி தயாரிப்பு தொழிற்சாலையான சென்னை ஐசிஎஃப்-ல், வந்தே பாரத் ரயில், எல்எச்பி என்னும் நவீன பெட்டி ரயில், ஏசி மின்சார ரயில், மெட்ரோ ரயில் உட்பட பல்வேறு ரயில்களுக்கான பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

குறிப்பாக, வந்தேபாரத் ரயில்கள் தயாரிப்பில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றன. அந்த வகையில், வந்தே பாரத் சரக்கு ரயிலை வடிவமைத்து, தயாரித்து வழங்க ரயில்வே வாரியம் கடந்த 2022-ம் ஆண்டு உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து, சரக்கு ரயில் வடிவமைப்புக்கு ரயில்வே வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, வந்தே பாரத் சரக்கு ரயில் தயாரிக்கும் பணி சென்னை ஐசிஎஃப்-ல் தொடங்கி நடைபெற்று வந்தது. இந்நிலையில், அண்மையில் வந்தே பாரத் சரக்கு ரயில் தயாரிப்பு பணி முழுமையாக நிறைவடைந்தது.

16 பெட்டிகளைக் கொண்ட இந்த ரயில், மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் செல்லும் திறன் கொண்டது. உணவு பொருட்களை பதப்படுத்தும் வசதி, பொருட்களை பாதுகாப்பாக கையாளும் வசதி போன்றவை இடம் பெற்றுள்ளன.

இந்த ரயில், ஐசிஎஃப்-ல் இருந்து சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. விரைவில், ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தரநிலை அமைப்பால் (ஆர்டிஎஸ்ஓ) முழு சோதனைக்கு உட்படுத்தப்பட இருக்கிறது.

இதுகுறித்து, ஐசிஎஃப் அதிகாரிகள் கூறியதாவது: பெரிய நகரங்களில் சரக்கு ரயில் தேவை அதிகரித்துள்ளது. குறிப்பாக, ஆன்லைனில் ஷாப்பிங் செய்வது அதிகரித்துள்ளது. அதுபோல, உணவு பொருட்கள் கையாள்வதும் அதிகரிக்கிறது.

இ-காமர்ஸ் நிறுவனங்கள், தங்கள் பொருட்களை பொதுமக்களிடம் கொண்டு செல்வதற்கு தற்போது பெரிய அளவில் விமான போக்குவரத்தை நம்புகின்றன. இந்த வணிகத்தில், வந்தே பாரத் சரக்கு ரயில் சேவை ஈடுபடுத்தப்பட உள்ளது.

ஒரே நேரத்தில் 264 டன் சரக்குகளை இந்த ரயிலில் எடுத்து செல்ல முடியும். உள்பகுதி முழுவதும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலால் வடிவமைப்பு, தீ எச்சரிக்கை வசதி, சிசிடிவி கேமரா, சரக்கு கன்டெய்னர்களை லாக் செய்வதற்கு வசதி உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்த ரயிலின் சோதனை ஓட்டம் குறித்து, ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது:

இந்த ரயில் பயன்பாட்டுக்கு வரும் முன்பு, ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தரநிலைகள் அமைப்பால் (ஆர்டிஎஸ்ஓ) முழுமையாகச் சோதிக்கப்படும்.

இதற்காக, சென்னை ஐசிஎஃப்-ல் இருந்து மத்திய பிரதேசம், கஜுராஹோ வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, மத்திய பிரதேசம் - ராஜஸ்தான் இடையே சோதனை ஓட்டம் நடைபெறும். இது தவிர, பல்வேறு சோதனைகள் மேற்கொள்ளப்படும்.

## வணிகச் செய்திகள்

### சமையல் எண்ணெய் இறக்குமதி 12% அதிகரிப்பு

**புதுடெல்லி, ஏப்.16:** கச்சா பாமாயில் வரத்து கணிசமாக அதிகரித்ததே இந்த உயர்வுக்கு முக்கியக் காரணமாகும். அதேநேரம், மத்திய கிழக்கு போர் பதற்றம் காரணமாக உயர்ந்து வரும் சரக்குக் கட்டணம், சர்வதேச சந்தையில் விலையேற்றம் ஆகியவற்றால் வரும் மாதங்களில் இறக்குமதி குறைய வாய்ப்புள்ளதாக இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம்(எஸ்இஏ) தெரிவித்துள்ளது.

கடந்த 2025 மார்ச் மாதத்தில் 10.45 லட்சம் டன்னாக இருந்த சமையல் எண்ணெய் இறக்குமதி, நடப்பு 2026 மார்ச் மாதத்தில் 11,73,168 டன்னாக அதிகரித்துள்ளது. குறிப்பாக, கச்சா பாமாயில் இறக்குமதி கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்த 3.43 லட்சம் டன்னிலிருந்து தற்போது 6.73 லட்சம் டன்னாக இருமடங்கு உயர்ந்துள்ளது. மார்ச் மாதத்தில் வருடாந்திர கணக்கில் இறக்குமதி உயர்ந்திருந்தாலும், முந்தைய பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 10 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி, உள்நாட்டில் கடுகு விளைச்சல் அதிகரிப்பு போன்ற காரணங்களால் எண்ணெய் நிறுவனங்கள் தற்போது அவசரமாக இறக்குமதி செய்யாமல் சந்தை நிலவரத்தைக் கவனித்து வருவதால் இச்சரிவு காணப்படுகிறது. அதேபோல், சமையல் மற்றும் சமையல் அல்லாத எண்ணெய் என இந்தியாவின் மொத்த தாவர எண்ணெய் இறக்குமதி கடந்த மார்ச் மாதத்தில் 11 சதவீதம் அதிகரித்து, 11.86 லட்சம் டன்னாக உள்ளது. நடப்பு 2025-26 எண்ணெய் சந்தை ஆண்டின் முதல் 5 மாதங்களில் (நவம்பர் முதல் மார்ச் வரை), மொத்த இறக்குமதி 8 சதவீதம் அதிகரித்து 65.72 லட்சம் டன்னாக பதிவாகியுள்ளது.

# கொளுத்தும் கோடை வெய்யில்: சூரிய சக்தி மின் உற்பத்தி அதிகரிப்பு



**சென்னை, ஏப்.16:** தமிழகத்தில் கொளுத்தும் கோடை வெயில் காரணமாக சூரிய சக்தி மின் உற்பத்தி அதிகரித்துள்ளதாக மின்வாரியம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் மின் உற்பத்தி ஆதாரங்கள் மூலம் நாளொன்றுக்கு சுமார் 19 ஆயிரம் முதல் 20 ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்யப்பட்டு வரும் நிலையில், தமிழகத்தின் தினசரி (24 மணி நேரம்) மின்நுகர்வும் சுமார் 19 ஆயிரம் மெகாவாட்டாக இருந்து வருகிறது.

இது கோடை காலங்களில் நாளொன்றுக்கு 20 ஆயிரம் முதல் 21 ஆயிரம் மெகாவாட்டாக உயரும். தேவைக்கு அதிகமான மின்சாரம் தனியாரிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.


நிகழாண்டு கோடைகாலம், தேர்தல், பொதுத்தேர்வு ஆகியவற்றின் காரணமாக ஏப்ரல் முதல் ஜூன் வரை நாளொன்றுக்கான மின்நுகர்வு 22 ஆயிரம் மெகாவாட் வரை உயர வாய்ப்புள்ளது.

இதனால், மின்தேவையை சமாளிக்கும் முயற்சியில் மின்வாரியம் ஈடுபட்டுள்ளது. இதனிடையே தமிழகத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் சூரிய மின் உற்பத்தியும் அதிகரித்துள்ளதாக மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உலகின் மருந்தக ஆராய்ச்சி மையம் இந்தியா: பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி, ஏப்.16:

இந்திய மருந்துத் துறை, உலகின் மருந்தகம் என்ற நிலையிலிருந்து, தற்போது உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளின் மையமாக உருவெடுத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி நேற்று பெருமிதம் தெரிவித்தார்.



மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா எழுதியுள்ள கட்டுரை ஒன்றைப் பகிர்ந்துள்ள பிரதமர், தனது எக்ஸ் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது: இந்தியா இப்போது மலிவு விலையில் மருந்துகளை வழங்கும் உலகளாவிய விநியோகஸ்தர் என்ற நிலையைக் கடந்து, ஆராய்ச்சி சார்ந்த வளர்ச்சியில் தற்போது கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. உலகின் மருந்தகம் என்ற நிலையிலிருந்து கண்டுபிடிப்புகளின் மையமாக இந்தியாவின் மருந்துத் துறை முன்னேறி வருகிறது.

தற்போதைய அரசு, விரிவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பயலாஜிக்ஸ், பயோசிமிலர்ஸ் மற்றும் அடுத்த தலைமுறைக்கான நவீன சிகிச்சை முறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. மேலும், உலகளாவிய மருந்துத் துறைப் போட்டியில் இந்தியா தன்னை எவ்வாறு முன்னிலைப்படுத்தி வருகிறது என்பதை விவரிக்கும் மத்திய அமைச்சர் நட்டாவின் இந்தக் கட்டுரை, அனைவரும் படிக்க வேண்டிய ஒன்று. இவ்வாறு பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் தொடர்ச்சியான கொள்கை ஆதரவு மற்றும் தொலைநோக்குப் பார்வை காரணமாக, கடந்த சில ஆண்டுகளில் இந்திய மருந்துத் துறையின் தடம் மாறியுள்ளது. இந்தியா இனி பொதுவான 'ஜெனரிக்' மருந்துகளை அதிக அளவில் உற்பத்தி செய்வதுடன் மட்டும் நின்றுவிடாமல், காம்ப்ளக்ஸ் மருந்து மேம்பாடு மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சித் திறன்களில் அதிக முதலீடு செய்து வருகிறது. குறிப்பாக, உலகளாவிய மருந்துத் துறையின் அடுத்தகட்ட வளர்ச்சியைத் தீர்மானிக்கக் கூடிய பயலாஜிக்ஸ் போன்ற பிரிவுகளில் இந்தியா அதிக கவனம் செலுத்தி வருகிறது.

ஜெனரிக் மருந்து உற்பத்தியில் முன்னிலை வகித்ததால் நீண்டகாலமாக இந்தியா உலகின் மருந்தகம் என்று அழைக்கப்பட்டது. தற்போது, அந்த வளர்ச்சியிலிருந்து, புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்புகளை நோக்கிய வளர்ச்சிக்கு மாற இந்தியா தயாராகிவிட்டது என்று மத்திய அமைச்சர் நட்டா தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஏழுமலையானுக்கு ரூ.1.01 கோடி நன்கொடை

ஐதராபாத், ஏப்.16:

ஹைதராபாதைச் சேர்ந்த "வர்மா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், திங்கட்கிழமை தேவஸ்தானத்தின் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பிராணதான அறக்கட்டளைக்கு ரூ.1,01,01,116 நன்கொடையாக வழங்கியது.

இந்நிகழ்வின்போது, அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அல்லூரி வர்மா, ஏழுமலையான் கோயில் ரங்கநாயகர் மண்டபத்தில் வைத்து, நன்கொடைக்கான வரைவோலையை கூடுதல் செயல் அதிகாரி வெங்கையா சௌத்ரியிடம் அளித்தார்.

# 75 ஆண்டுகளை நிறைவு செய்த தெற்கு ரயில்வே

புதுடெல்லி, ஏப்.16:

தெற்கு ரயில்வே மண்டலம் தொடங்கப்பட்டு செவ்வாய்க்கிழமையுடன் (ஏப். 14) 75 ஆண்டுகளை நிறைவு செய்தது.

இது குறித்து தெற்கு ரயில்வே துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 1951- ஆம் ஆண்டு ஏப்.14- ஆம் தேதி தெற்கு ரயில்வே மண்டலம் அமைக்கப்பட்டது. அப்போதைய மதராஸ் மற்றும் தெற்கு மகாராஷ்டிரா ரயில்வே, தெற்கு இந்திய மற்றும் மைசூர் மாநில ரயில்வே என மூன்று பிரிவுகளை ஒருங்கிணைத்து நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதன்பின், நிர்வாக ரீதியாக தமிழகத்தில் சென்னை, திருச்சி, சேலம், மதுரை மற்றும் கேரளத்தைச் சேர்ந்த பாலக்காடு, திருவனந்தபுரம் என 6 கோட்டங்கள் தெற்கு ரயில்வேயின் கட்டுப்பாட்டில் உள்ளன.

சுதந்திரத்துக்குப் பிறகு 1856- ஆம் ஆண்டில் ராயபுரம் முதல் ஆற்காடு எனப்படும் வாலாஜா வரை தெற்கு ரயில்வேயின் முதல் ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

தெற்கு ரயில்வேயின் நிர்வாக ரீதியிலான முன்னேற்ற மாற்றங்களாக, கடந்த 1966- ஆம் ஆண்டு தெற்கு மத்திய ரயில்வே மண்டலம் உருவானது. கடந்த 2003 -ஆம் ஆண்டு தென்மேற்கு ரயில்வே மண்டலம் ஏற்படுத்தப்பட்டது.

வளர்ச்சி: தற்போதைய தெற்கு ரயில்வே மண்டலத்தில் தமிழகம், கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலப் பகுதிகள் உள்ளடங்கியுள்ளன. சென்னையில் மிக பாரம்பரியமிக்க தெற்கு ரயில்வே அலுவலக வளாகக் கட்டடம் நூற்றாண்டைக் கடந்து, சென்னை சென்ட்ரல் அருகே அமைந்துள்ளது.

கடந்த 1856 முதல் தற்போது வந்தே பாரத் உள்ளிட்ட நவீன ரயில்களை இயக்கும் அளவுக்கு தெற்கு ரயில்வே வளர்ச்சியடைந்துள்ளது.

வருங்காலத்தில் புல்லட் ரயிலும் தெற்கு ரயில்வே கட்டுப்பாட்டில் இயக்கப்படும். யுனெஸ்கோ பாரம்பரிய பட் டியலில் இடம் பெற்ற நீலகிரி மலை ரயில், நாட்டின் முதல் செங்குத்தாக உயர்த்தி, இறக்கும் வகையிலான பாம்பன் ரயில் பாலம் ஆகியவை தெற்கு ரயில்வே மண்டலத்தின் முக்கிய வளர்ச்சியின் அடையாளமாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதி மதிப்பு: மார்ச் மாதத்தில் மூன்று மடங்கு உயர்வு

புதுடெல்லி, ஏப்.16:

ஐரோப்பிய ஆய்வுநிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: 2026, மார்ச் மாத நிலவரப்படி ரஷிய எரிபொருள்களை அதிகம் இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது. முதலிடத்தில் சீனா உள்ளது.

ஒட்டுமொத்தமாக மார்ச் மாதத்தில் ரஷியாவிடம் இருந்து ரூ.64,000 கோடிக்கு (5.8 பில்லியன் யூரோ) ஹைட்ரோகார்பன் பொருள்களை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இதில் கச்சா எண்ணெய் இறக்குமதி மூன்று மடங்கு அதிகரித்து ரூ.58,200 கோடியாக உயர்ந்துள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் நிலக்கரியும் பிற எண்ணெய் பொருள்களும் அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

# உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் பாதுகாப்பு: யுஜிசி வழிகாட்டுதல் வெளியீடு

புதுடெல்லி, ஏப்.16:

பல்கலைக்கழக மானியக்குழு(யுஜிசி) செயலர் மணிஷ் ஆர்.ஜோஷி, அனைத்து விதமான உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: உயர்கல்வி நிறுவன வளாகங்களில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது நமது கடமை. இதுசார்ந்து அவ்வப்போது வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுவருகின்றன. அதன்தொடர்ச்சியாக தற்போது திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, கல்லூரிகளில் ராகிங் தடுப்பு, பணிபுரியும் பெண்கள் மற்றும் மாணவிகள் மீதான பாலியல் துன்புறுத்தலை தடுக்க நடவடிக்கை, குறைதீர்ப்பாளர் நியமனம், கல்விக்கட்டணம் மற்றும் அசல் சான்றிதழ்களை திரும்பப்பெறுதல் உள்ளிட்ட வழிகாட்டுதல்கள் தீவிரமாக பின்பற்றப்பட வேண்டும். குறிப்பாக, ராகிங் தடுப்புக் குழு, குறைதீர்க்கும் பிரிவு போன்ற பல்வேறு குழுக்கள் மற்றும் பிரிவுகள் அமைக்கப்படுவதுடன், அவை திறம்பட செயல்படுவதை கல்லூரிகள் உறுதிசெய்ய வேண்டும். இந்தக் குழுக்கள் குறித்த விவரங்களை உயர்கல்வி நிறுவனங்கள் தங்களது அதிகாரபூர்வ இணையதளத்தில் பதிவேற்ற வேண்டும். இதுதவிர புகார்கள் மற்றும் குறைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வெளிப்படையான முறையில் சரிசெய்ய வேண்டும். மாணவர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்குதலை மேம்படுத்த வேண்டும். சிசிடிவி கண்காணிப்பு போன்ற வளாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிசெய்ய வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான ஆதரவை வழங்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# "இந்த ஆபத்தை முன்னரே கணித்தவர் ஸ்டாலின்" தொகுதி மறுவரையறை குறித்து ரேவந்த் ரெட்டி எச்சரிக்கை

ஹைதராபாத், ஏப்.16:

மக்களவைத் தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பாகப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் தமிழக முதல்வர் ஸ்டாலினை குறிப்பிட்டு, அவர் கூறியிருப்பதாவது: "அன்புள்ள ஸ்டாலின், இந்த ஆபத்தை முன்கூட்டியே உணர்ந்து, கடந்த ஆண்டு மார்ச் மாதம் சென்னையில் தென்னிந்தியத் தலைவர்களை ஒன்றிணைத்து மாநாட்டை ஒருங்கிணைத்த முதல் தலைவர்களில் நீங்களும் ஒருவர்.

நமது அரசியல் உரிமைகள் மீதான இந்தத் தாக்குதலுக்கு எதிராக நாம் ஒன்றிணைய வேண்டும். டெல்லியில் நமது குரலைப் பாதுகாக்க வேண்டும். இந்த மிகச் சிறப்பான நாளில், "கற்பி, போராடு, ஒன்றுசேர்" என்ற பாபாசாகேப் அம்பேத்கரின் தாரக மந்திரத்தை உத்வேகமாக எடுத்துக்கொள்வோம். ஒன்றாக அணிவகுப்போம்" என்று தெரிவித்துள்ளார்,

அத்துடன் மக்களவைத் தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தையும் ரேவந்த் ரெட்டி அதில் இணைத்துள்ளார். அதில், "குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காகத் தென்னிந்திய மாநிலங்கள் தண்டிக்கப்படக் கூடாது" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நடவடிக்கையானது கூட்டாட்சித் தத்துவத்திற்கும், தென்னிந்தியாவின் அரசியல் குரலுக்கும் எதிரானது என்று அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை

புதுடெல்லி, ஏப்.16:

விஷ்ணுபூர் மாவட்டத்தில் உள்ள ட்ரோங்லாவ்பி பகுதியில் அண்மையில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 2 சிறார்கள் உயிரிழந்த சம்பவத்துக்கு எதிராக, திங்குங்கெய் பகுதியில் உள்ளூர் மக்கள் செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கு ஆயுதங்களுடன் சந்தேகத்துக்குரிய நபர்கள் நடமாடுவதாக வதந்தி பரவி பதற்றம் அதிகரித்தது.

இதனால் அங்கு வந்த பாதுகாப்புப் படையினரின் வாகனங்களை உள்ளூர் மக்கள் தடுத்து நிறுத்தினர். அப்போது கூட்டத்தில் இருந்த சிலர் வாகனங்களைச் சேதப்படுத்தி, அவற்றுக்குத் தீ வைத்தனர். பாதுகாப்பு படை வீரர்களை சிறைபிடிக்கவும் அவர்கள் முயற்சித்தனர்.

இதையடுத்து அந்தப் பகுதிக்கு கூடுதல் படைகள் அனுப்பப்பட்ட நிலையில், கூட்டத்தைக் கலைப்பதற்கு கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. இந்த வன்முறை திங்குங்கெய்க்கு அருகில் உள்ள நிங்தோகோங் பகுதிக்கும் பரவியது. இந்த வன்முறை தொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவித்தனர்.

வன்முறை காரணமாக அந்த மாவட்டத்தில் அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை, பிஎன்எஸ்எஸ் சட்டத்தின் 163-ஆவது பிரிவின் கீழ், மாவட்ட ஆட்சியர் தடை உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

# ரூ.50 கோடி சட்டவிரோத பணப் பரிவர்த்தனை: ஐ-பேக் நிறுவன இயக்குநருக்கு 10 நாள் காவல்

புதுடெல்லி, ஏப்.16:

அரசியல் ஆலோசனை வழங்கும் ஐ-பேக் நிறுவனத்தில் ரூ.50 கோடி அளவுக்கு சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடந்துள்ளது தெரியவந்துள்ளது. இதையடுத்து ஐ-பேக் நிறுவன இயக்குநர் வினேஷ் சந்தேலை 10 நாள் அமலாக்கத் துறை அதிகாரிகள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிக்கு ஆலோசனை வழங்கவும், தேர்தல் நேரத்தில் வழி நடத்தவும் ஐ-பேக் அரசியல் ஆலோசனை நிறுவனம் இயங்கி வருகிறது.

இந்த ஐ-பேக் நிறுவனத்தின் இணை நிறுவனராகவும், இயக்குநராகவும் இருப்பவர் வினேஷ் சந்தேல்.

இந்நிலையில் அண்மையில் அமலாக்கத்துறை அதிகாரிகள், ஐ-பேக் நிறுவனத்தின் மீது ஒரு வழக்குப் பதிவு செய்தனர். அதில் ரூ.50 கோடி அளவுக்கு சட்டவிரோதப் பணப்பரிமாற்றம் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து நிறுவனத்தில் 33 சதவீத பங்குகளை வைத்துள்ள வினேஷ் சந்தேலை அமலாக்கத் துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

அவர் மீது சட்டவிரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் (பிஎம்எல்ஏ) கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு டெல்லி பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த கூடுதல் செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி ஷெபாலி பர்னாலா, வினேஷ் சந்தேலை 10 நாள் அமலாக்கத் துறை அதிகாரிகள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்தார்.

இந்நிலையில் இந்த வழக்கு அரசியல் உள் நோக்கம் கொண்டது என்று வினேஷ் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் விகாஸ் பஹ்வா தெரிவித்தார்.

# தானம் பெற்ற இதயம்: 85 நிமிடத்தில் 98 கி.மீ. பயணம் வெற்றிகரமாக எடுத்து செல்லப்பட்டது

புதுடெல்லி, ஏப்.16:

மூளைச்சாவு அடைந்த நபரிடமிருந்து தானமாக பெற்ற இதயம் 85 நிமிடங்களில் 98 கி.மீ தூரத்துக்கு விரைவாக கொண்டு செல்லப்பட்டு வெற்றிகரமாக பொருத்தப்பட்டது.




ஹரியானாவின் ரோதக் நகரில் உள்ள பிஜிஐஎம்எஸ் மருத்துவமனையில் 37 வயது நபர் ஒருவர் மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டு சுயநினைவின்றி அனுமதிக்கப்பட்டார். அவர் மூளைச் சாவு அடைந்ததால், அவரது உடல் உறுப்புகளை தானமாக வழங்க அவரது குடும்பத்தினர் முடிவு செய்தனர்.

டெல்லி ஓக்லா பகுதியில் உள்ள ஃபோர்டிஸ் எஸ்கார்ட்ஸ் இதய சிகிச்சை மையத்தில் ஒருவர் இதய மாற்று அறுவை சிகிச்சைக்காக காத்திருந்தார். இதனால் ரோதக் நகரில் இருந்து இதயத்தை எடுத்து ஓக்லா கொண்டு சென்று பொருத்த மருத்துவர்கள் முடிவு செய்தனர். ரோதக் மற்றும் ஓக்லா இடையோன தூரம் 98 கி.மீ. ஆகும். தானமாக பெறப்படும் இதயத்தை குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் பொருத்த வேண்டும். எனவே இதை விரைவாக கொண்டு செல்ல போக்குவரத்து போலீஸாரின் உதவி நாடப்பட்டது.

மூளைச்சாவு அடைந்த நபரிடமிருந்து இதயத்தை எடுக்கும் அறுவை சிகிச்சையை மதியம் 2.20 மணிக்கு தொடங்கிய மருத்துவர்கள் 2.50 மணிக்கு முடித்தனர். அதன்பின் ரோதக் நகரிலிருந்து ஆம்புலன்ஸ் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட இதயம் மாலை 4.15 மணிக்கு டெல்லி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. ஆம்புலன்ஸ் வாகனத்துக்கு தடையற்ற போக்குவரத்தை போலீஸார் செய்து கொடுத்தனர். இதனால் 85 நிமிடத்தில் தானமாக பெற்ற இதயம் கொண்டு செல்லப்பட்டு, இதய செயலிழப்பால் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நபருக்கு மருத்துவர்கள் வெற்றிகரமாக பொருத்தினர்.

மற்ற உடல் உறுப்புகள்.. மூளைச்சாவு அடைந்த நபரின் மற்ற உடல் உறுப்புகள் இதர மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு பலருக்கு பொருத்தப்பட்டது. நுரையீரல் ஆர்டிமிஸ் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கல்லீரல் மற்றும் கணையம் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. சிறுநீரகம் மற்றும் கார்னியா ஆகியவை ரோதக் பிஜிஐஎம்எஸ் மருத்துவமனையிலேயே பிற நபர்களுக்கு பொருத்தப்பட்டது. ஒருவரின் உடல் உறுப்பு தானம், பல பேரின் உயிரைக் காப்பாற்றியுள்ளது.

# மேற்காசிய பதற்றத்தால் இந்தியாவில் 25 லட்சம் பேர் வறுமையில் தள்ளப்படும் அபாயம்: ஐ.நா. அறிக்கையில் தகவல்

புதுடெல்லி, ஏப்.16:

மேற்காசிய பதற்றத்தால் இந்தியாவில் 25 லட்சம் பேர் வறுமையில் தள்ளப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா.வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.



'மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம்: ஆசியா மற்றும் பசிபிக்கில் மனித மேம்பாட்டில் ஏற்படும் தாக்கம்' என்ற தலைப்பில் ஐ.நா.மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

மத்திய கிழக்கில் நிகழ்ந்துவரும் மோதலின் தாக்கம் ஆசியா மற்றும் பிசிபிக் பிராந்தியத்துக்கு விரிவடைந்துள்ளது.

எரிபொருள் விலை உயர்வு, உணவுப் பாதுகாப்பின்மை அதிகரிப்பு எனப் பல்வேறு அழுத்தங்களால் மக்களின் வாங்கும் திறன் வெகுவாக குறைந்து வாழ்வாதாரத்தை பாதிக்கிறது.

இதனால் உலகளவில் 88 லட்சம் பேர் வறுமைக்குத் தள்ளப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் 4 லட்சம் பேர் முதல் 25 லட்சம் பேர் வரை பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. சீனாவில் 1.15 லட்சம் பேர் முதல் 6.20 லட்சம் பேர் வரை ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட வாய்ப்புள்ளது.

இந்தியாவில் மேற்காசிய மோதலுக்கு முன் வறுமைக்கோட்டின் கீழ் இருந்த மக்களின் எண்ணிக்கை 3.51 கோடியாக இருந்த நிலையில், மோதலுக்குப் பின் 3.54 கோடியாக உயரவுள்ளது.

இதன் காரணமாக இந்தியாவின் மனித வள மேம்பாடு 0.03 முதல் 0.12 ஆண்டுகள் வரை இழப்பைச் சந்திக்கவுள்ளது. தங்கள் நாட்டுக்குத் தேவையான 90 சதவீத கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதிசெய்கிறது. இதில் 40 சதவீதமும், 90 சதவீத சமையல் எரிவாயுவும் மேற்காசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

இதன் எதிரொலியாக அத்தியவாசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பதோடு சுற்றுலா, உணவுப் பதப்படுத்துதல், எஃகு உற்பத்தி போன்ற துறைகள் பாதிப்படைந்து வேலையின்மை ஏற்படவும் வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

# ஹார்முஸ் ஜலசந்தி முடக்கத்தை கைவிட அமெரிக்காவிடம் சவுதி அரேபியா வலியுறுத்தல்




**ரியாத், ஏப்.16:**

ஹார்முஸ் ஜலசந்தி முடக்கத்தை அமெரிக்கா கைவிட வேண்டும் என்று சவுதி அரேபியா வலியுறுத்தி வருகிறது. கடந்த 11-ம் தேதி அமெரிக்கா, ஈரான் இடையே நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது.

இந்த சூழலில் ஈரானை ஒட்டி அமைந்துள்ள ஹார்முஸ் ஜலசந்தியின் இருபுறத்திலும் சரக்கு, எண்ணெய் கப்பல் போக்குவரத்தை அமெரிக்க ராணுவம் நேற்று முன்தினம் முடக்கியது. ஈரான் துறைமுகங்களில் இருந்து வரும் எந்தவொரு கப்பலும் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து செல்ல முடியாது என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கு பதிலடியாக வளைகுடா நாடுகளின் சரக்கு, எண்ணெய் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க ஈரான் ராணுவம் அனுமதி வழங்க மறுத்து வருகிறது. அமெரிக்கா, ஈரானின் ராணுவ நடவடிக்கைகளால் ஹார்முஸ் ஜலசந்தியில் சரக்கு, எண்ணெய் கப்பல் போக்குவரத்து முழுமையாக முடங்கியிருக்கிறது. ஈரான் துறைமுகங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் வளைகுடா நாடுகளின் அனைத்து துறைமுகங்கள் மீதும் தாக்குதல் நடத்துவோம் என்று ஈரான் ராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுதொடர்பாக சவுதி அரேபிய அரசு வட்டாரங்கள் கூறியதாவது:

பெர்சிய வளைகுடா மற்றும் செங்கடலுக்கு நடுவே சவுதி அரேபியா அமைந்துள்ளது. தற்போது பெர்சிய வளைகுடாவின் ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டிருப்பதால் செங்கடல் வழியாக சரக்கு, எண்ணெய் கப்பல் போக்குவரத்தை சவுதி அரேபியா மேற்கொண்டு வருகிறது. ஏமன் நாட்டின் ஹவுத்தி கிளர்ச்சிப் படை ஈரானின் பினாமியாக செயல்படுகிறது. தற்போதைய சூழலில் ஈரானின் தூண்டுதலால் ஹவுத்தி கிளர்ச்சிப் படை செங்கடலில் அமைந்துள்ள பாப் அல் மண்டேப் ஜலசந்தியை மூடும் அபாயம் உள்ளது. அவ்வாறு மூடப்பட்டால் சவுதி அரேபியாவின் கடல் வழி போக்குவரத்து முழுமையாக முடங்கும். உலகம் முழுவதும் கச்சா எண்ணெய்க்கு பற்றாக்குறை ஏற்படும். மேலும் உரங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு உணவு தானிய உற்பத்தி பாதிக்கப்படும். வளைகுடா நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதி மிகவும் மோசமடையும். எனவே ஹார்முஸ் ஜலசந்தி முடக்கத்தை அமெரிக்கா கைவிட வேண்டும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த தகவலை உறுதி செய்யும் வகையில் அமெரிக்காவின் வால் ஸ்டீரிட் ஜர்னல் நாளிதழில் விரிவான செய்தி வெளியாகி உள்ளது.

# விற்பனைக்கு வந்தது மாஸ்கோவின் புகழ்பெற்ற ரிஜ்ஸ்கி ரயில் நிலையம்

**மாஸ்கோ, ஏப்.16:**

பெருகிவரும் கடன் மற்றும் சரிந்துவரும் லாபங்களுக்கு மத்தியில் தனது நிதிநிலையை வலுப்படுத்தும் முயற்சியாக, ரஷியாவின் அரசுக்குச் சொந்தமான ரயில்வே நிறுவனமான ரஷ்ய ரயில்வேஸ், மாஸ்கோ நகரின் வரலாற்று சிறப்புமிக்க 'ரிஜ்ஸ்கி ரயில் நிலையத்தை' 4 பில்லியன் ரூபிள் (52.5 மில்லியன்) விலைக்கு, அவித்தோ எனும் இணைய சந்தையில் விற்பனைக்கு அறிவித்துள்ளது.

நீண்ட காலமாக நீண்ட தூர பயணிகள் ரயில் சேவைகளுக்கு பயன்படுத்தப்படாமல் இருக்கும் இந்த ரயில் நிலைய வளாகத்தை, மறுமேம்பாட்டிற்கான ஒரு வாய்ப்பாக இந்த விற்பனை அறிவிப்பு முன்வைக்கிறது.

புதிய நோக்கங்களுக்காக மாற்றி கொள்ளும் சாத்திய கூறுகளை திறந்துவிடுகிறது, என்று அந்நிறுவனம் தனது விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ளது. இந்த செய்தியை முதன்முதலில் ரஷியாவின் அரசு செய்தி நிறுவனமான டாஸ் வெளியிட்டிருந்தது. ரிஷ்ஸ்கி நிலையத்துடன் கூடுதலாக, ரஷிய ரயில்வேஸ் நிறுவனம் மாஸ்கோ நகர வணிக மாவட்டத்தில் உள்ள மாஸ்கோ டவர்ஸ் வானளாவிய கட்டிடத்தை 281 பில்லியன் ரூபிள்கள் (3.7 பில்லியன் டாலர்) என்ற ஆரம்ப விலையில் விற்பனைக்கு வைத்துள்ளது. ரிஷ்ஸ்கி நிலையம் 2021 முதல் புறநகர் ரயில்களுக்கு மட்டுமே சேவை செய்து வருகிறது. பல நீண்ட தூர வழித்தடங்கள் பெலருஸ்கி நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டன, அதே நேரத்தில் லாட்வியாவின் தலைநகரான ரிகாவிற்கான சேவைகள் 2020-ல் கோவிட் பெருந்தொற்றின் போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

# ஈரானுக்கு ராணுவ உதவியா? - சீனா திட்டவட்ட மறுப்பு

**பெய்ஜிங், ஏப்.16:**

ஈரானுக்கு சீனா ராணுவ உதவி செய்வதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியான நிலையில், அதை திட்டவட்டமாக மறுத்துள்ளது சீனா.

கடந்த மார்ச் 28-ம் தேதி, ஈரான் மீது இஸ்ரேல் - அமெரிக்கா இணைந்து தாக்குதலை தொடங்கின. ஒரு மாத காலத்துக்குப் பின்னர் 2 வார தற்காலிக போர் நிறுத்தம் அமலில் இருக்கிறது.

இந்தச் சூழலில், ஈரானுக்கு சீனா ராணுவ உதவி செய்வதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின. அந்தத் தகவலை திட்டவட்டமாக மறுத்துள்ளது சீனா. கூடவே, அதன் அடிப்படையில் அமெரிக்கா வரி விதிப்பில் ஈடுபடுமானால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக, சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "ஈரானுக்கு சீனா ராணுவ ரீதியிலான உதவிகளைச் செய்வதாக பல்வேறு ஊடகங்களிலும் தகவல் வெளியாகியுள்ளன. அந்தத் தகவல்களை அனைத்தும் சித்தரிக்கப்பட்டவை. இதன் அடிப்படையில், சீனா மீதான வரிகளை அமெரிக்கா அதிகப்படுத்தினால், சீனா தக்க பதிலடியைத் தரும்," என்று குறிப்பிட்டுள்ளார்.



முன்னதாக, ஈரான் TEE-01B என்ற சீன செயற்கைக்கோளை வாங்கியுள்ளது. அதன்மூலம் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களை துல்லியமாகக் குறிவைத்து தாக்குதல் நடத்துகிறது என்று ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின. அதனைத் தொடர்ந்து சீன வெளியுறவு அமைச்சகம் இந்த மறுப்பை அவசர அவசரமாகத் தெரிவித்துள்ளது.

முன்னதாக ட்ரம்ப்பிடம், "இரண்டு வார கால தற்காலிக போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி சில நாடுகள் ஈரானுக்கு ஆயுத உதவிகளைச் செய்வதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளனவே?" என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ட்ரம்ப், "அவர்கள் (சீனா) அப்படிச் செய்யக்கூடும் என்ற சந்தேகம் எனக்கும் இருக்கிறது. ஒருவேளை அவர்கள் அவ்வாறு செய்தால், அவர்களுக்கு 50% வரி விதிப்பு நிச்சயம் உண்டு. சீனாவுக்கு மட்டுமல்ல ஈரானுக்கு போரில் உதவும் எவருக்கும் வரி விதிப்புகள் உண்டு" என்று கூறியிருந்தார். இந்நிலையில்தான் சீனாவின் மறுப்பு வெளியாகி முக்கியத்துவம் பெறுகிறது.

# அமெரிக்காவின் தடையை மீறி ஹார்முஸ் ஜலசந்தியை கடந்த சீன கப்பல் - ஈரான் தூதரகம் கிண்டல்

**பெய்ஜிங், ஏப்.16:**

அமெரிக்காவின் தடையை மீறி சீன எரிவாயு கப்பல் நேற்று ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து சென்றது. இது அமெரிக்காவுக்கு விடுக்கப்பட்ட சவாலாக கருதப்படுகிறது.



ஈரானை ஒட்டி அமைந்துள்ள ஹார்முஸ் ஜலசந்தியின் இரு முனைகளிலும் சரக்கு, எண்ணெய் கப்பல் போக்குவரத்தை அமெரிக்க கடற்படை முடக்கி உள்ளது. இந்த சூழலில் அமெரிக்காவின் தடையை மீறி சீனாவின் ரிச்ஸ்டாரி என்ற எரிவாயு கப்பல் நேற்று ஹார்முஸ் ஜலசந்தியை கடந்தது. இதில் 2.5 லட்சம் பேரல் மெத்தனால் நிரப்பப்பட்டு இருந்தது. ஐக்கிய அரபு அமீரகத்தின் துறைமுகத்தில் இருந்து சீன கப்பல் புறப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த சீன கப்பல் ஈரானில் இருந்து தொடர்ச்சியாக எரிவாயுவை நிரப்பிச் சென்றது. இதன்காரணமாக அண்மையில் ரிச் ஸ்டாரி கப்பலுக்கு அமெரிக்க அரசு தடை விதித்தது. ஆனால் அமெரிக்காவின் தடையை மீறி அந்த கப்பல் மேற்கு ஆசியாவில் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. ரிச் ஸ்டாரி நேற்று ஹார்முஸ் ஜலசந்தியை கடந்தபோது, கப்பலின் கேப்டன் அமெரிக்க கடற்படைக்கு முறைப்படி தகவல் தெரிவித்துள்ளார். அமெரிக்க அரசால் தடை விதிக்கப்பட்ட கப்பல் என்றபோதிலும் அந்த கப்பல் தடுத்து நிறுத்தப்படவில்லை. அமெரிக்காவுக்கு சவால் விடுக்கும் வகையில் ஹார்முஸ் ஜலசந்தியை சீன கப்பல் கடந்து சென்றிருப்பதாக சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக கானா நாட்டில் செயல்படும் ஈரான் தூதரகம் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: சீன கப்பல் ஹார்முஸ் ஜலசந்தியை வெற்றிகரமாக கடந்து சென்றுள்ளது. அமெரிக்காவின் மிகப்பெரிய போர்க் கப்பல்கள், சீன கப்பலுக்கு தொடர்ந்து எச்சரிக்கை விடுத்துள்ளன. ஆனால் சீன கப்பலின் கேப்டன் எதையும் கண்டுகொள்ளாமல் ஹார்முஸ் ஜலசந்தியை நிதானமாக கடந்து சென்றுள்ளார்.

அமெரிக்காவுக்கு அஞ்சும் நாடுகளுக்கு மட்டுமே தடை விதிக்கப்பட்டு இருப்பதாகவும் அஞ்சாத நாடுகளுக்கு தடை பொருந்தாது என்றும் சொல்லப்படுகிறது. அமெரிக்காவுக்கு அஞ்சாத நாடுகளின் பட்டியல் மிகவும் நீளமாக இருக்கிறது. இவ்வாறு ஈரான் தூதரகம் கிண்டலடித்துள்ளது.

# ஏவுகணை சோதனை நடத்திய வடகொரியா

**சாம்சங், ஏப்.16:**

வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன் தலைமையில், அந்நாட்டின் அதிநவீன 'சோய் ஹியோன்' என்ற போர்க்கப்பலில் இருந்து ஏவுகணை சோதனைகள் நடத்தப்பட்டன. சுமார் 5 ஆயிரம் டன் எடையுள்ள இந்த பிரம்மாண்ட போர்க்கப்பலில் இருந்து, அணு ஆயுதங்களைச் சுமந்து சென்று தாக்கும் திறன் கொண்ட 2 அதிநவீன 'குரூஸ்' ஏவுகணைகளும், கப்பல்களைத் தாக்கி அழிக்கும் 3 ஏவுகணைகளும் ஏவப்பட்டன. குரூஸ் ஏவுகணைகள் தொடர்ந்து 2 மணி நேரத்திற்கும் மேலாக வானில் பறந்து மேற்கு கடல் பகுதியில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கி அழித்ததாக வடகொரிய அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



இந்த சோதனையை நேரில் பார்வையிட்ட வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன், தனது கடற்படையின் அணு ஆயுதத் திறனை எல்லையற்ற வகையில் விரிவாக்கம் செய்யப்போவதாகத் தெரிவித்தார். மேலும், தற்போது கட்டுமானத்தில் உள்ள 3 மற்றும் 4-வது போர் ரகக் கப்பல்களுக்கான ஆயுதத் திட்டங்களையும் அவர் ஆய்வு செய்தார். இந்த நவீன கப்பல்கள் ரஷ்யாவின் உதவியுடன் கட்டப்பட்டிருக்கலாம் என்று தென்கொரிய ராணுவ நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர். மேற்காசியாவில் நிலவும் போரால் போர் பதற்றம் சர்வதேச அளவில் அதிகரித்துள்ள நிலையில், வடகொரியா திடீரென இந்த ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது.

# பாகிஸ்தான் மருத்துவமனையில் ஊசியை மீண்டும் பயன்படுத்தியதால் 331 குழந்தைகளுக்கு எச்ஐவி தொற்று

**இஸ்லாமாபாத், ஏப்.16:**

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலம் தவுன்சா நகரில் அரசு வட்டார மருத்துவமனை உள்ளது. இதில் 'பிபிசி நியூஸ்' நடத்திய ஒரு ரகசிய ஆய்வில் குழந்தைகளுக்கு ஊசிகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல், ஒரே மருத்துவ சாதனத்தை பல நோயாளிகளுக்கு பயன்படுத்துதல் என பல்வேறு பாதுகாப்பற்ற நடைமுறைகளை அம்பலப்படுத்தியுள்ளது. இதுவே எச்ஐவி பரவலுக்கும் வழிவகுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.




தவுன்சாவில் 8 வயது சிறுவன் எச்ஐவி தொற்று உறுதி செய்யப்பட்ட சிறிது நேரத்திலேயே உயிரிழந்தான். இறுதி நாட்களில், அவன் அனுபவித்த தீவிர துன்பத்தை சிறுவனின் தாயார் நினைவு கூர்ந்தார். சிறுவனுக்கு எச்ஐவி இருப்பது கண்டறியப்பட்ட சிறிது காலத்திலேயே, அவன் சகோதரி அஸ்மாவுக்கும் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த மருத்துவமனையில் வழக்கமான சிகிச்சையின் போது செலுத்தப்பட்ட அசுத்தமான ஊசிகள் மூலம் இரு குழந்தைகளுக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டதாக அவர்களது குடும்பத்தினர் நம்புகின்றனர். 2024-ம் ஆண்டின் பிற்பகுதியில், உள்ளூர் மருத்துவர் குல் கைஸ்ரானி தனது மருத்துவமனைக்கு வரும் குழந்தைகளிடையே எச்ஐவி பாதிப்புகள் வழக்கத்துக்கு மாறாக அதிகரித்ததை கவனித்தபோது இந்த தொற்றுப் பரவல் முதன்முதலில் வெளிச்சத்துக்கு வந்தது. பிபிசி நடத்திய புலனாய்வில் 2024 நவம்பர் முதல் 2025 அக்டோபர் வரையிலான காலகட்டத்தில், தவுன்சாவில் குறைந்தது 331 குழந்தைகளுக்கு எச்ஐவி தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இந்தத் தொற்றுகளில் பல பாதுகாப்பற்ற ஊசி போடும் முறைகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன. இதனிடையே, தங்கள் மீதான புகார்களை மருத்துவமனை அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

# அந்தமான் கடலில் கவிழ்ந்த ரோஹிங்கியா அகதிகள் படகு! 250 பேரின் நிலை என்ன?



**டெக்னாப், ஏப்.16:**

அந்தமான் கடல் பகுதியில், ரோஹிங்கியா அகதிகள் மற்றும் வங்கதேச நாட்டினர் உள்பட சுமார் 250-க்கும் அதிகமானோர் சென்ற படகு கவிழ்ந்து மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கதேசத்தின் டெக்னாஃப் நகரத்தில் இருந்து கடந்த ஏப். 4 அன்று சுமார் 280 ரோஹிங்கியா மற்றும் வங்கதேச அகதிகள் பயணித்த படகு ஒன்று மலேசியாவை நோக்கிச் சென்றுக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, அந்தமான் கடல்பகுதியில் வீசிய பலத்த காற்று மற்றும் ராட்சத அலைகளில் சிக்கி அந்தப் படகு நடுக்கடலில் கவிழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, வங்கதேச கடலோரக் காவல்படையின் எம்.டி. மேக்னா பிரைட் எனும் கப்பல் மூலம் சுமார் 36 மணிநேரத்துக்குப் பிறகு ஏராளமான அகதிகள் மீட்கப்பட்டதாகவும், இந்தோனேசியா சென்ற மற்றொரு அகதிகள் படகு கடலில் தத்தளித்த ஒரு பெண் உள்பட 9 பேரை மீட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அந்தக் கப்பலில் பயணித்து மாயமான குழந்தைகள் மற்றும் பெண்கள் உள்பட சுமார் 250 பேரைத் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும், இந்த மீட்புப் பணிகள் குறித்து இதுவரை எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை.

முன்னதாக, மியான்மர் நாட்டின் சிறுபான்மையின ரோஹிங்கியா மக்களுக்கு எதிராக அந்நாட்டு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதனால், ஏராளமான ரோஹிங்கியா மக்கள் இந்தியா, வங்கதேசம் உள்ளிட்ட அண்டை நாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

மேலும், கடந்த 2025 ஆம் ஆண்டு மியான்மர் கடல்பகுதியில் நடைபெற்ற 2 வெவ்வேறு படகு விபத்துகளில் சுமார் 427 ரோஹிங்கியா அகதிகள் பலியானதாக, ஐ.நா. அகதிகள் ஆணையம் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# எங்களை சரணடைய வைக்க முயல்வது தோல்வியையே தரும்: ஈரான் அதிபர் திட்டவட்டம்

**தெஹ்ரான், ஏப்.16:**

மேற்கு ஆசியாவில் பதற்றம் நீடிக்கும் நிலையில், ஈரான் அரசு மீது பலத்தைப் பிரயோகிக்கும் எந்தவொரு முயற்சியும் இறுதியில் தோல்வியடையும் என்று அந்நாட்டின் அதிபர் மசூத் பெசஷ்கியான் திட்டவட்டமாகக் கூறினார்.

இஸ்லாமாபாத்தில் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை முட்டுக்கட்டையில் முடிந்ததைத் தொடர்ந்து, அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை விரைவில் நடைபெற வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதே நேரத்தில், கடந்த இரு நாட்களாக ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்கப் படைகள் முற்றுகையிட்டு வருகின்றன.



இந்தச் சூழலில் ஈரான் அரசு ஊடகமான ஐஎஸ்என்ஏ-வில் ஈரான் அதிபர் மசூத் பெசஷ்கியான் வெளியிட்ட அறிக்கையில், "நாங்கள் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையை வலியுறுத்துகிறோம். ஆனால் சரணடைய நிர்பந்திப்பதை ஏற்க மாட்டோம். ஈரானை சரணடைய வைக்கவோ அல்லது ஈரான் மீது பலத்தை திணிக்கும் எந்தவொரு முயற்சியும் தோல்வியடையும். மக்களும் அத்தகைய அணுகுமுறையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஈரான் ஒருபோதும் போரை நாடவில்லை

எங்கள் நாட்டின் மீதான தாக்குதல் எந்த அதிகாரத்தின் பேரில், எந்தக் காரணத்துக்காக நடத்தப்பட்டது? சர்வதேச சட்டம் மற்றும் மனிதாபிமானக் கொள்கைகளின் அடிப்படையில் பொதுமக்கள், குழந்தைகள் ஆகியோரைக் குறிவைத்து தாக்கவும், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் உள்ளிட்ட முக்கிய மையங்களை அழிப்பதற்கும் என்ன நியாயம் இருக்கிறது?" என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தின. இதற்கு பதிலடி தரும் வகையில் வளைகுடாவில் உள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகள் மற்றும் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்த நிலையில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே போர் நிறுத்தம் செய்ய பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்தது. இதனால் 2 வார காலம் இடைக்கால போர் நிறுத்தம் அமலானது.

இந்த போர் நிறுத்தம் 21-ம் தேதியுடன் முடிகிறது. அதற்குள் நிரந்தர போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட பல்வேறு தரப்பினர் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதன்படி, கடந்த சனிக்கிழமை பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்கா, ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இது தோல்வியடைந்தது. இதையடுத்து ஹார்முஸ் ஜலசந்தியை முடக்குவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார். இதனால் மேற்காசியாவில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

# இன்று நாடாளுமன்றம் கூடுகிறது






# நாகர்கோவிலில் பிரதமர் மோடி வாகன பேரணி

# ராமேசுவரம் மீனவர்கள் 4 பேர் இலங்கை கடற்படையால் கைது

# ரூ. 8,000 கூப்பன் மாதிரிகளை வழங்கினால் நடவடிக்கை: தேர்தல் ஆணையம்

# திருப்பதி: ஓராண்டில் 13.95 கோடி லட்டுகள் விற்பனை

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

16.04.2026 வியாழக்கிழமை

இலவச இ-பேப்பர்